ஜூன் 11 - ஜூன் 17 / 2014

# சுடர் ஒளி

பக்கம் 24 வாராந்த சஞ்சிகை விலை 30/-



# எரித்திரியாவில் வான் புலிகள் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ அக்கினி குமரன்

# வாயால் கெட்ட நுணல்

வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனால் தவற விடப்பட்ட சந்தர்ப்பத்தை யாழ்ப்பாண மாநகர முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா நன்றாகவே பயன்படுத்திக் கொண்டார். அந்தச் சந்தர்ப்பமே அவரைச் சிக்கலிலும் மாட்டி விட்டது. மோடியின் பதவியேற்பு விழாவில் திடீரென அடித்த அதிர்ஷ்டத்தால், ஜனாதிபதியுடன் சென்ற யாழ்.மாநகர மேயர் அங்கு என்.டி.ரீ.வி. என்ற தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டி பெரும் சிக்கலில் மாட்டிவிட்டுள்ளது.

அந்த நேர்காணலில் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த மாநகர மேயர்,

" 13 ஆம் திருத்தம் பற்றியும், மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றியும் இலங்கை ஜனாதிபதியிடம் இந்தியப்பிரதமர் மோடி கலந்துரையாடினார்" என்ற விடயத்தைப் போட்டுடைத்தார். ஆனால் இப்படி ஒரு விடயம் கலந்துரையாடப்பட்டதை ஜனாதிபதியின் ஊடகப்பிரிவும், அரச ஊடகங்களும் கவனமாக இருட்டடிப்புச் செய்திருந்தன. வெறுமனே அபிவிருத்தி பற்றியும், மீனவர் பிரச்சினை பற்றியுமே ஆராயப்பட்டதாக இலங்கை அரசு அறிவித்த நிலையில், இனப்பிரச் சினைக்கான தீர்வு பற்றியும் ஆலோசிக்கப்பட்ட ரகசியத்தை வெள்ளாந்தியாக யாழ்.மாநகர மேயர் போட்டுடைத்து விட்டார்.

இப்போது நிலைமை சிக்கலானவுடன் " இந்தியாவில் நான் பதற்றத்தில் தடுமாறி கருத்துக்களை வெளியிட்டுவிட்டேன்.அந்த வீடியோவை மீண்டும் ஒரு முறை பார்த்து விட்டு தான் அதைப்பற்றி என்னால் விளக்கமளிக்க முடியும்" என்று மேயர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இவரின் பதற்றத்தையோ , தடுமாற்றத்தையோ கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகைகள் பொருட்படுத்தவில்லை. அந்தச் செய்தியைப் போட்டு ஒரு பிடி பிடித்துவிட்டன. யாழ்.மாநகர மேயரை இந்தியாவுக்கு கூட்டிச் சென்றமை பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கு பிடித்த கதையாக மாறி விட்டதாக அரச தரப்பிலிருந்து கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.மேயரைப் பொறுத்த வரையும் கூட அதே நிலை தான்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவின் மனதைக் குளிரவைப்பதற்காக அவரோடு சென்ற குழுவில் ஒருவராக இணைந்த திருமதி யோகேஸ்வரி இப்போது ஜனாதிபதியின் கோபப் பார்வைக்கு உட்பட வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் கலந்துகொள்ளும் முகமாக ஜனாதிபதியின் தலைமையில் செல்லும் குழுவில் இணைந்து கொள்ள வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கே முதலில் அரச தரப்பால் அழைப்பு விடுக்கப்பட்டது. அந்தக்குழுவில் அவர் இணைந்து கொண்டால் வட மாகாண சபைக்கும் மத்திய அரசுக்கும் நல்லுறவு நிலவுவதாகவும் , வடமாகாண சபை இயல்பாக இயங்குவதாகவும் ஒரு மாயதோற்றப்பாட்டைக் காட்ட இலங்கை முயல்கிறது என்பதைப் புரிந்து கொண்ட வடக்கு முதல்வர் அந்த அழைப்பை நிராகரித்து விட்டார்.

அந்த நிராகரிப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தி விட்டது. வாக்கு முதலமைச்சர் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரிய ஒரு சந்தர்ப்பத்தைத் தவற விட்டு விட்டதாகவும் நரேந்திர மோடியிடம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தெரிவிக்கும் சந்தர்ப்பத்தை இழந்து விட்டதாகவும் குமுறினார்.

ஆனால் உண்மை என்னவெனில் இலங்கையில் அரசுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே நல்லுறவு நிலவுவதாக ஜனாதிபதி இந்திய பிரதமருக்குக் காட்ட முயன்ற ஒரு திட்டமிட்ட சதியை முதலமைச்சர் வெற்றிகரமாக முறியடித்து விட்டார்.

ஜனாதிபதியின் அந்த நோக்கத்தை நிறைவேற்றி அவரை அகங் குளிரவைக்க அமைச்சர் டக்ளஸ் புறப்பட்டிருக்கலாம்.

ஆனால் அது சாத்தியமில்லை. ஏனெனில் இந்தியாவில் அமைச்சர் டக்ளஸ் ஒரு தேடப்படும் குற்றவாளி. அவர் அங்கு போய் இறங்கியதுமே கைது செய்யப்படலாம். அல்லது ராஜதந்திர காரணங்களுக்காக கைது செய்யப்படாமல் விமான நிலையத்தில் வைத்தே திருப்பி அனுப்பப்படலாம். இப்படியான நிலையில்தான் மலையக மக்களின் சார்பில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானும் , தமிழ் மக்கள் சார்பில் மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

பதவியேற்பின் பின்பு இந்தக்குழுவினருக்கும், பிரதமர் நரேந்திர மோடிக்குமிடையே பேச்சுக்கள் இடம்பெற்றன. அதில் வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜூம் கலந்து கொண்டார்.

அந்தச் சந்திப்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கு - கிழக்கு பகுதிகளில் போரின் பின்னரான அபிவிருத்தி , புனர்வாழ்வு , புனர் நிர்மாணம் என வழமையான தனது பல்லவியைப் பாடினார். ஆனால் இந்தியப் பிரதமர் மோடியோ, ஜனாதிபதியிடம் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது பற்றியும் அதற்கு மேலதிகமாகவும் அதிகாரப் பகிர்வு மேற்கொள்வது பற்றியும் , இலங்கை ,இந்திய மீனவர் பிரச்சினைக்கு ஒரு நிலையான தீர்வு ஏற்படுத்துவது பற்றியும் வலியுறுத்தினார்.

ஆனால் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு பிரதமர் மோடியின் வலியுறுத்தல்கள் பற்றி எந்தவொரு செய்தியையும் வெளியிடவில்லை. இந்த நிலையில் தான் அரச தரப்பு வெகு சிரத்தையோடு மறைத்த இந்த விடயங்களை யாழ். மாநகர மேயர் 'ரீ.வி'க்கு பேட்டி கொடுக்கும் புளுகத்தில் உளறிவிட்டார்.

இதற்கு அரச தரப்பிலிருந்து பல முனைகளிலும் கண்டனங்கள் எழுந்தன. தடுமாறித் தவித்த மேயர், தான் பதற்றத்தில் கூறி விட்டதாக சொல்லித் தப்பிக்கப் பார்த்தார்.

அப்படியானால் அவர் இந்தியா செல்லு முன்பு "முதலமைச்சர் விக்னேஸ்வரன் சந்தர்ப்பத்தை தவற விட்டு விட்டார்" எனக் கூறியதும் பதற்றத்தில் தானோ தெரியவில்லை .

எப்படி இருப்பினும் ஜனாதிபதியை மகிழ்விக்கக் கிடைத்த ஒரு அரிய சந்தர்ப்பத்தை சில உண்மைகளை வெளியிட்டு விட்டதால் தவற விட்டு விட்டார் மாநகர மேயர்.

இப்படி நடந்தவற்றை வெளியே சொல்லக் கூட முடியாத ஒரு அடிமைகள் குழுவில் வடமாகாண முதலமைச்சர் கலந்து கொள்ளாமல் வாய்ப்பைத் தவறவிட்டதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், மேயர் யோகேஸ்வரியும் கண்டனம் செய்தது எவ்வளவு பெரிய தவறு என்று இப்போதாவது அவர்களது மனச்சாட்சி சொல்லியிருக்கும்.



## அகரத்துக்கு பரிசு

ஈழத்து குறும்பட பெண் இயக்குநர் வனிதா சேனாதிராஜாவின் "அகரம்" குறும்படம் சுற்றுச்சூழல் தினப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.


சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருத்தல் என்ற கருப்பொருளில் உருவாக்கப்பட்ட இந்தக் குறும்படம் தாத்தா, பேரன் ஆகிய இரண்டு பாத்திரங்களை மட்டுமே மையமாகக்கொண்டு கட்டமைக்கப்பட்ட டுள்ளது.

வசனங்கள் ஏதுமின்றி காட்சிப் படிமங்கள் ஊடாகவே நகர்த்தப்பட்ட அகரம் குறும்படம் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு இலங்கை அரசு நடத்திய போட்டி யில் இறுதிச் சுற்றுக்கு முன்னேறி 3 ஆம் இடத்தை தன தாக்கியிருக்கிறது. இந்தப்போட்டியில் தமிழ் மொழி மூல குறும்படப் பிரிவின் கலந்து கொண்ட ஒரேயொரு பெண் இயக்குநர் அகரம் படத்தின் இயக்குநர் வனிதா சேனாதிராஜா என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூனிய வளையமா நச்சு வளையமா ?

ஓடுகாலி



கலைப்படைப்பென்பது காலத்தின் கண்ணாடி என்று காது புளிக்கும் வரை எல்லோரும் சொன்னாலும் கூட, காலத்தையும் , யதார்த்தத்தையும் தூர எறிந்துவிட்டும் ஏராளமான படைப்புகள் வந்தபடிதான் இருக்கின்றன. மிக அண்மையில் பார்க்க நேர்ந்த ஒரு குறுந்திரைப்படம் மிகப்பெரிய அதிர்வுகளைப் பார்ப்போரிடத்தே உண்டாக்கியிருந்தது. எதை வேண்டுமானாலும் திரையில் வாந்தியெடுத்து விட்டு அதைக் கலைப்படைப்பெனச் சொல்லும் போக்குக்கு இந்தக் குறுந்திரைப்படம் மிகச் சிறந்த உதாரணம். படத்தின் பெயர் 'சூனிய வளையம்'. இயக்கியிருப்பவர் மகிழ்தரன்.

முதல் காட்சியில் அமெரிக்காவில் கைதிகளை விசாரிக்கும் இடம் போன்ற சாயலில், ஒருமேசையின் மேலே மின் விளக்கு ஒளிர அந்த மேசையில் படுத்திருக்கிறான் ஒருவன். கைதி. ஆனால் கையில் விலங்கில்லை. கைவிலங்கில்லாமல், மிகக் கண்ணியமாக . மேசையில் இருத்தி, கிளாஸில் தண்ணீர் கொடுத்து " ஏன் அப்படிச் செய்தாய்?" என்று அதிகாரி ஒருவர் பவ்வியமாகக் கேட்கும் அதிசயமான விசாரணைப்படலம். பிறகென்ன? டொட்டொடய்ங்... என்று இசை இழுத்துச் செல்ல அந்தக் கைதியின் நினைவுகள் பின்னோக்கிப் பயணிக்கின்றன. காதலனோடு ஊர் சுற்றி உலா வரும் பெண் ஒருத்தி, ஒருநாள் அவனோடு விடுதி ஒன்றுக்கு சென்று உடலுறவு கொள்கிறாள். அதன் பின்பு அவள் இரத்ததானம் செய்யச் சென்றபோது, அவளுக்கு 'எச்.ஐ.வி' தொற்று ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கபடுகிறது.

உலகின் மிகக் கொடிய வியாதியான எய்ட்ஸ் , ஒரு பெண்ணுக்கு இருப்பதைக் கண்டறிந்ததும் எந்தப் பதற்றமும் இல்லாமல், பாட்டி வடை சுட்ட கதை போல ஆறுதலாகப் போனில் சொல்வ தோடு வைத்தியசாலை நிர்வாகம் ஒதுங்கி யும் விடுகிறது. இது இன்னொரு அதிசயம் தான். ஏனெனில் எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக தனிமைப்படுத்தி, தவறான முடிவுகளை எடுக்காதவாறு ஆற்றுப்படுத்தி, அவர்கள் யாருடனெல்லாம் தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்றுஅறிந்து, அவர்களுக்கும் அந்த நோய்த்தொற்று உண்டா எனப் பரிசோதித்து , உயர் சிகிச்சை வழங்குவதே வைத்தியசாலை நடைமுறை. ஆனால் படத்தின் வசதிக்காக அந்த ஆய்க்கினையெல்லாம் நாயகிக்கு இயக்குநர் கொடுக்கவில்லை. அவள் வழமை போல சுதந்திரமாக நடமாடுகிறாள். ரயிலில் தற்கொலை செய்ய நினைக்கிறாள் அப்போது அவள் ரயிலைப் பார்ப்பதை வைத்தே அந்தப் பெண் தற்கொலை செய்யத்தான் நிற்கிறாள் என்பதைக் கண்டுபிடிக்கும் ஒருவன், அவள் வேதனைக்கு தன்னால் தீர்வு தர முடியும் என அழைத்துச் செல்கிறான்.

தியான மண்டபம் போன்ற இடத்தில் வெள்ளையுடையோடு பலர் இருக்க , இவளும் வெள்ளையுடை பூண்டு, அந்தக் கும்பலில் ஒருத்தியாகிறாள். இவளை அழைத்துச் சென்றவனே கும்பலின் தலைவன். தலைவனின் போதனையின் பின் எல்லோரும் புறப்படுகிறார்கள். அந்தப் பெண், காதலனோடு கதைத்து விட்டு வீடு செல்லும் மாணவியைப் பின் தொடர்கிறாள். ஒரு இடத்தில் அவளை மயக்கமடைய வைத்து , அவளின் குருதியோடு தன் குருதியைக் கலக்கச் செய்து விட்டு (எய்ட்ஸை பரப்புகிறாளாம்) சென்று விடுகிறாள்.

அதேபோல இந்த வெள்ளையுடைக் கும்பலில் இருக்கும் ஒரு மாணவன் கொஞ்சம் பெண்ணியல்பு கொண்டவன். அதனால் சக மாணவர்கள் அவனைக் கிண்டல் செய்கிறார்கள் உடனேயே அவர்களை துப்பாக்கியை எடுத்து போட்டுத் தள்ளி விடுகிறான் அந்த மாணவன். ( அந்த துப்பாக்கி எப்படி வந்தது? யார் கொடுத்தார்கள்? அதுவும் இலங்கையில் மாணவன் ஒருவன் துப்பாக்கியை வைத்திருப்பது சாத்தியமா? என்ற மண்ணாங்கட்டிக் கேள்வியெல்லாம் இதன் போது எவருக்கும் எழவே மாட்டாது என்று இயக்குநர் நம்பியிருக்கிறார் போலும்)

அதன் பின்பே கும்பலின் தலைவன் பிடிக்கப்பட்டு, இப்போது விசாரிக்கப்படுகிறான். இடையில் விசாரணை அதிகாரிகள் வெளியே செல்ல, கிளாஸ் உடையும் சத்தம். ஓடிச் சென்று பார்த்தால் கிளாஸை உடைத்து, கழுத்தை அறுத்து தற்கொலை செய்த நிலையில் வெள்ளையுடைக் கும்பலின் தலைவன்.

இதுதான் சூனிய வளையத்தின் கதை. படம் தொடங்கியது முதல் முடியும் வரை நச்சுக் கருத்துக்களை விதைத்திருக்கிறார் இயக்குநர். சமூகப்பொறுப்புணர்வை மறந்துவிட்டு, தன் மனம் போன போக்கில் கதையை நகர்த்தியிருக்கிறார். தனது தவறால் எய்ட்ஸ் நோயால் பாதிப்புற்ற பெண்ணொருத்தி, அப்பாவி மாணவிக்கு அந்த நோயைப் பரப்புபதுதான் தீர்வா? என்னே ஒரு வக்கிரம். கொலைக்கு கொலை என்பது போல எய்ட்ஸுக்கு எய்ட்ஸ். அதுவும் அப்பாவிகள் மீது வக்கிரம் தீர்க்கும் ஒருவித மனநோய்.

அத்தோடு பெண்ணியல்பு கொண்ட மாணவனும் தன்னைக் கிண்டல் செய்த நண்பர்களை துப்பாக்கியால் சுட்டுக் கொல்வது எந்தளவு தூரம் நியாயம்? வழக்கமாகவே மாணவர்களிடத்தே சக மாணவர்களைக் கிண்டலடிக்கும் பழக்கம் இருக்கத்தான் செய்கிறது. அது வயதுக்குரிய இயல்பு. ஆனால் அதற்கு அவர்களைக் கொல்வது தான் சூனிய வளையம் இயக்குநரின் தீர்ப்பாக இருக்கிறது.

ஆக மொத்தத்தில் எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்கள் அதைப் பிறருக்கு பரப்புவதையும், கிண்டலடிப்பவர்களைச் சுட்டுக் கொல்வதையுமே தீர்வாகக் கொள்வார்களானால் உலகம் முழுதும் எய்ட்ஸ் நோயாளிகளின் கூடாரமாகவும், காலப்போக்கில் யாருமற்ற கிரகமாகவும் மாறிவிடும்.

கலைப்படைப்புகள் சமூகத்தின் மத்தியில் கருத்துவிதைப்புச் சாதனங்களாகச் செயற்படுகின்றன. ஆனால் இது போன்ற கருத்துக்கள் விதைக்கப்பட்டால் ஏற்கனவே போரால் சிதைந்து போயுள்ள நம்மினம் இன்னும் படுகுழியில் வீழவேண்டியிருக்கும். இந்தப் படத்தைப் பார்த்தபோதுதான் குறும்படங்களுக்கும் தணிக்கை கட்டாயம் தேவைதான் போலும் என்ற எண்ணம் தோன்றுகிறது. உண்மையில் தணிக்கை என்பது கருத்து சுதந்திரத்தில் கை வைக்கும் வேலை தான். என்றாலும் சமூகத்திடையே குரூரமான அல்லது குருட்டாம் போக்கான கருத்துத் திணிப்புகளை மேற்கொள்ளும் படைப்புகள் ஏற்படுத்தும் தாக்கத்தை விடவும் தணிக்கை மேலானது தான்.

எங்களிடையே ஆயிரம் கதைகள் கொட்டிக் கிடக்கின்றன. போர் தின்ற வாழ்வு பற்றியே லட்சம் கதைகள். அவையெல்லாம் எங்கள் கண் முன்னே நிகழ்ந்தவை. அதையெல்லாம் விட்டு விட்டு . யதார்த்தம் மறந்த, சமூக விரோதக் கருத்துக்களை விதைக்கும் இது போன்ற படைப்புகளைத் தான் நாம் கொண்டாடப் போகிறோமா?

அதைத்தான் சமூகமும் காலமும் நம் படைப்பாளிகளிடம் எதிர்பார்க்கின்றதா?

---

## வே.முல்லைத் தீபனின்
## கடவுளிடம் சில கேள்விகள்
## கவி நூல் ஒரு பார்வை

வன்னியூர் செந்தூரன்




முல்லை மண் அரிய பல படைப்பாளர்களை ஈன்றெடுத்துள்ளது.

முல்லை மண் தந்த முல்லையூரான் என்பவரே முதன் முதல் "முல்லை" என்பதனை தன் புனைபெயரில் இணைந்திருந்தார். பின் வந்த முல்லை முஸ்ரிபா , முல்லை மணி, முல்லை அமுதன், முல்லைக் கோணேஸ், முல்லை வேந்தன் போன்ற நாடறிந்த எழுத்தாளர்களினூடே இலக்கியத் தடத்தில் பதிவிட்டு வரும் துடிப்புள்ள இளம் , படைப்பாளியே வே.முல்லைத் தீபன்.

பிறப்பிலிருந்து இன்று வரை முல்லைத் தீவை வதிவிடமாகக் கொண்ட அவர், தான் பட்ட வலிகளையும் , வேதனைகளையும் முன் வைத்து. அவற்றை தனி மனிதனையும் தாண்டிய சமூகப் பிரச்சினையாக உருவகித்து அண்மையில் "கடவுளிடம் சில கேள்விகள்" எனும் கவிதைத் தொகுப்பை வெளியிட்டிருக்கிறார். இது அவரின் இரண்டாவது கவிதைத் தொகுதி.

வேதனையும், விரக்தியும் வெகுண்டெழும் போது தான் கடவுளை நோக்கி கேள்வி கேட்பதாக தன்னுரையில் குறிப்பிடுகிறார் முல்லைத்தீபன். 75 பக்கங்களைக் கொண்ட இந்தக் கவிதைத் தொகுப்பில் 25 கவிதைகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இதில் 13 கவிதைகளின் முடிவில் கருத்தோவியமாக கேள்விக்குறி இடப்பட்டிருக்கிறது. இந்தக் கவிதைகள் கேள்விக் குறியினாலேயே முடிக்கப்பட்டிருக்கின்றன. இந்தத்தொகுதியின் சிறப்பே வாசகரிடம் எழுத்தாளன் கேள்வி கேட்பதுதான். பதிலை வாசகனே தேடிக் கொள்ளட்டும். அப்பொழுதே சமூகத்தில் ஒரு விழிப்பு ஏற்படும் என்பது இவரது வாதம். விடைகள் ஆளாளுக்கு வேறுபடலாம். ஆனால் நிச்சயம் கேள்விக்கான விடைகள் தேடப்படும். அதுவே இந்தப் படைப்பின் வெற்றியாகும்.

இந்தக் "கடவுளிடம் சில கேள்விகள்" எனும் கவிதைத் தொகுப்பு சமாதானத்துக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டிருப்பதும் , கடவுளை நோக்கி கேள்விக்கணைகள் தொடுக்கப்படுவதும், இனியும் ஒரு போர் வேண்டாம் என்பதையே தெளிவுபடுத்துக்கின்றன.

முதற் கவிதையே இவ்வாறு தொடங்குகிறது

*"வாழ்க்கை என்றால்*
*என்னவென்று தெரிந்திடவே*
*வாழ்நாள் முடிந்து போகிறது*
*இப்படி இருக்கையில்...*
*எப்படித் தான் வாழ்க்கை*
*முழுமையடைவது...?"*

இவ்வாறு வாழ்வின் முழுமையில் தர்க்கிக்கிறார். இது எல்லோர் மனதிலும் தோன்றும் ஒரு எண்ணப்பாடே. இருப்பினும் புதுக்கவி வடிவில் சொல்லும் போது இரசனை மேலொங்குகிறது அல்லவா...?

"ஏமாற்றம்" எனத் தலைப்பிடப்பட்ட கவிதை இவ்வாறு நிறைவடைகிறது.

*"தன்னோடிருக்கும் மலரினைக் கொய்ய*
*ஆவலாக பலரிருப்பார் - ஆனால்*
*அப்பொழுதிலேற்படும் வலிதனையுணர*
*ஆயிரத்தில் ஒருவரேயிருப்பர்.."*

மேற்கண்ட வரிகள் சில யதார்த்தங்களை நிறுவுகின்றன. இது காதல் சம்பந்தப்பட்ட விடயமாகவும் இருக்கலாம். அல்லது போர்க் கால காவுகளில் பிள்ளைகளை பறிகொடுத்த பெற்றாரின் மன நிலையாகவும் இருக்கலாம்.எது எப்படியோ மலரைப் பறி கொடுத்த மனதின் ஏமாற்றத்தை அழகாகப் படம் பிடித்துள்ளார் தீபன்.

மேலதிக படிப்பறிவிருந்தும் தகுதியான வேலையில்லாதவனின் மனநிலையை "வாலிப வேதனை" எனும் தலைப்பிட்ட கவிதையில்...

*காலங்கள் கூடவே*
*கோலங்கள் கரையுது*
*கேவலங்கள் கண்டுமே*
*கோவணங்கள் கழருது*

என்று ஆதங்கத்தோடு பதிவு செய்துள் ளார். மேலும் "கடவுளிடம் சில கேள்விகள்" யதார்த்தமாக மிகவும் ஆத்திரத்துடன் கேட்கப்பட்டிருக்கின்றன.

*ஆதியும் அந்தமுமில்லாத*
*அரும்பெரும் சோதியே- நீ*
*இருக்கிறாய் என்றால்*
*அந்த இடருக்குள் எங்கு போனாய்....?*

இந்தக் கவிதையில் பதினொரு கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. அதன் இறுதிக் கேள்வி இதுதான் -

*"மரணத்தின் பின்னெம்மை*
*விசாரணை செய்!*
*ஆனால்........*
*கருக்கொண்ட சிசுவும்*
*பகுத்தறிவில்லா உசிரும்*
*என்ன பாவம் செய்ததையா.....?"*

இவ்வாறு அனைத்தும் கடந்த கடவுளிடம் தனது விரக்தியின் விளிம்பில் நின்று வினவியுள்ளார் கவிஞர்.

சமூகத்தின் பல கோணங்களில் நின்று கவி புனைந்தவர் தனது "சுயதரிதையை" கவிதையாக்கியுள்ளார். இறுதியாக தனது கவிதைக்கு "தலைப்பேயில்லை" என தலைப்பிட்டு எதையோ கூற முற்படுகிறார். அது தலைப்பில்லாத கவிதையாகவே அமைந்துள்ளது. பாடுபொருளை வாசகர் புரிந்திடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதவை மூடிய முதலமைச்சர்



ஆசாத்

அண்மையில் ஒரு அறிவித்தல்

'இனி வருங்காலத்தில் முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் இடம் பெறும் பிரமுகர்கள் சந்திப்பின் போது அவற்றை அவதானிக்க ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். சம்பவம் நடந்து ஒரு மணி நேரத்திற்குள் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பான அறிக்கை ஊடகவியலாளர்களுக்கு கையளிக்கப்படும்'

இது வடமாகாண சபையின் முதலமைச்சரும், முன்னாள் நீதியரசருமான சி.வி. விக்னேஸ்வரன் மாகாணசபையின் சார்பில் கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ள அறிவித்தல்.

இந்த முடிவுக்குக் கூறப்பட்ட காரணம் முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் ஊடகவியலாளர்களை அனுமதிக்க இடம் பற்றாக் குறை என்பதுதான். மாதாந்தம் பெரும் வாடகை செலுத்தும் ஒரு கட்டடம் ஊடகவியலாளர்களைக் கண்டதும் சுருங்கி விழுந்தது போலும்.

எப்படியிருப்பினும் இனி வரும் நாள்களில் ஊடகங்கள் முதலமைச்சர் தரும் அறிக்கைகளை வெளியிடும் வர்த்தமானிகள் போல செயற்பட வேண்டும் என்பதே இந்த அறிக்கையின் எதிர்பார்ப்பாகும்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுவதற்கு எதிராகச் செயற்படுவதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் அமோக ஆதரவுடன் மாகாண சபை அதிகாரத்துக்குத் தெரிவு செய்யப்பட்டது.

மக்களின் ஜனநாயக உரிமைகளில் ஊடக சுதந்திரம் மிக மிக முக்கியமானது ஆட்சியாளர்களோ, அதிகார பீடங்களோ தவறு செய்யும் போது மக்களின் குரலாக எழுந்து அவற்றைச் சுட்டிக் காட்டி சரியான வழிமுறைக்குக் கொண்டு வர வைப்பது ஊடகங்களே. "வோட்டர் கேற்" ஊழலை வெளியே கொண்டு வந்து பெரும் சக்தி படைத்த அமெரிக்க அதிபர் நிக்சனையே பதவியிறக்கியது ஊடகங்கள்தான். இலங்கையில் லேக்ஹவுஸ் நிறுவனத்தைச் தேசிய மயமாக்கிட எடுத்த முயற்சிதான் பண்டாரநாயக்க அரசை வீட்டுக்கு அனுப்பியது என்பதையும் மறந்து விட முடியாது.

இப்படியாக ஊடகங்கள் உலகம் முழுவதும் தம் உரிமையை வெளிக்காட்டியுள்ளன. அதற்காக எத்தனையோ ஊடகவியலாளர்கள் தம் உயிர்களைக்கூடத் தியாகம் செய்துள்ளனர். சிறைகளில் வாடுகின்றனர். காணாமற் போயுள்ளனர். மோதல்களில் நடுவே அகப்பட்டு உயிரையும் இழந்திருக்கின்றனர்.

எல்லாவற்றையும் விட இலங்கையில் முரண்பட்டும் . மோதிக் கொண்டும் பிரிந்து கிடந்த ஆயுதக் குழுக்களையும் , அரசியல் கட்சிகளையும் பெரும் முயற்சி செய்து விடுதலைப் புலிகளின் அனுசரணையோடு தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க உழைத்தவர் சிவராம் என்ற ஊடகவியலாளர் தான் என்பதை எவரும் மறந்து விட முடியாது. இன்று அதன் தலைமைப் பதவியில் அமர்ந்து கொண்டு அதிகாரம் செலுத்தும் ஒரு சிலர் வேண்டா வெறுப்பாக , தவிர்க்க முடியாமலே கூட்டமைப்பில் இணைந்தனர் என்பதையும் மக்கள் அறிவார்கள். அவர்கள் தான் இப்போது "பிரபாகரனின் கொலைப் பட்டியலில் நானும் இருந்தேன்" என்று பத்திரிகைகளுக்குப் பேட்டியும் கொடுக்கின்றனர்.

ஒரு ஊடகவியலாளனின் அர்ப்பணிப்பில் உருவான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சரான சி.வி. விக்னேஸ்வரன் வடக்கு மக்களுக்கு ஒரு முகமறியா நபர். கொழும்பின் நிரந்தர வாசி.அவரை வடக்கு மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தது இந்த ஊடகங்கள்தான். "பிரபாகரன் ஒரு மாவீரன்" என்று அவர் பேசியதை கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்து அவர் மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டியது இதே ஊடகங்கள்தான். உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் தன் சட்ட ஆற்றல் மூலம் எமது உரிமைப் போராட்டத்துக்கு வலுச் சேர்ப்பார் என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் பரப்பியதும் ஊடகங்கள் தான்.

இன்று முதலமைச்சர் பதவிக் கதிரையில் ஏறி அமர்ந்து கொண்டு ஊடகங்களை எட்டி உதைக்கிறார். முதலமைச்சரின் இல்லத்தில் ஊடகவியலாளர்களுக்கு இடமில்லை என்பதை எமது மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எமது ஊடகவியலாளர்கள் ஒரு ஓரமாக நின்றும் கூடச் செய்தி சேகரிக்கக் கூடிய அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றுபவர்கள்.

அப்படியானால் வேறு காரணம் என்ன?

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அஞ்சலி நிகழ்வுகள் தொடர்பாக முதலமைச்சர், மாகாண சபைத் தவிசாளர்சி.வி. கே. சிவஞானம், இரு அமைச்சர்கள் , ஒரு சில மாகாண சபை உறுப்பினர்கள் நடந்து கொண்ட முறையை சில ஊடகங்கள் அம்பலப்படுத்தின. அவர்கள் அஞ்சலி நிகழ்த்த மாகாண சபையில் நடத்துவதை கடைசி வரை பிடிவாதமாக எதிர்த்ததையும் அவர்களின் விருப்பத்துக்கு மாறாக பெரும்பான்மையான மாகாண சபை உறுப்பினர்கள் சுடரேற்றிய போது அதில் கலந்து கொள்ளாமல் விட்டு , சுடரேற்றல் முடிந்த பின்பே உள்ளே அவர்கள் வந்ததையும் ஊடகங்களே வெளிப்படுத்தின.

"இதற்குத்தானா இவர்களுக்கு வாக்களித்தோம்?" என மக்கள் மனம் நோகுமளவுக்கு அந்த மாகாணசபைக் காரர்கள் நடந்து கொண்டனர். இதனால் குறித்த மாகாண சபைக் காரர்கள் சென்ற இடமெங்கும் மக்கள் இதுபற்றியே கேள்வி எழுப்பத் தொடங்கி விட்டனர்.இதன் விளைவாகவே ஊடகவியலாளர்களை முதலமைச்சர் வேண்டா விருந் தாளிகள் போல நடத்த தொடங்கினார். கடைசியில் இப்போது "என் வீட்டுப் படியை மிதிக்காதீர்கள்" என்ற ரீதியில் அறிக்கை மூலம் செய்தி சேகரிக்க வரவேண்டாம் என்றும் சொல்லி விட்டார்.

என்னதான் கட்டுப்பாடுகள் போட்டாலும், வரவே கூடாது என்று தடுத்தாலும் ஊடகக் கண்கள் காற்றுப் புக முடியாத இடத்தில் கூடப் புகுந்து எல்லாவித திருகுதாளங்களையும் கண்காணித்துக் கொண்டேயிருக்கும் என்பது மட்டும் தான் உறுதி.

---

## உணர்வின் ஊற்று - 1

வாசகர்களே! நீங்கள் கவிதை எழுத விரும்புபவர்களா? அப்படியாயின் உங்களுடைய கவியாற்றலுக்கு ஒரு சவால். இந்தப் பகுதியில் பிரசுரமாகியிருக்கும் ஒளி ஓவியத்தை பார்க்கும்போது உங்கள் மனதில் எழும் உணர்வுகளை கவிதையாக்கி அனுப்புங்கள்.

அனுப்பவேண்டிய முடிவுத் திகதி: 20.06.2014

தரமானவை பிரசுரிக்கப்படும்.


முகவரி:

**உணர்வின் ஊற்று 1**

**சுடர் ஒளி**

*361, கஸ்தூரியார் வீதி,*

*யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலிக்குமா பிரித்தாளும் தந்திரம்?

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:
021 567 7609
sudarolijaffna@gmail.com

இலங்கைக் கடலில் இந்திய மீனவர்கள் ஊடுருவும் படலம் மீண்டும் தொடங்கி விட்டது. கடந்த ஒன்றரை மாதங்களாக இந்திய மீனவர்கள் இலங்கைக் கடலுக்குள் ஊடுருவவே இல்லை. காரணம் அந்த ஒன்றரை மாதமும் இந்திய மீனவர்கள் கடலுக்குள் இறங்க முடியாது. ஒவ்வொரு வருடமும் ஒன்றரைமாதம் அவர்களுக்கு தடைகாலம். கடலில் மீன்கள் வளர்வதற்காக 45 நாட்கள் அவர்கள் கடலுக்குள் இறங்குவதில்லை. இப்போது தடைகாலம் முடிந்துவிட்டதால் வரிசையாக வரத்தொடங்கி விட்டார்கள்.

நரேந்திரமோடியின் பதவியேற்புக்குப் பின்னர் இந்திய மீனவர் விவகாரத்தில் இலங்கை மென்போக்கையே கடைப்பிடிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதற்கு மாறாக பழையபடியே அத்துமீறி உள்நுழையும் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கொத்துக் கொத்தாகப் பிடித்துவந்து நீதிமன்றங்களில் ஒப்படைக்கின்றார்கள்.

உண்மையில் இந்த மீனவர்கள் எவரும் இந்தியக் கடற்பரப்பில் பிடிபடவில்லை. மாறாக இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழையும்போதே கைதுசெய்யப்படுகின்றார்கள். தமிழகக் கடலில் சிறு தொழிலுக்கு ஏற்ற வகையில் புவியியல் அமைவு இல்லை. இலங்கைக் கரையோரமாக உள்ள கண்டல் பகுதிகளில் மீன்கள் அதிகளவு வளர்வதற்கு உகந்தவையாக உள்ளன. எனவே சிறுதொழில் மீனவர்கள் மீன்பிடிக்கவேண்டுமாயின் இலங்கை கடற்பகுதிக்கு வந்தாகவேண்டும்.

கடந்த 30 வருடங்களாக இந்திய மீனவர்களுக்கு இதுவொரு பிரச்சினையாக இருக்கவில்லை. ஏனெனில் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியில் மீனவர்கள் கடலுக்குள் செல்ல இலங்கை அரசு அனுமதி வழங்கவில்லை. சில இடங்களில் மட்டுப்படுத்தப்பட்ட தூரமளவுக்கே சென்று மீன்பிடிக்க தளர்வு ஏற்படுத்தப்பட்டிருந்தது. இது இந்திய மீனவர்களுக்கு சாதகமாகப்போய்விட்டது. இலங்கை மீனவர்கள் மீன்பிடிக்காத இடங்களில் எல்லாம் படகுளில் வந்து மீன்களை அள்ளிச் சென்றார்கள்.

இவ்வாறு படையெடுத்துவரும் இந்திய மீனவர்களை கடற்படையினரும் கண்டுகொள்வதில்லை. அனேகமாக இவ்வாறு இந்திய மீனவர்கள் போலவே புலிகளின் படகுகளும் வந்து கடற்படைமீது தாக்குதல் நடத்துவதுண்டு. எனவே கடலில் நிற்பது இந்திய மீனவர்களின் படகுகளா? அல்லது புலிகளின் தாக்குதல் அணியா? என்ற அச்சத்தில் கடற்படையினர் அந்தப் பக்கம் தலைவைத்தும் படுப்பதில்லை.

ஆனால் போருக்குப் பின்னர் நிலைமை தலைகீழாக மாறிவிட்டதால் இந்திய - இலங்கை மீனவர்களுக்கிடையே அடிக்கடி முறுகல் நிலை தோன்றியது. அத்தோடு அத்துமீறும் மீனவர்களும் கைதாகினர். இந்த நிலையில் இந்திய-இலங்கை மீனவர்களுக்கிடையில் திட்டமிட்டு பிளவை உண்டாக்க இலங்கை அரசு திட்டமிட்டு வருகின்றது. அண்மையில் கைதாகி விடுவிக்கப்பட்ட மீனவர்களிடம் ''உங்களைக் கைதுசெய்யவேண்டும் என்று எங்களுக்கு துளியும் விருப்பமில்லை ஆனால் அத்துமீறும் இந்திய மீனவர்களை பிடிக்காவிட்டால் தமிழ் மீனவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வார்கள். அதனால்தான் உங்களைப் பிடிக்கவேண்டி இருக்கிறது'' என்று கடற்படையினர் சொல்லியுள்ளனர். சாத்தான் ஓதுவதை வேதம் என்று நம்பிய இந்திய மீனவர்களும் அந்தக் கருத்தை சக மீனவர்களிடமும் ஊடகங்களிடமும் தெரிவித்திருக்கிறார்கள். இதனால் வருங்காலத்தில் இந்திய - இலங்கை மீனவர்களிடையே உள்ள முரண்பாட்டு நிலை முற்றக்கூடும். இது மெல்ல மெல்ல தமிழக மக்களுக்கும் ஈழத்தவர்களுக்குமிடையேயான விரிசலைக்கூட ஏற்படுத்தலாம். பேரினத்தின் பிரித்தாளும் தந்திரத்துக்கு பலியாகாமல் நிதானித்து உண்மையைக் கண்டறிவதே இருபகுதியினருக்கும் நன்மை பயக்கும்.

# எரித்திரியாவில் வான் புலிகள்?

மழை விட்டும் தூவானம் விடாத கதையாக முள்ளிவாய்க்காலுக்கு பின்னரும் புலிகளின் மீள்உயிர்ப்புப் பற்றிய கதைகள் அவ்வப்போது வந்துகொண்டுதான் இருக்கின்றன. புலிகளின் வான் தளங்களும் விமானங்களும் எரித்திரியாவில் இன்னமும் இருக்கின்றன என்பது அப்படியான கதைகளில் ஒன்றுதான்.

எரித்திரியா பற்றிய கதையை அவிழ்த்து விட்டவர் புலிகளின் முன்னாள் சர்வதேசப் பொறுப்பாளரும் தற்போது அரசின் பக்கமாக புலம்பெயர் தமிழர்களைக் கொண்டு வருவதில் முன்னின்று செயற்படுபவருமான கே.பி எனப்படும் குமரன் பத்மநாதன்தான்.

உண்மையில் அவர்கூட ஒரு ஊகத்தின் அடிப்படையில்தான் இந்தக் கதையை 2010 இல் வெளிப்படுத்தியிருந்தார். புலிகளின் புதிய தலைவராக தன்னைத் தானே கே.பி.முடிசூடிக்கொண்ட சில நாட்களிலேயே அவர் இலங்கை அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டார். மலேசியாவில் அவர் இலங்கை அதிகாரிகளால் பிடிக்கப்பட்டோ அல்லது அவராகச் சரணடைந்தோ இலங்கைக்கு கொண்டுவரப்பட்டார். அப்படி வந்தவர் - அதுவும் புலிகளின் தலைவர் என்று சொல்லிக் கொண்டவர் - கடுமையான சித்திரவதைக்கோ அல்லது தடுப்பு முகாமுக்கோ அனுப்பி வைக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறில்லாமல் ஒரு வெளிநாட்டு இராஜதந்திரிக்கு வழங்கப்படுவதைப் போன்று ஆடம்பர மாளிகையில் கே.பி. தங்கவைக்கப்பட்டார். வெளியுலகுக்கு அவர் சிறைவைக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டபோதும் உண்மையில் ஓர் அமைச்சரின் தோரணையோடு கே.பியின் உலா தொடர்ந்தது.

இப்படி அரசின் செல்லப்பிள்ளையாக மாறிய காலத்தில்தான் புலிகளின் இரகசியங்கள் என்றபோர்வையில் பல கதைகளை அவர் வெளியிட்டிருந்தார். அவற்றில் இரண்டு அனைவரது கவனத்தையும் ஈர்த்தன.



1. புலிகளின் தலைவரை இறுதிப்போரின்போது மீட்க கே.பி வகுத்த "ஒப்பரேஷன் ஹெலிகொப்டர்" நடவடிக்கை.

2. எரித்திரியாவில் புலிகளுக்குச் சொந்தமாக இன்னமும் 6 விமானங்களும் 14 விமானத்தளங்களும் உள்ளன.

இதில் முதலாவது கதையைக் கேட்டவுடனேயே பலருக்கு சிரிப்புத்தான் வரும்.

ஏனெனில் மிகக்குறுகிய நிலப்பரப்பொன்றுக்குள் அரசபடைகளால் புலிகளும் மக்களும் சுற்றிவளைக்கப்பட்டிருந்தநிலையில் அதற்குள் ஹெலிகொப்டரை தரையிறக்கி தலைவரையும் முக்கிய தளபதிகளையும் பத்திரமாக மீட்பதே தனது திட்டம் என்றும் ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு புலிகளின் சர்வதேசப் பிரிவு ஒத்துழைக்கவில்லை என்றும் கே.பி கூறியிருந்தார். சர்வதேச நாடுகளிடம் கெஞ்சிக்கூத்தாடி அதிநவீன ஆயுதங்களையும், தொழில்நுட்பசாதனங்களையும் பெரும் படை பலத்தையும் கொண்டிருந்த இலங்கை இராணுவத்தின் முற்றுகையை உடைத்துக்கொண்டு முள்ளிவாய்க்காலில் ஹெலி இறங்கினாலேயே அதுபெரிய சாதனைதான். அப்படி இறங்கிய ஹெலியில் தலைவர் பிரபாகரனையும் தளபதிகளையும் ஏற்றிக்கொண்டு ஹெலி செல்ல வேண்டுமானால் அது இந்தியாவுக்கோதான் மாலை தீவுக்கோ செல்லவேண்டும். ஆனால் முள்ளி வாய்க்காலில் வான்பரப்பை ஹெலி கடப்பதற்கு இடையிலேயே விமான எதிர்ப்பு பீரங்கி மூலமோ அல்லது கிபிர் விமானங்கள் மூலமோ அந்தக் ஹெலியை அழித்துவிடுவது இலங்கைப் படைகளுக்கு இலேசான காரியம். ஆங்கிலப் படங்களில் வேண்டுமனால் சுற்றிவர குண்டுகள் வெடிக்க பத்திரமாக ஹெலியில் ஏறித் நாயகன் தப்பிக்கமுடியும். ஆனால், யதார்த்தமான போர்க்களத்தில் அது கனவிலும் முடியாத காரியம். நீண்டகாலம் வெளிநாடுகளிலேயே வாழ்ந்து வெளிநாட்டுப் படங்களையே பார்த்துப் பழகியதுதான் கே.பியின் ஹெலிப் பிளானுக்கு காரணம் போலும். இந்தக் ஹெலிப் பிளானுக்கு புலிகளின் சர்வதேசப் பிரிவைச் சேர்ந்த கஸ்ரோவிடம் கே.பி. நிதி உதவி கேட்டிருக்கிறார். உப்புச்சப்பில்லாத இந்தத் திட்டத்துக்கு கஸ்ரோ மறுக்க இப்போது புலிகளின் தலைவரை மீட்கும் திட்டத்தைக் குழப்பியது கஸ்ரோதான் என்று கைநீட்டுகிறார் கே.பி.

ஆனால் கே.பி. இரண்டாவதாக அவிழ்த்துவிட்ட கதை ஓரளவு நம்பக்கூடியதுதான். ஆரம்பகாலம் தொட்டே புலிகளின் நடவடிக்கைகள் எரித்திரியாவில் அதிகமாகவே இருந்தன. சர்வதேச ரீதியில் ஆயுத விநியோகத்தை மேற்கொள்ள ஓர் தளமாக எரித்திரியாவையே புலிகள் பயன்படுத்தி வந்தனர். இதற்கு நிறையக் காரணங்கள் உண்டு. கிழக்கு ஆபிரிக்க நாடான எரித்திரியாவும் ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக போராடியே தனது விடுதலையை பெற்றுக்கொண்டது.

இதனால் அந்த நாடு எப்போதும் விடுதலைக்காக போராடும் அமைப்புகளுக்கு உதவி செய்யத் தயங்குவதில்லை. நீண்டகாலம் போரிலேயே தங்கள் ஆற்றலைச் செலவிட்டதால் ஏனைய ஆபிரிக்க நாடுகளைப்போல எரித்திரியாவின் பொருளாதாரமும் கீழ்நிலையிலேயே இருந்தது. எனவே அந்த நாட்டு அரசாங்கத்திற்கு புலிகள் ஓரளவு நிதியுதவி செய்ததால் அவர்களின் நடமாட்டத்திற்கு எந்தவித தடையும் இருக்கவில்லை. இலங்கையை விடவும் எரித்திரியாவை மிகச்சுதந்திரமாக தங்களுடைய நடவடிக்கைகளை புலிகள் மேற்கொள்ள முடிந்தது.

புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளராகவும் ஆயுத விநியோகத்தை மேற்கொள்பவராகவும் கே.பி. இருந்த காலத்தில்தான் எரித்திரியாவை புலிகள் தங்கள் பக்கம் வளைத்திருந்தனர். ஆனால் கே.பியிடம் நம்பிக்கை அற்றுப்போக ஆயுத விநியோகத்தை புலிகள் முற்றுமுழுதாக கடற்புலிகளின் கையில் கொடுத்தபோதும் கூட எரித்திரியாவே தளமாகப் பயன்படுத்தப்பட்டது. கே.பியின் காலத்தில் எரித்திரியாவுக்கு நிகராக தாய்லாந்தும் புலிகளின் முக்கிய தளமாக விளங்கியது. ஆனால் தாய்லாந்தைவிடவும் கடற்புலிகள் எரித்தியாவையே அதிகம் நம்பியதால் தங்களுடைய நடவடிக்கைகளை எல்லாம் அங்கேயே மேற்கொண்டனர். மெல்ல மெல்ல தாய்லாந்தில் தமது நடவடிக்கைகளை குறைக்கவும் தொடங்கினர். அதற்கும் காரணம் இருந்தது.

கே.பியின் குணாம்சத்தைப் பற்றி புலிகளின் தலைவர் மிக நன்றாகவே அறிந்திருந்தார். சர்வதேசப்பொறுப்பாளர் பதவியில் இருந்து தன்னை தூக்கி எறிந்ததால் ஏதாவது இசகு பிசகான காரியங்களில் அவர் இறங்கக்கூடும் என்று புலிகள் எதிர்பார்த்தனர். கே.பியின் மனைவி தாய்லாந்தைச் சேர்ந்தவர் என்பதாலும் மிக நீண்டகாலமாக அங்கேயே வசித்ததால் தாய்லாந்து அதிகாரிகளை கே.பி. விலைக்கு வாங்கும் வல்லமை கொண்டிருந்ததாலும் அவருடைய கை அங்கு ஓங்கியிருந்தது. எனவேதான் தாய்லாந்தின் கே.பி. ஏதாவது விளையாட்டுக்காட்டக்கூடும் என்ற எண்ணத்தில் புலிகள் தாய்லாந்தை தவிர்த்து எரித்திரியாவுக்கு முக்கியத்துவம் கொடுக்கத்தொடங்கினர். புலிகள் இறுதிப்போருக்காக மிகப்பெரியளவிலான தயார்ப்படுத்தலில் ஈடுபட்டிருந்தனர். எனவே ஆயுதக்கொள்வனவு, விமானக்கொள்வனவு என்பவற்றில் அவர்கள் அதிக அக்கறை காட்டினர். கே.பியின் கையில் இருந்த ஆயுதக்கொள்வனவு கடற்புலிகளின் கைகளுக்குச் சென்றபின்னர் எந்தவொரு ஆயுதக்கப்பலும் புலிகளின் பகுதியை சீராகச்சென்றடைய வில்லை. பல கப்பல்கள் நடுக்கடலிலேயே வைத்து இலங்கை வான்படையால் குண்டு வீசித் தகர்க்கப்பட்டன. இவற்றிற்கு பின்னால் கே.பியின் கை இருந்ததாக சந்தேகிக்கப்படுகின்றது. தங்களுடைய ஆயுதங்களைக் கொண்டுசெல்வதில் ஏற்பட்ட சிக்கலால் தாங்கள் கொள்வனவு செய்துவைத்திருந்த விமானங்களை தரித்துவைக்க புலிகள் எரித்திரியாவைத் தேர்ந்தெடுத்தார்கள்.

புலிகள் அமைப்பில் இருந்து விலக்கப்பட்ட பின்னரும் தனக்கு விசுவாசமான சிலர் மூலம் புலிகளின் நடவடிக்கைகளை கே.பி. தொடர்ந்தும் கண்காணித்து வந்துள்ளார். என்றாலும் கே.பியே எதிர்பாராத வகையில் மீண்டும் புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளராக அவர் நியமிக்கப்பட்டபோதும் கூட எரித்திரியாவுடன் எந்தவித தொடர்பையும் அவர் பேண முடியவில்லை. ஏனெனில் முற்றுமுழுதாக கே.பி.யை நம்புவதற்கு புலிகளின் தலைவர் தயாராகவில்லை.

எனவேதான் எக்காரணம் கொண்டும் எரித்திரியாவில் கே.பியின் கால் படாத வண்ணம் பிரபாகரன் பார்த்துக்கொண்டார். ஆனாலும் கடற்புலிகளால் முடியாமல்போன ஆயுத விநியோகத்தை மீண்டும் வெற்றிகரமாக நடத்த கே.பியை விட்டால் வேறுயாரும் இல்லை என்ற நிலையில்தான் அவர் இரண்டாவது முறையாக சர்வதேசப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். இந்தநிலையில் தன்னை எரித்திரியாப் பக்கம் எட்டிப்பார்க்கவும் புலிகள் ஏன் விடுகிறார்கள் இல்லை என்ற சந்தேகம் கே.பிக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்போதுதான் அங்கே புலிகளின் விமானங்களும் விமானத் தளங்களும் இருக்கும் உண்மை கே.பிக்கு தெரியவந்துள்ளது.

இறுதிப்போரின்போது ஹெலிப்பிளானைத் தீட்டிய கே.பி.அந்தத் திட்டத்திற்கு ஹெலியைவிட வேகம்கூடிய விமானங்களை பயன்படுத்த ஏன் நினைக்கவில்லை? இப்போது விமானம் இருப்பதாகச் சொல்லும் கே.பி. ஒப்பரேசன் ஹெலிகொப்டர் திட்டத்தை சொல்லும்போது ஏன் எரித்திரிய விமானங்கள் ஞாபகத்துக்கு வரவில்லை? ஒருவேளை ஓடுபாதை முள்ளிவாய்க்கால் பகுதியில் இல்லை என்பதால்தான் ஹெலிகொப்டர் திட்டத்தை தீட்டியதாக கே.பி. சொல்லப்படும். ஆனால் முள்ளிவாய்க்காலில் முடிவுரை எழுதப்படுவதற்கு சில வாரங்களுக்கு முன்னர்தான் வன்னியில் இருந்து எழுந்த புலிகளின் இரண்டு விமானங்கள் தென்னிலங்கையில் புகுந்து தற்கொலைத் தாக்குதலை நடத்தியிருந்தன. கடைசி வரை முள்ளிவாய்க்காலில் இருந்து சாலை வரை தற்காலிக விமான ஓடுதளம் ஒன்றை புலிகள் பேணிவந்தனர். கே.பி. ஹெலியை விட்டுவிட்டு விமானத்திட்டத்தை தீட்டியிருந்தால் ஒருவேளை அது சாத்தியமாகி இருக்கக்கூடும். அப்படியானால் ஏன் தலைவரை மீட்க விமானத்தை பயன்படுத்தும் யோசனை கே.பிக்கு ஏன் வரவில்லை? அதற்கும் காரணங்கள் உண்டு. எரித்திரிய விமானங்களைத் தொடுவதற்குகூட கே.பிக்கு புலிகள் அதிகாரம் அளித்திருக்கவில்லை. அத்துடன் தலைவரை ஹெலி மூலம் மீட்கப்போகின்றேன் என்று சொன்னால் கோடிக்கணக்கில் கொட்டித் தரக்கூடும் என்று கே.பி. எண்ணியிருக்கலாம்.

கே.பி. அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் முதலாவதாக அவிழ்த்துவிட்டது இந்த எரித்திரிய விமானங்களைப் பற்றிய கதையைத்தான். உடனேயே களத்தில் இறங்கிய இலங்கை அரசு புலிகளின் விமானங்களை தங்களிடம் தரும்படி எரித்திரிய அரசை கேட்டுக்கொண்டது. ஆனால் புலிகளின் பிரதிநிதிகள் வந்தாலேயொழிய வேறெவருக்கும் அதனை வழங்க முடியாது என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டது. உட னேயே அரசாங்கம் " இவர்தான் புலிகளின் பிரதிநிதி இவரிடம் அந்த விமானங்களை வழங்குங்கள் " என்று கே.பி.யை காட்டியது. " புலிகளின் பிரதிநிதியாக இவரை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது." என்று எரித்திரியா அதற்கும் மறுத்துவிட இந்தப் பழம் புளிக்கும் என்ற நரிபோன்று இலங்கை ஏமாற்றத்தோடு திரும்பவேண்டியிருந்தது. என்றாலும் அந்த விமானங்களை எப்படியும் அடைந்தே தீருவது அந்த வெறியோடு இலங்கை சில காரியங்களை செய்யத்தொடங்கியது. அவற்றில் ஒன்றுதான் எரித்திரியாவில் இலங்கைக்கான தூதரகம் ஒன்றைத் திறப்பது. ஆனால் அது இதுவரை சாத்தியமாகவில்லை.

இதேவேளையில் எரித்திரியாவில் வெறுமனே விமானங்கள் மாத்திரம் இருக்கவில்லை. அவற்றை செலுத்தக்கூடிய வான்புலிகளும் அங்கே இன்னமும் இருக்கின்றார்கள் என்ற தகவல்கள் அண்மைக்காலமாக வெளிவந்துகொண்டிருக்கின்றன.

ஒரு காலத்தில் அவர்கள் புலிகள் அமைப்பு மீளவும் இலங்கையில் செயற்படத் தொடங்கினால் ஏதோ ஒருவகையில் விமானங்களோடு இலங்கைக்கும் வரக்கூடும் என்று பாதுகாப்புத் தரப்பு அஞ்சுகின்றது. அண்மையில் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக அரசினால் கூறப்படும் தெய்வீகன் எரித்திரியாவில் உள்ள வான்புலிகளோடு தொடர்பில் இருந்தார் என்றும் அவரே இங்குள்ள நிலைமைகள் பற்றி எரித்திரியாவில் உள்ள புலிகளுக்கு தகவல்களை வழங்கிக்கொண்டிருந்தார் என்றும் நம்பப்படுகின்றது. ஏற்கனவே புலிகளின் தலைவர் பிரபாகரனும், புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டம்மானும் எரித்திரியாவில் இருப்பதாக கதைகள் அடிபட்டன.

ஆயினும் அவர்கள் இருவரும் அங்கிருப்பது “பேய்க்கதை” என்று மறுத்த இலங்கை அரசு புலிகளின் விமானங்கள் இருப்பது பற்றி எந்தமூச்சும் காட்டவில்லை. என்றோ ஒருநாள் அந்த விமானங்கள் இலங்கை இராணுவத்தின் மீது குண்டுகளைப் பொழியலாம் என்று தமிழர்கள் நம்பாவிட்டாலும் அரசு அஞ்சத்தான் செய்கிறது.

■ ஓடுகாலி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்பார்ப்பு

வாழ்வின் பொழுது கரைகிறது
வசந்தம் இருளில் புதைகிறது
காதல்கள் காமங்களாகி
கண்ணீரில் வாழ்வுப் பொழுது
பிணைகிறது

ஏழை மனங்கள் ஏழ்மைக்குள்
கலந்து தவிக்கின்றது
வாழ்வு ஓடுது தேனீர் தான்
ஏழைகளின் விஸ்க்கி

தேனீர் என் தேடலை நனைக்க
பிறப்பில் தொடங்கி மரணம் வரை
மனித மனங்களின் தடுமாற்றம்
மானுட வாழ்வில் பேராசைகள்

மனங்களின் மதி கெட்ட
மனிதரின் அகம்பாவங்கள்
திரும்பும் திசையெங்கும்
சுயநல முகங்களாகி

மரணத்தை மனித மனங்கள்
வலிந்திழுக்கும் சோகங்கள்
பணத்தை காட்டி வளைக்கும்
வெட்கமில்லா மனிதர் முகம்

எதிர்பார்ப்பு தேடல்கள்
தவிப்புக்கள் தொடர
மானுடப் பயணங்கள்
மரணத்தை தேடும்
முடிவில்லா வாழ்வும்
மனிதம் அலைகிறது
எதிர்பார்ப்போடு.

**பி.எஸ்.பரணீ, முல்லையூர்.**

# கவிதைப் புனல்

வசந்தம் தழுவாத நம் பூக்காடும்...
வாழ்வும் வறண்டநிலமாகிட...!!
உழைத்து உருகியுருகி சுருங்கிட
பாறையுடைத்து பயிர் செய்த கைகள்...
இன்று...!!!
சோர்வாக....

காய்ந்து போன வயலோரம்...
நடக்கின்றான் விவசாயி...
பொய்த்துப் போன மழையாலும்...
சீர் கெட்ட பனியாலும்...!
பயிர் நாசம் அடைகிறது...
விலைவாசி உயர்கிறது...

ஏழையிவன் வாழ்வும்...!
வறண்ட நிலம் போலாகிடுமோ...
மழை பார்க்காத வயல் மண்ணும்...
தென்றல் தழுவா நெல்லும்...
வீணாகிப் போகுமோ விவசாயி வாழ்வு

*தமிழ் நிலா,*
*கெருடயம்பதி*

# விவசாயி





# மனிதனால் மட்டும்

மேகம் பல
தொடுப் போடும்
மலையை ஒரு
கல்லாக்கி
கல்லை கண்ணுக்கு
விருந்தாக்கும்
ஒரு சிலையை
விலையாக்கும்
வித்தையை
மனிதனால்
மட்டும் தான்
செய்ய முடியும்

**முல்லை ரமணன்**

# கடைசிச் சொல்

நான் விலகிச் செல்லவே விரும்புகின்றேன்
தீயின் நர்த்தனத்தில்
அலைவுறும் காலத்தை
எழுதித் தீர்த்துவிட முடியாத சொற்களோடு
வாழ்வு கழிகிறது.
என் பிரிய நண்பர்களே
நாம் நிரப்பி வைத்திருக்கும்
மதுக்குவளைகளில்
காலத்தின் சீழாக
நுரைகள் ததும்புகின்றன
இந்த யுகத்தின்
இறுதியில் புயலைக் கைகளால்
தீண்டிக் களித்த சிறுவனை
நான் முத்தமிடுகையில்
அவனது உதடுகளில் குருதியின்
வீச்சமடித்தது
போதும் நண்பர்களே
மணல் ஈறுகளில்
உறைந்து போயின
மிக நீண்ட துயரத்தின்
தடயங்கள்.
நாங்கள் எதைப் பேசுவது?
கனவுக்கும் வாழ்தலுக்குமிடையில்
இளமையின் சிறகுளில் ஒளிரும்
ஓராயிரம் வர்ணங்களின் அழகையா?
தவிர,
சூரியன் வடிந்திறங்காத கடல்களின் மேலே
துள்ளியெழும் ஒளிக் கற்றைகளையா?
முழுமையும்
எரிந்தடங்கிய வெளியில்
முளைக்காத ஈச்சம் மரங்களைப் பற்றியா?
அல்லது
ஒரு சொட்டும் உப்பின் சுவைபடராத
துளி நீருக்காக அலைந்ததையா?
என் பிரிய நண்பர்களே
காலத்தின்
அதியுன்னதமான விஷத்துளியை
நாம் பருகிக்கொண்டிருக்கின்றோம்.
இந்த விஷத்தின் கனத்தோடு
நான் இனி விலகிச் செல்வதுதான் நல்லது.
இறுமாப்பின்
கடைசிச் சொல்லிலும்
குருதிதான் மீந்திருந்தது
போதையின் கட்டுக்கடங்காத் தினவோடு

**- சித்தாந்தன்**

# என் விதியா?

காசில்லை பணமில்லை
கண்டவனும் திட்டுகிறான்
ஏழை என் பெயர் சொல்ல
எவருக்குமே விருப்பமில்லை

மீசையுடன் தாடி கண்டு
மிடுக்கான தோற்றத்துடன்
நகர்வலம் வந்தாலும்
உழைப்பில்லா என்னிடம்
அக்கறை எவருக்குமில்லை

கண்ணிலே தண்ணீர்
கன நாள் கண்ட பின்பும்
சுள்ளி விறகு கொண்டு
செய்த சமையலை
உண்ண வழியில்லை
உழல்கிறேன் இங்கே

கல்வி கற்ற போது
காதல் வந்து தோன்றியது
பள்ளி முழுவதும்
அவள் நினைவு
பரீட்சை தோல்வி
கண்டதுவே

பரீட்சை தோல்வி
கண்டதனால்
கன்னியவளும்
அருகிலில்லை
தொழிலில்லா
பேர் வழி ஆகியது
என் விதியா?

**லே.லே.அகிலேஸ்வரன்**
**மருதங்கேணியூர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிவநகரில் விகாரை; ஒளிந்திருக்கும் ரகசியம்







■ அனுஷ்கன்

*யாழ்ப்பாணக் கோட்டைப் புனரமைப்பும் ஆய்வும், நெதர்லாந்து அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படுவதால் அந்த ஆய்வு மட்டுமே யாழ்ப்பாணத்தில் நேர்த்தியாகச் செய்யப்படும் ஆய்வாக இருக்கின்றது. ஏனைய ஆய்வுகள் பலவும் நிதியொதுக்குதல் இன்றி முடங்கிக் கிடக்கின்றன. ஆனால் பௌத்த எச்சங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்ற கந்தரோடை மற்றும் கிளிநொச்சி சிவநகர் போன்ற பகுதிகளுக்கு மட்டும் தேவையான அளவு நிதியொதுக்குதல்கள் எவ்வாறு கிடைக்கின்றன என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.*

தமிழர் பிரதேசங்களில் தொல்லியல் ஆய்வுகளில் இலங்கை தொல்லியல் ஆய்வுத் திணைக்களத்தை விட படையினரும் அவர்களின் புலனாய்வுக் குழுக்களுமே மிகவும் அக்கறையோடு செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. கிளிநொச்சிப் பகுதியில் படையினரால் பௌத்த விகாரை ஒன்றின் எச்சங்கள் கண்டுபிடிக்கப் பட்டதாகக் கூறப்படும் விவகாரமே இந்தச் சந்தேகத்தை தவிர்க்க முடியாமல் எழ வைக்கிறது.

கிளிநொச்சி தமிழர்களின் பாரம்பரியமும், பண்பாடும், கலாசாரமும் தொன்று தொட்டு ஊறிய பகுதி. இங்கு இந்து மக்கள் தொன்று தொட்டு வாழ்ந்ததற்கான அடையாளங்கள் பலவும் கடந்த காலங்களில் இனம் காணப்பட்டிருந்தன. இது தொடர்பிலான ஆதாரங்களை யாழ். பல்கலைக் கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் பல முறை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இன்று யாழ்ப்பாணத்தில் இருந்தபடி பணியாற்றும் வடமாகாணத் தொல்லியல் திணைக்களத்தில் தமிழ் உயர் அதிகாரிகள் , துறை சார்ந்த தமிழ் நிபுணர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பது கேள்விக்குரிய விடயமே. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து தொல்லியல் பட்டதாரிகளாக வெளியேறிய மாணவர்கள் தற்போது அங்கு தொல்லியல் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இதை விட வடமாகாணத்தில் இத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த அதிகாரிகள் யாருமே அங்கு கடமையில் இல்லை. ஏதாவது தொல்லியல் சின்னங்கள் இனங்காணப்பட்டாலோ அல்லது அது குறித்த தகவல் யாழ்ப்பாணத்தில் உள்ள தொல்லியல் திணைக்களத்தின் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டாலோ அது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் தொல்லியல் பேராசிரியர்களுடன் தொல்லியல் திணைக்களம் எந்தத் தகவல் பரிமாற்றத்தையும் மேற்கொள்வதில்லை. எப்படியாவது அந்தத் தொல்லியல் சின்னம் பற்றிய தகவலை வெளியே வராதபடி அமுக்குவதற்கே இப்படியான காரியங்களில் தொல்லியல் திணைக்களம் செயற்படுகின்றதோ தெரியவில்லை. இப்படிப்பட்ட நிலையில் தான் புதிதாக கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகர்ப் பகுதியில் புரதான பௌத்த விகாரையின் எச்சங்கள் பற்றிய செய்திகள் வெளியாகியுள்ளன. அங்கு மீட்கப்பட்ட தொல்லியல் எச்சங்கள் குறித்து படைத்துறை சார் இணையத்தளங்களில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் அரச ஊடகங்களும் இந்தச்செய்தியை தமது முக்கிய செய்தியாக இணைத்து படங்களுடன் நிறைத்துக் கொண்டன. ஆனாலும் இது தொடர்பாக நாம் உடனடியாக யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் துறையினரைத் தொடர்புகொண்டு கேட்டபோது வழமைபோல "எமக்கு அதுபற்றி எதுவுமே தெரியாது. இணையத் தளங்களையும் படைத்துறைசார் ஊடகங்களையும் பார்த்தே தாம் இதனை அறிந்து கொண்டோம்" என்று தெரிவித்தனர். இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் ஒரு தொல்லியல் திணைக்கள அலுவலகமும், யாழ்ப் பாண பல்கலைக் கழகத்தில் நிபுணத்து வம் வாய்ந்த இரு பேராசிரியர்களும் இருக்கையில் கொழும்பிலிருந்து ஏன் இதற்கென விசேட ஆய்வுக் குழு கொண்டு வரப்பட்டது என்பதும் இங்கு எழுகின்ற இன்னொரு முக் கிய கேள்வி. அத்துடன் தொல்லியல் திணைக் களத்தின் உயர் அதிகாரிகள் மற்றைய தொல்லியல் கண்டுபிடிப்புக்களை விடவும் இதற்குக் கொடுத்த முக்கியத்துவத்துவமும் இனம்புரியாத சந்தேகத்தையே எழுப்புகிறது. செங்கல் சுவரையும், சில கற்படிமங்களையும் வைத்துக் கொண்டு அது புராதன பௌத்த விகாரைதான் என்று ஆய்வுகள் ஏதும் இல்லாமலே தொல்லியல் திணைக்களம் ஏன் அறிவித்தது? சில வேளைகளில் படையினர் கண்டுபிடித்ததால், அதனை ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் இது மில்லை என்று எண்ணிக்கொண்டார்களோ என்னவோ. இவ்வாறான அவசரக்குடுக்கைத்தனமாக விகாரை விடயத்தில் தொல்லியல் திணைக்களம் நடந்து கொண்டமையால் அங்கு இனிமேல் மேற்கொள்ளப்படவுள்ள ஆய்வுகள் எந்தளவுதூரம் நேர்மையாக இருக்கப்போகின்றன என்று கிட்டத்தட்ட எல்லோருக்குமே பகிரங்கமான ஒன்றுதான். ஆய்வுகள் முற்கற்பிதத்தோடு அணுகப்பட்டால் அவை பக்கச்சார்பான முடிவுகளையே தரும். உருத்திரபுரத்தில் ஒரு விகாரையை அமைக்கவே இந்த நாடகம் கனகச்சிதமாக அரங்கேற்றப்படுவதாக அவ்வூர் மக்கள் சொல்லிக்கொள்கிறார்கள்.

ஏற்கனவே வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய தொல்லியல் ஆய்வுகள் பலவும் நிதிப்பற்றாக்குறையால் நிலுவையிலே இருக்கின்றன. பல மரபுரிமை அடையாளங்கள் கண்டறியப்பட்ட போதும், அவை இன்னும் தொல்லியல் சின்னங்களாகப் பிரகடனப்படுத்தாமல், அதற்கான உறுதிப்பலகைகள் போடப்படாமலும் வடமாகாண தொல்லியல் திணைக்களம் தன் பணியைச் செவ்வனேசெய்து கொண்டிருக்கிறது. குறிப்பாக யாழ்ப்பாணம் வடமராட்சியில் பருத்தித்துறைப் பிரதான வீதியின் ஓரத்தில் மாலுசந்தியில் இருக்கும் மடத்தடிக்குளம் தொல்லியல் சின்னமாக அறிவிப்புப்பலகை மூலம் அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும், அது புதர்மண்ண்டிப் போய்,பாழடைந்த நிலையிலேயே உள்ளது. மறுபக்கத்தில் மாயக்கை, அங்கன் அம்மன் கடவை போன்ற பல பகுதிகளில் தொல்லியல் பொருள்கள் அதிகளவில் மீட்கப்படக் கூடிய சாத்தியங்கள் இருந்தும் அங்கு ஆய்வுப்பணிகள் மிக மலினமான முறையிலேயே மேற்கொள்ளப்பட்டன.


யாழ்ப்பாணக் கோட்டைப் புனரமைப்பும் ஆய்வும், நெதர்லாந்து அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படுவதால் அந்த ஆய்வு மட்டுமே யாழ்ப்பாணத்தில் நேர்த்தியாகச் செய்யப்படும் ஆய்வாக இருக்கின்றது. ஏனைய ஆய்வுகள் பலவும் நிதியொதுக்குதல் இன்றி முடங்கிக் கிடக்கின்றன. ஆனால் பௌத்த எச்சங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்ற கந்தரோடை மற்றும் கிளிநொச்சி சிவநகர் போன்ற பகுதிகளுக்கு மட்டும் தேவையான அளவு நிதியொதுக்குதல்கள் எவ்வாறு கிடைக்கின்றன என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

கடந்தகாலங்களில் அனுமதியளிக்கப்பட்டு வன்னிப் பிராந்தியங்களில் பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சோழர்காலத் தமிழ்ப் பண்பாட்டு எச்சங்கள் நிறைந்திருப்பதற்கான ஆதாரங்களையே தாராளமாகத் தந்திருக்கின்றன.

குறிப்பாக பூநகரி -கௌதாரி முனை காட்டுப் பகுதியில் மீட்கப்பட்ட இந்து ஆலயம் இந்த உண்மையை துல்லியமாக போட்டுடைத்திருந்தது. சுமார் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே பூநகரியில் இந்து மதம் சிறப்பாக நிலவியிருக்கிறது என்ற உண்மை எந்தவித சந்தேகமும் இன்றி நிரூபிக்கப்பட்டு இருக்கிறது. வவுனியா சாஸ்திரிக்குளம் பகுதியில் மீட்கப்பட்ட பெண் தெய்வ வழிபாட்டுக்கு ஒப்பான தெய்வங்கள் அப்பகுதியில் இந்துப் பண்பாடு நிலவியதற்கு வாழும் சான்றாக அமைந்திருந்தன. அத்துடன் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட விகாரைகள் கூட தூய பௌத்தத்தின் தொன்மையை வெளிப்படுத்தாமல் இந்து பௌத்தம் என் றொரு மதநெறி நிலவியது என்ப தையே வெளிப்படுத்தியிருந்தது. இதனைத் தென்னிலங்கை அறிஞர்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். அதைப் போலவே இப்போது மீட்கப்பட்டதாக கூறப்படும் பௌத்த விகாரையும் இந்து பௌத்தத்தின் எச்சம் தான் என உறுதியாக நம்புகிறார் யாழ்ப் பாணத்தில் இருக்கும் வரலாற்று பேராசிரியர் ஒருவர்.

எனவே இது தொடர்பில் தமிழ் அறிஞர்களும் இந்த ஆய்வில் இணைக்கப்பட்டு அது பன்முகத் தன்மையுடனும், பகிரங்கமாகவும், பக்கச்சார்பின்றியும் இடம் பெற்றாலே எந்தத் திரிவுபடுத்தல்களும் அற்ற வரலாற்று உண்மையைக் கண்டறியமுடியும். அதற்கு பௌத்த பேரின அரசு வழிவிடுமா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீர்டி சாயி பாபா. எளிய மனிதராக அவதாரமெடுத்த கடவுள் என்று கோடிக்கணக்கான மக்களால் இன, மொழி, மத பேதங்களற்று வணங்கப்பட்டு வருகிறார். சீர்டி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் அவற்றையெல்லாம் தொகுத்து எழுதிய தொடர் இங்கு பிரசுரமாகின்றது.

# சாயியே சரணம்

## பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர் – 17

சில சமயங்களில் மாட்டு வண்டில்களிலும், டாங்காவிலும் நண்பர்களுடன் பாபா ராஹாதாவிற்குச் செல்வார். அக்கிராமத்து மக்கள் பாண்ட் வாத்திய இசைகளுடன் வந்து கிராமத்தின் நுழைவாயிலில் பாபாவை வரவேற்று, அவர் முன்னால் வீழ்ந்து வணங்குவார்கள். பெரும் வியப்பொலிகளுடன், விழாக் கோலத்துடனும் கிராமத்துக்குள் அழைத்துச் சென்று வசதியாக ஆசனத்தில் அமர்த்தி நல்ல உணவு அளிப்பார். பின்னர் அவர்கள் சரளமாகவும், மகிழ்ச்சியுடனும், சிறிது நேரம் உரையாடிய பின் அனைவருக்கும் மகிழ்ச்சியையும் ஆசியையும் நல்கிவிட்டு பாபா சீர்டிக்கு திரும்புவார்.

தெற்கே ராஹாதாவுக்கும் வடக்கே நிம் காங்வுக்கும் இடையே சரியான மையப்பகுதியில் சீர்டி அமைந்துள்ளது. இந்த இடங்களுக்கு அப்பால் பாபா தமது வாழ்நாளில் சென்றதில்லை. அவர் எந்தவித ரயில் வண்டியையும் பார்த்ததோ, பிரயாணம் செய்ததோ கிடையாது. எனினும் எல்லா வண்டிகள் வரும், புறப்படும் நேரங்கள் எல்லாம் மிகச் சரியாகவே பாபாவுக்குத்தெரியும். தாங்கள் பாபாவிடம் விடைபெற்றுக் கொண்டபோது அவரின் அறிவுரைகளின்படி நடந்தவர்கள் நன்மையடைந்தனர். அதைமதிக்காதவர்கள் பலவித துர்ச் சம்பவங்களுக்கு ,விபத்துக்கும் உள்ளானார்கள்.

### சீர்டி புனித யாத்திரையின் குணாதிசயம்

சீர்டிபுனித யாத்திரையின் ஒரு சிறப்பான வினோதம் என்னவென்றால் எவரும் சீர்டியை விட்டு பாபாவின் அனுமதியின்றி அகன்று செல்லமுடியாது. அப்படிச் செல்வாரேயானால், அவர் சொல்லற் கரிய தொல்லைகளை வரவேற்கிறார். ஆனால் எவரேனும் சீர்டியை விட்டு வெளியேறிச் செல்லும்படி பாபாவால் கேட்டுக் கொள்ளப்பட்டால் அவர் அங்கு அதற்கு மேல் தங்கியிருக்க முடியாது. பக்தர்கள் பாபாவிடம் சென்று வந்தனம் செய்து விடைபெற்றுச் செல்லப்போகும்போது அவர் சில யோசனைகள் அல்லது குறிப்புக்கள் வழங்குவார். இந்த யோசனைகள் பின்பற்றப்பட வேண்டும். இவைகள் பின்பற்றப்படாவிட்டாலும் அல்லது விலக்கப்பட்டு இருந்தாலும், அங்ஙனம் பாபாவின் தூண்டுரைகளுக்கு மாறாக நடந்தவர்களுக்கு விபத்துக்கள் நேரிடுவது உறுதி. இதைப்பற்றி சில நிகழ்ச்சிகளை கீழே குறிப்பிடுகின்றோம்.

### விபத்தில் சிக்கிய குதிரை வண்டி

தாத்யா கோதே பாடீல், ஒரு முறை கோபார்காங்வ் கடை வீதிக்குக் குதிரை வண்டியில் சென்று கொண்டிருந்தார். அவர் மசூதிக்கு அவசரமாகத் திரும்பி வந்து பாபாவை வணங்கி, தான் கோபர்பாங்வ் கடைவீதிக்குச் செல்லப் போவதாகக் கூறினார். பாபாவோ, 'அவசரப்படாதே, சிறிது தாமதித்துக் கடை வீதிக்குச் செல், கிராமத்தை விட்டு வெளியில் செல்லாதே' என்றார். ஆனால் போவதற்கு அவருடைய வேகத்தைக் கண்ட பாபா சாமாவையாவது ( மாதவ்ராவ் தேச்பாண்டே) உடன் அழைத்துச் செல்லுமாறு கூறினார். இந்த உத்தரவைப் பொருட்படுத்தாது தாத்யா கோதே, உடனே குதிரை வண்டியை ஓட்டிச் சென்றார். இரண்டு குதிரைகளில் ரூபா 300 /- விலையுள்ள குதிரை மிகவும் சுறுசுறுப்பாகவும், இருப்புக் கொள்ளாமலும் இருந்தது. சாவல் கேணியைத் தாண்டிய பிறகு, அது தாறுமாறாக ஓட ஆரம்பித்தது. இடுப்பில் சுளுக்கு ஏற்பட்டுக் கீழே விழுந்து விட்டது. தாத்யா அதிகமாகக் காயப்படவில்லை. ஆனால் சாயிபாபாவின் உத்தரவை நினைவில் கொண்டார். மற்றொரு சர்ந்தர்ப்பத்தில் கோல்ஹார் கிராமத்துக்குச் செல்லும் போது . பாபாவின் நெறிமுறையை மதிக்காமல் குதிரை வண்டியில் சென்றபோது அதுவும் இதே கதிக்கு இலக்காகியது.

### ஐரோப்பியருக்கு ஏற்பட்ட அனுபவம்

சீர்டிக்கு ஒரு முறை ஒரு ஐரோப்பிய பெருந்தகை , ஏதோ ஒரு குறிக்கோளுடன் நானாஸாஹேப்பின் அறிமுகக் குறிப்புடன் வந்தார். ஒரு கூடாரத்தில் சௌகரியமாகத் தங்க வைக்கப்பட்டார். அவர் பாபாவின் முன் மண்டியிட்டு பாபாவின் கையை முத்தமிட விரும்பினார். எனவே அவர் மூன்று முறை மசூதிக்குள் நுழைய முயன்றார். ஆனால் அவர் அப்படிச் செய்வதை பாபா தடுத்து விட்டார். கீழேயுள்ள திறந்தவெளி முற்றத்தில் அமர்ந்து, பாபாவின் தரிசனத்தைச் செய்யும்படி கேட்கப்பட்டார். தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பைக் கண்டு மகிழாத ஐரோப்பியர் சீர்டியை விட்டு உடனே புறப்பட விரும்பி விடை பெறுவதற்காக வந்தார் . பாபா அவரை அடுத்தநாள் போகும் படியும் , அவசரப்படவேண்டாம். என்றும் கூறினார். மக்களும் அவரை பாபாவின் அறிவுரையின் படியே செய்யவேண்டிக் கொண்டனர். இவற்றையெல்லாம் செவிமடுக்காது, அவர் ஒரு குதிரை வண்டியில் சீர்டியை விட்டுப் புறப்பட்டார். முதலில் குதிரைகள் ஒழுங்காக ஓடின. ஆனால் ஸாவூல் விஹீர் கிராமத்தைத் தாண்டியதும், எதிரில் ஒரு சைக்கிள் வந்தது. இதைக் கண்ட குதிரைகள் மிரண்டு வேகமாக ஓடின. குதிரை வண்டி தலைகீழாகக் கவிழ்ந்து அந்தப் பெருந்தகை கீழே விழுந்து சிறிது தூரம் தரையில் இழுத்துச் செல்லப்பட்டார். உடனேயே அவர் விடுவிக்கப்பட்டார். என்றாலும் தனக்கு ஏற்பட்ட காயங்களைக் குணப்படுத்துவதற்காக கோபர்பாங்வ் மருத்துவமனைக்குச் சென்று படுக்க வேண்டியதாயிற்று. இத்தகைய அனுபவங்கள் கணக்கில் அடங்கா . பாபாவின் ஆணைக்களுக்குக் கீழ்படியாதர்கள் ஏதோ ஒரு விதத்தில் விபத்துக்குக்குள்ளானார்கள் என்றும் அவைகளுக்குக் கீழ்ப்படிந்தவர்களோ பத்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தனர் என்றும் எல்லா மக்களும் பாடம் கற்றுக் கொண்டனர்.

(இன்னும் ஞானத்தை தேடுவோம்)

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 624

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | |
| | ■ | 6 | | 7 | | | ■ |
| 8 | 9 | | ■ | 10 | | ■ | 11 |
| 12 | | ■ | 13 | | | 14 | |
| ■ | 15 | 16 | | | ■ | 17 | |
| 18 | | | | ■ | 19 | | |
| 20 | | ■ | 21 | 22 | | ■ | |
| | ■ | 23 | | | | | ■ |

அனுப்புபவர் பெயர்:..................................................

விலாசம்:..................................................

..................................................

கையொப்பம்:..................................................

### மேலிருந்து கீழ்

1. உழைத்துப் பெறு.
2. சமயம்.
3. மூன்று.
4. மனப்பாடம் செய்தல்.
5. தமது.
7. சகோதரிகளின் கணவன்மாரிடையேயான உறவு.
9. பார்வைக்கு வைக்கும் நிகழ்வு.
11. வலிமை உடையவன்.
13. நீங்குதல்.
14. கூறு.
16. கிரீடம்.
18. விமான ஓட்டி.
19. தஞ்சம் புகுதல்.
22. மார்புக்கும்.முதுகுக்கும் இடைப்பட்ட நெஞ்சறைப் பகுதி.

### இடமிருந்து வலம்

1. இணங்கு.
4. பாதைக்குக் குறுக்காக நீர் பாய்வது இதன் வழியே.
6. பார்வைக்குக் கிட்டுதல்.
8. பகுதி.
10. பாரமான.
12. வலிமை.
13. வெற்றுப் பேச்சு.
15. தூர்த்தன்.
17. சேர்.
18. விளக்கில் வீழும் பூச்சி.
19. அனைத்து.
20. பனி மூசிப் பெய்யும் மாதம்.
21. மேலும் எனப் பொருள்படும்.
23. பல வருடங்கள்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 624

சொற்சிலம்பம் போட்டி 623ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு ஜீன் 25ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே ஜீலை02 ஆம் மற்றும் ஜீலை 09 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 622க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

*1.பிரமாதம், 2.சமர்த்தன், 3.வலை, 4.சரண், 5.தாண்டவம், 7.அகம், 9.தரி, 10.அரசு, 12.திரிபுரா, 14. ஆலை, 15.அருவி, 16.அம்மா, 17.பசி, 19.ரோம்,*

**இடமிருந்து வலம்**

*1.பிரசவம், 4.சதா,6.மலை, 7.அரண், 8.மாதர், 10.அகண்ட, 11.தரித்திரம், 13.சரிசு, 14.ஆம், 15.அன்பு, 16.அலை, 17.பசு, 18.ராகம், 20.சிவிகை,21.விமானம்,*

### போட்டி இல. 621இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | **திருமதி வளர்மதி மகவதாஸ்,** 3ஆம் வட்டாரம், முள்ளியவளை. |
| 2 ஆம் பரிசு | **இ. விபிதா,** இலந்தை கலட்டி, நகுலேஸ்வரா வீதி, கீரிமலை. |
| 3 ஆம் பரிசு | **மோனிங்ஸ்ரார் தேவதாஸ்,** முருங்கன்பிட்டி, முருங்கன். |

### பாராட்டுப் பெறுவோர்

(1) **வி. கரிகரன்,**
1ஆம் வட்டாரம், முள்ளியவளை.

(2) **க. கௌரிதேவி,**
வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டை.

(3) **நீ.துஷ்யா,**
சென்றஆன்ஸ், றோ.க.த. பாடசாலை,மானிப்பாய்.

(4) **சி. இராசரத்தினம்,**
பூம்பொழில், திருநகர் தெற்கு, கிளிநொச்சி.

(5) **புஷ்பம் மரியதாசன்,**
மங்கள இல்லம்,நவாலி தெற்கு, மானிப்பாய்.

(6) **வ.ஆ.அதிரூபசிங்கம்,**
அம்மன் கோவிலடி,வல்வெட்டித்துறை.

(7) **குலசிங்கம் அட்சரன்,**
யாழ்-இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

(8) **ர. தேவ்காந்,**
61/6, பாரதி வீதி, யாழ்ப்பாணம்.

(9) **அ. பொ. திரவியநாதன்,**
பொன்னையா வீதி , ஆனைக்கோட்டை.

(10) **திருமதி. தி. புவனம் ,**
வேரபகேணிகந்தசுவாமி கோவிலடி, மட்டுவில் தெற்கு , சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணையத்திலும் இனி "இச்! இச்! இச்!!"

பேஸ்புக், ஸ்கைப் என்று இணையம் மூலம் காதலைப் பரிமாறிக் கொள்ளும் காதலர்கள், காதலுக்கு உயிர்நாடியான முத்தத்தை அதே உணர்வுடன் உயிரோட்டமாகப் பரிமாற முடிவதில்லை. அதற்குத் தற்போது தீர்வு வந்துள்ளது.


உங்கள் அன்பு முத்தத்தை, நீங்கள் எப்படிக் கொடுக்கிறீர்களோ, அதே உணர்ச்சியுடன் உலகின் வேறொர் மூலையில் இருக்கும் உங்கள் காதலுக்குரியவரும் இனி அனுபவிக்கலாம்.

அதற்காக ஒரு கருவி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உங்கள் இணையவசதியுள்ள கணினியில் இணைக்கப்பட்டுள்ள உருண்டை பந்து போல் இருக்கும் அந்தக் கருவியில் பொருத்தப்பட்டுள்ள உதட்டில் நீங்கள் முத்தத்தை கொடுக்க அதே நொடி அது போன்ற கருவியை தனது உதட்டுடன் ஸ்பரிசத்தில் வைத்திருக்கும் உங்கள் காதலுக்குரியவர் அந்த முத்தத்தை அனுபவித்துக் கொள்ளலாம். அதே போல் அவரால் கொடுக்கப்படும் முத்தம் உங்கள் உதடுகளையும் வந்தடையும்.

காதலனும், காதலியும் குறித்த கருவிகளில் இரண்டை வாங்கி ஆளுக்கொன்றாக வைத்திருந்தால் போதும், வேண்டிய நேரத்தில் முத்தத்தை பரிமாறிக்கொள்ளலாம்.

இக் கருவிக்கு Kiss Messenger என்ற பொருள் பட 'Kissenger' என்ற பெயர் வைத்துள்ளனர்.

இனி வரும் காலங்களில் காதலர் தின பரிசாக இந்தக் கருவிதான் இடம்பிடிக்கும் என்பதில் ஐயமில்லை.



# தற்கொலை காதல் தோல்விக்கு மருந்தா?

மலரினும் மெல்லியது காதல் என்பார்கள். பதின்ம வயதில் காதல் அனைவருக்கும் கண்டிப்பாக வரும். அது பருவ வயதில் இனக்கவர்ச்சி .இருபதுகளில் வருவது காதல் தான். காதலுக்கும் காமத்துக்கும் இடைவெளி சிறிதளவே. காமத்தின் மறு வெளிப்பாடு காதல் என்று உளவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள் .காதல் முதலில் முக அழகையும் ,நிறத்தையும் வைத்து தான் வருகிறது.பின்னேர் காதல் நிலைத்து இருப்பது அன்பினால் மட்டுமே . இருவரும் காதலித்து திருமணம் வரை சென்றாலே அதுபெரிய விடயம்.கடைசிவரைக்கும் சேர்ந்து வாழ்வது என்பது இந்த அவசர காலத்தில் போற்றுதலுக்கு உரியது.இது இருவருமே காதல் செய்தால் மட்டுமே சாத்தியம் திரைப்படமும் ,சின்னத்திரை நிகழ்ச்சிகளும் மக்களை வெகுவாகப் பாதிக்கின்றன.திரைப்படம் என்பது ஒரு பொழுதுபோக்கு மட்டுமே. திரை அரங்குகளை விட்டு வெளியில் வரும் போது எல்லாவற்றையும் விட்டு விட வேண்டும்.பெரும்பாலும் இந்தியத் திரைப்படங்களைப் பார்த்தால் காதலர்கள் ஒன்று சேருவது தான் கதையின் முடிவாக இருக்கும்.நாயகன் ,நாயகி திருமணம் முடிந்த பின் உள்ளவாழ்க்கையை பலரும் திரையில் காட்ட முன்வருவதில்லை. பொதுவாக காதல் என்பது ஒரு முறையும், காமம் என்பது பல முறையும் வருவதுண்டு.

காதல் என்ற உணர்வு தானாகவே வருவது . காதலைஅடையப் பலர் இரக்கத்தால் , பணத்தால் , வீரதீர செயல்களால் , புகழால் இன்னும் பல வழிகளில் முனைவதுண்டு. ஒருவர் தனக்கு விருப்பம் இல்லை என்று சொன்ன பிறகும் அவரை வற்புறுத்துவது நல்ல செயல் அல்ல. இது தானாக் கனிவதைத் தடியால் அடித்து கனிய வைப்பதற்கு ஒப்பாகும். பலர் தங்கள் காதலை ஏற்காவிட்டால் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக மிரட்டுவதும் உண்டு.காதலை ஏற்றுக்கொள்ளாததால் தற்கொலைசெய்து கொள்வது அறியாமையாகும் .

நாம் பிறந்த மண்ணுக்கு, வீட்டுக்கு, நாட்டுக்கு, நன்றிக் கடன் பட்டவர்களுக்கு என்ன செய்தோம் என்று ஒரு கணம் யோசித்தால் "திரிஷா இல்லாவிட்டால் திவ்யா" என்ற மன நிலைமைக்கு பலர் வந்து விடுவார்கள் . ஒரு தலையாகக் காதல் கொண்டு, அதனை உரியவரிடம் சொல்லாமல் மனதுக்குள்ளேயே வைத்து கொண்டு இருப்பதால் மன அழுத்தம் அதிகரித்து தேவையற்ற விளைவுகளை ஏற்படுத்தும்.நல்ல நண்பர்கள் இருந்தால் யதார்த்தத்தை சொல்லி பழைய நிலைமைக்கு கொண்டு வரலாம் .அதிக எதிர்பார்ப்பு ஏமாற்றத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தும் .கோபத்தின் அடுத்த நிலை வன்முறை .

வளர்ந்த வெளிநாடுகளில் காதல் முதல் காமம் வரைபாவமாகவோ, குற்றமாகவோ கருதுவதில்லை.அவரவர் துணையை அவரவரே தான் தேடிக் கொள்வர்.ஒருவரையொருவர் புரிந்து கொண்டு வாழ்க்கை தொடங்குவதற்கு தேவையான வசதிகளை எல்லாம் சேர்த்த பிறகே திருமணம் செய்வர். நண்பர்களாக (கணவன் ,மனைவி போல ) வாழ்வோரும் அதிகம் உண்டு.இதற்கும் ஒரு ஒப்பந்தம் உண்டு.பிரிந்தாலும் இழப்பீடு கொடுக்க வேண்டியதில்லை ஆனால் எங்கள் நாட்டில் தான்மணந்தால்மல்லிகா இல்லாவிட்டால் மரணதேவி என்று ஒருதலைக் காதலோடு அலைந்து, தங்கள் உயிரையும் மாய்த்துக் கொள்ளும் பலர் இருக்கிறார்கள். இவர்கள் இனியாவது யதார்த்தத்தை உணர்ந்து, உயிரின் பெறுமதி அறிந்து, உண்மைக் காதலைக் கண்டடைந்து வாழ வழி தேடவேண்டும். தேடினால் எல்லாமே கிடைக்கும்.

## காதல் அகராதி

காதல் என்பது
இத்தாலியில் அதிசயம்
இங்கிலாந்தில் சோகம்
எகிப்தில் நாடகம்
இலங்கையிலோ பெண்களின் தேசிய விளையாட்டு

# காதலர் மட்டும்

தொகுப்பு : சுபிதி



## பிரிந்தவர் கூடினர்

1945 ஆம் ஆண்டு பிரிந்த காதல் ஜோடியொன்று 70 வருடங்கள் கழித்து மீளவும் இணைந்து கொண்ட விநோதச்சம்பவம் அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

1945 ஆம் ஆண்டில் 17 வயதான சக் ரெட் லெவிஸூம் 16 வயதான சான்டி பிரான்சி றிக்கின்ஸூம் கலிபோர்னிய கடற்கரையில் சந்தித்து முதல் பார்வையிலேயே காதல் கொண்டனர்.

இந்தநிலையில் சான்டியின் குடும்பம் லொஸ் ஏஞ்செல்ஸூக்கு சென்றதையடுத்து அவர்களிடையேயான காதல் தொடர்பும் முறிவ டைந்தது.

தொடர்ந்து அவர்கள் இருவரும் வெவ்வேறு வாழ்க்கைத் துணைகளு டன் திருமண வாழ்வில் இணைந்தனர்.

காலப்போக்கில் தமது வாழ்க்கைத் துணைகளை இழந்து தனிமை யில் வாழ்ந்த லெவிஸீம் (85 வயது), சான்டியும் (84 வயது)

7 வருடங்களுக்கு முன் இணையம் மூலம் ஒருவரையொருவர் எதிர்பாராத விதமாக தொடர்புகொண்டனர்.

இதனையடுத்து, அவர்களிடையேயான காதல் மீண்டும் துளிர்விட்டு அவர்கள் இருவரும் திருமண பந்தத்திலும் இணைந் துள்ளனர்.

உண்மையான காதல் எத்தனை வருடங்கள் கழிந்தாலும் நிறைவேறியே தீரும் என்பதற்கு இவர்கள் இருவரும் உலகத்துக்கு உதாரணமாகிவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சுரேஷ் இயக்கத்தில் ஜெயம்ரவி



அலெக்ஸ் பாண்டியன் படத்திற்குப் பின்னர் இயக்குநர் சுராஜ் இயக்கும் படத்தில் ஜெயம் ரவி கதாநாயகனாக நடிக்கின்றார்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் வரை பல வெற்றிப் படங்களைக் கொடுத்து, படத் தயாரிப்பிலிருந்து ஒதுங்கியிருந்த ஒரு முன்னணி தயாரிப்பு நிறுவனத்தினர் இந்தப் படத்தைத் தயாரிக்க உள்ளார்களாம்.

ஜெயம் ரவிக்கு ஜோடியாக யாரை நடிக்கவைக்கலாம் என அலசிப் பார்த்திருக்கிறார்கள். பொதுவாக படத்திற்குப் படம், புது ஜோடியுடனே நடிக்கும் ஜெயம் ரவியுடன், இதுவரை யார் ஜோடி சேர்ந்ததில்லை என ஆராய்ந்து, நடிகையை தீர்மானிக்கவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



படம் : முண்டாசுப்பட்டி

## கிராமத்தை மையப்படுத்தி முண்டாசுப்பட்டி

குறும்படமாக எடுக்கப்பட்ட பல படங்கள் திரைப்படமாக எடுக்கப்பட்டு வெற்றி பெற்று வருகிறது. 'காதலில் சொதப்புவது எப்படி', 'பண்ணையாரும் பத்மினியும்' , 'விழா' போன்ற படங்கள் முதலில் குறும் படமாக எடுக்கப்பட்டவை.

அந்த வரிசையில் குறும்படமாக எடுக் கப்பட்டு முழுநீளத் திரைப்படமாக உரு வாகியிருக்கும் படம் 'முண்டாசுப்பட்டி'. அறிமுக இயக்குநர் ராமின் முதல் படம் இது.

'முண்டாசுப்பட்டி' என்பது ஒரு கிராமம். இங்கு 1947 இல் ஒரு சம்பவம் நடக்கிறது. அந்த நிகழ்வுக்குப் பிறகு அந்த கிராமத் தில் உள்ள யாரும் புகைப்படம் எடுத்துக் கொள்வதில்லை. மீறி எடுத்துக் கொண் டால் மரணம் நிச்சயம் என்ற மூட நம் பிக்கையில் இருக்கிறார்கள்.

இந்தநிலையில் படத்தின் நாயகனான விஷ்ணு, தனது நண்பன் காளியுடன் அந்த கிராமத்துக்கு வருகிறார். புகைப் படக் கலைஞனான அவர் எடுக்கும் புகைப் படத்தால் சில பிரச்சினைகள் ஏற்பட அந்த கிராமத்து மக்கள் இருவரையும் கிராமத் தில் சிறை வைக்கிறார்கள்.

அதன் பிறகு நடக்கும் சம்பவங்களை நகைச்சுவையுடன் கூறியுள்ளனர். படத்தின் கதை 1980இல் நடப்பதாக சித்தரித்துள்ளனர்.

படம் ஜூன் 13இல் வெளிவருகிறது.



## சிம்புதேவனுடன் விஜய்

விஜய் அடுத்து சிம்புதேவனுடன் கைகோர்க்க போகிறார்.

இதில் விஜய்க்கு ஜோடியாக ஸ்ருதிஹாசன், ஹன்சிக ஆகிய இருவரும் நாயகிகளாக நடிக்கிறார்கள். விஜய்யுடன் ஸ்ருதிஹாசன் நடிப்பது இதுவே முதல் முறை.

மேலும், இப்படத்தில் ஸ்ரீதேவி , 'நான் ஈ' படத்தில் நடித்த சுதீப் ஆகியோர் நடிக்க இருக்கிறார்கள். இதில் நடிப்பதற்காக சுதீப்புக்கு ஆறு கோடி சம்பள வழங்கப்படுகிறது.

தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைப்பாளராக ஒப்பந்த செய்யப்பட்டுள்ளார். நட்டி நட்ராஜ் ஒளிப்பதிவு செய்கிறா முத்துராஜ் கலை இயக்குநராகப் பணியாற்றுகிறார்.

## பெயரை மாற்றிய நடிகை

தமிழ் சினிமாவில் கற்க கசடற படத்தின் மூலம் அறிமுகமான பெல்காம் அழகி லட்சுமிராய். சினிமாவுக்கு வந்து 10ஆவது ஆண்டை நெருங்கினாலும் இன்னும் அவரால் முன்வரிசைக்கு வர முடியவில்லை.

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிகளில் 50 படத்துக்கு மேல் நடித்துவிட்டார், கிரிக்கெட் வீரர் டோனி, ஸ்ரீசாந்துடன் நெருக்கம், பெங்களூர் அரசியல் புள்ளியுடன் தொடர்பு என அவரைப் பற்றி நிறைய கிசுகிசுக்கள்தான் வந்ததே தவிர படங்கள் வரவில்லை. இதனால தனது குடும்ப சோதிடரின் ஆலோசனைபபடி தனது பெயரை ராய் லட்சுமி என்று திருப்பி போட்டிருக்கிறார்.

இதுவரை எந்தவொரு தமிழ், தெலுங்கு நடிகை யும் இவ்வளவு பெரிய தொகையை சம்பளமாக வாங்கியது இல்லை! என்று சொல்லும் அளவுக்கு எக்கச்சக்கமாக உயர்ந் திருக் கிறது நயன்தாரா, அனுஷ்காவின் சம்பளம். இவர்களின் சம்பளம் 3 கோடி ரூபாய்!

ஹிந்தியில் வெற்றிபெற்ற கஹானி படத்தின் தெலுங்கு வெளியீடான அனாமிகா படத்துக்

ஐஸ்வர்யா தனுஷ் இயக்கும் படம் 'வை ராஜ வை'. இப்படத்தில் கௌதம் கார்த்திக், பிரியா ஆனந்த், விவேக், டேனியல் பாலாஜி என நட்சத்திரப் பட்டாளமே நடித்து வருகிறது.

இதன் முன்னோட்டம் சமீபத்தில் வெளிவந்து ரசிகர் களிடையே நல்ல வரவேற்பு பெற்றது. தற்போது படத்தை பற்றி ஒரு தகவலை ஐஸ்வர்யா தனுஷ் தனது டுவிட்டர் வலைத்தளத்தில் தெரிவித்துள்ளார்.

இதில் 'படத்தின் 90% படப்பிடிப்பு முடிவடைந்து விட்டது. கோவாவில் தற்போது முதற்கட்ட படப்பிடிப்பு முடிவடைந்த நிலையில் மீண்டும் சென்னையில் மீதிப் படப்பிடிப்பு தொடரும்' என தெரிவித்துள்ளார்.

## மகிழ்ச்சியில் திளைக்கும் பார்வதிமேனன்

சசி இயக்கத்தில் தமிழில் நாயகியாக அறிமுகமானர் பார்வதி மேனன். படத்தில் பார்வதி மேனன் நடிப்பில் பட்டையைக் கிளப்பியிருந்தாலும் பெரிதாக வாய்ப்புகள் எதுவும் வரவில்லை. கடந்த வருடம் தனுசுடன் ஜோடியாக மரியான் படத்தில் நடித்திருந்தார். அதன்பிறகு மலையாளப் படங்களில் மட்டுமே நடித்துக் கொண்டிருந்தார்.

அப்போதுதான் கமலின் உத்தமவில்லன் படத்தில் நடிக்க பார்வதிக்கு அழைப்பு வந்தது. இதில் கமலுக்கு மருமகளாக, அதாவது ஜெயராமின் மகளாக நடிக்கும் வேடம்தான் கிடைத்தது. இருப்பினும், கமலுடன் நடிக்க வேண்டும் என்ற கனவை இந்தப் படம் மூலம் நனவாக்கிக்கொள்வோம் என்று ஒப்பந்தமான பார்வதிமேனன், இப்போது நடித்தும் முடித்து விட்டார்.

அதனால், தமிழில் இதுவரை மூன்று படங்களில் நடித்தபோதும், நான்காவது படத்திலேயே கமலுடன் நடித்தது எனக்கு சந் தோசமாக உள்ளது, என தனது மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்கிறார் பார்வதிமேனன்.



பார்வதி மேனன்



பகடை பகடை
திலீப் குமார், திவ்யா சிங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் அஞ்சலி

சில மாதங்களாக சினிமாவைவிட்டு விலகி இருந்த அஞ்சலி இப்போது மீண்டும் பழைய தீவிரத்துடன் நடிக்க திரும்பி விட்டார். தனது பழைய கசப்பான அனுபவங்களை மறந்து நடிப்பில் தீவிர கவனம் செலுத்த தொடங்கி விட்டார்.

தற்போது கோனா வெங்கட்டின் தெலுங்கு படம் ஒன்றில் கடந்த 20 நாள்களாக நடித்து வருகிறார். இதன் படப்பிடிப்பு பாங்காக் மற்றும் தாய்லாந்தில் நடந்து வருகிறது. இதுதவிர இரண்டு தெலுங்கு படத்திலும் ஒரு கன்னட படத்திலும் நடித்து வருகிறார்.

அத்துடன் சுராஜ் இயக்கத்தில் ஜெயம்ரவி நடிக்கும் நகைச்சுவை படத்தில் அஞ்சலியை நடிக்க வைக்கப் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதுதவிர இன்னும் இரு புதுப்படங்களில் ஒப்பந்தம் செய்ய பேச்சு நடந்து வருகிறது.

## கமல் படத்தை வெளியிடுவதில் சிக்கல்

தற்போது 'விஸ்வரூபம் 2, உத்தம வில்லன்' ஆகிய இரண்டு படங்களில் நடித்து வருகிறார் கமல். இ_த படங்களையடுத்து 'த்ரிஷ்யம்' படத்தில் நடிக்க உள்ளார். 'விஸ்வரூபம் 2' படம் வேகமாக வளர்ந்த நிலையில், இப்போது அப்படியே நிற்கிறது.

'விஸ்வரூபம்' படத்தை கமல்ஹாசன் திரையிட்டபோது அவருக்கும், திரையரங்கு உரிமையாளர்களுக்கும், விநியோகஸ்தர்களுக் கும் இடையே பிரச்சினை உருவாகின. முற்பணம் கொடுத்தவர்களை விட்டுவிட்டு வேறு சிலருக்கு அவர் படத்தை திரையிட அனுமதி அளித்ததாகக் கூறப்படுகிறது. இதனால், அவர்கள் இப்போதே பிரச்சினைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



படம்: யான், ஜீவா,

## இளையராஜாவின் பிறந்தநாளில்....

சாலி கிராமத்தில் தனது 71ஆவது பிறந்த நாளை மரக்கன்றை நாட்டி கொண்டாடினார் இசையமைப்பாளர் இளையராஜா. பின்னர் அவரால் எழுதப்பட்ட புத்தகங்களின் தொகுப்பு வெளியீட்டு விழா நடைபெற்றது. இயக்குநர் பாலா இதில் பங்கேற்று புத்தகங்களை வெளியிட்டார். இளையராஜாவின் பிறந்த நாளையொட்டி தமிழகம் முழுவதும் 71 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டதாக அவரது ரசிகர்கள் அறிவித்துள்ளனர்.

## இழுபறியில் சிம்புவின் படங்கள்

சிம்பு கதாநாயகனாக நடித்த எந்தப்படமும் கடந்த இரண்டு வருடங்களாகத் திரைக்கு வரவில்லை. அதனால், இந்த ஆண்டு எப்படியாவது இரண்டு படங்களை ரசிகர்களின் பார்வைக்கு விட்டு விட வேண்டும் என்ற முடிவுடன் இருக்கும் சிம்பு, வாலு படத்தை முடித்து விட்ட கையோடு இது நம்ம ஆளு பட வேலைகளிலும் தற்போது ஈடுபட்டுள்ளார்.

இந்தநிலையில், அவர் கௌதம்மேனன் இயக்கத்தில் நடித்து வந்த சட்டென்று மாறுது வானிலை, செல்வராகவன் இயக்கத்தில் நடிக்கவிருந்த இரண்டு படங்கள் பற்றி எந்த தகவலும் இல்லை. அதனால் இதுபற்றி சிம்பு தரப்பில் இருந்து வரும் தகவல்களின் படி,

கௌதம் மேனன் இயக்கத்தில் நடிக்கும் படம் கிட்டத்தட்ட பாதி முடிந்து விட்டது. அந்த நேரம் பார்த்து, அஜித் படத்திற்கு நேரத்தை ஒதுக்கி விட்டதால், அவர் படத்தை இயக்கியாக வேண்டிய கட்டாயம் கௌதம்மேனனுக்கு ஏற்பட்டது. அதோடு, அவரைப்பொறுத்தவரை அந்த படம் இப்போதை சூழ்நிலை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், முதலில் அந்த படத்தை முடித்து விட்டு வாருங்கள். அதற்குள் நானும், வாலு, இது நம்ம ஆளு படங்களை முடித்து விடுகிறேன். அதையடுத்து மீண்டும் நாம் சட்டென்று மாறுது வானிலை படத்தை தொடங்கலாம் என்று சிம்புவே கௌதம்மேனனிடம் சொல்லி விட்டாராம்.



திரையுலகின் முன்னணி நடிகை நயன்தாரவின் வாழ்க்கையை படமாக எடுக்க முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன.

நயன்தாராவின் பலம் அவரது தைரியம்தான். காதல் பிரிவில் இருந்து மீண்ட நயன் மீண்டும் திரையுலகிற்குள் முதல் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டிருப்பது. முன்னணி நடிகர்களுடன் நடிப்பது என மீண்டும் தன்னை நிரூபித்துக் கொண்டே இருக்கிறார். அதனால், தான் மூன்று கோடி சம்பளம் வாங்கும் நிலைக்கு உயர்ந்திருக்கிறார்.

இந்நிலையில், நயன்தாராவின் வாழ்க்கையை படமாக எடுக்க ஒரு புதுமுக இயக்குநர் ஆர்வமாய் இயங்கிவருகிறார். ஆனால், நயன்தாராவோ இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் த்ரிஷாவின் பிறந்த நாள் விழாவில் சிம்புவுடன் நயன்தாரா நெருக்கமாக நின்று கொண்டிருப்பதுபோல் ஒரு புகைப்படம் வெளிவந்தது. இதனால் மறுபடி'யும் இவர்கள் இருவரும் காதலிக்கிறார்களா என்ற கேள்விகளும் வந்தன.

இந்த நேரத்தில் நயன்தாராவின் வாழ்க்கையைப் படமாக எடுத்தால் நல்ல வரவேற்பு இருக்கும் என்பதால் புதுமுக இயக்குநர் நயன்தாராவை அணுகியுள்ளார். ஆனால் கோபம் கொண்ட நயன்தாரா 'என் வாழ்க்கையை'ப் படமாக எடுக்க வேண்டாம்' என்று மறுத்துவிட்டாராம்.

காக நயன்தாராவுக்கு 2 கோடி சம்பளம் கொடுக்கப்பட்டது. இந்தப் படம் நீ எங்கே என் அன்பே என்ற பெயரில் தமிழில் வெளியானது. இரண்டு மொழிகளிலும் படம் படுதோல்வி தமிழில் அஜீத் ஜோடியாக நடித்த ஆரம்பம், ஆர்யாவுடன் நடித்த ராஜாராணி, உதயநிதியுடன் நடித்த இது கதிர்வேலன் காதல்ஆகிய மூன்று படங்களுமே பெரிய வெற்றியை அடையவில்லை.நயன்தாரா அது பற்றி கவலையேப்படாமல் தன் சம்பளத்தை 3 கோடியாக்கிவிட்டார்.

இவரைப்போல் அனுஷ்காவின் சம்பள மும் விண்ணைத்தொடுமளவுக்கு உயர்ந்து விட்டது. ருத்ரமாதேவி என்ற சரித்திரப் படத்தில் நடிக்க இரண்டு கோடி ரூபாய் சம்பளம் பெற்றுள்ளார் அனுஷ்கா. அடுத்தடுத்து தேடி வந்த படங்களில் நடிக்க மூன்று கோடி சம்பளம் வாங்கி இருக்கிறாராம்.



## தொடுகளில் நடிக்கும் நடிகைகள்

## விவேக்கின் 'நான்தான் பாலா'

இதுவரை படங்களில் நகைச்சுவையில் கலக்கிய விவேக் 'நான்தான் பாலா' என்ற படத்தில் கதாநாயகனாக புதிய பரிணாமத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்தை பாலாவிடம் உதவி இயக்குனராக பணியாற்றிய கண்ணன் இயக்குகிறார். வெங்கட் க்ரிஷி இசையமைக்கிறார். இதன் படப்பிடிப்பு முடிவடைந்து தற்போது வெளியீட்டுக்கு தயாராக உள்ளது.

இப்படத்தில் அனைத்து விடயங்களும் உண்மைத் தன்மையாக இருக்கவேண்டும் என்பதற்காக, விவேக் முறையாக சமஸ்கிருதம் பயின்றுள்ளார். இந்த ஒரு முழுநீள வர்த்தகப் படமாக உருவாகியுள்ளது.

இப்படத்தை டிரிபிள் எஸ் எண்டர்டெயின்மெண்ட் நிறுவனம் சார்பில் ஜே.ஏ.லாரன்ஸ் தயாரித்துள்ளார். இப்படத்தின் பாடங்கள் சமீபத்தில் வெளியாகி அனைவரிடமும் பலத்த ஆதரவை பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலம் - 19

மகாலிங்கம் பத்மதாபன்

## 3 கிராமங்களின் கதை

# அது ஒரு அழகிய நிலாக்காலம்

### வைத்தீஸ்வரக் குருக்கள்

மூன்று கிராம மக்களின் கதையை எழுதும்போது முதன் முதலில் இவரைப்பற்றித் தான் எழுதியிருக்க வேண்டும்., இவர் மூன்று கிராமமக்களின் இரண்டு தலைமுறையினருக்கு 'கோட்பாதர்' (புழன குயவாநச ) போன்றவர். கிளிஃபரந்தன் அ.த.க.பாடசாலையின் ஆசிரியராக முதன் முதல் நியமனம் பெற்று வந்தவர். பாடசாலையின் விடுதியில் மனைவி, பிள்ளைகளுடன் தங்கி மூன்று கிராமத்துப் பிள்ளைகளுக்கு இலவசமாக மாலை வகுப்புக்களை வைப்பார். காரை நகரைச் சேர்ந்தவர். வைத்தீஸ்வரக் குருக்கள் அந்தணராகப் பிறந்தவர். உண்மையான அன்பு, பண்பு, ஆற்றல், அறிவு மிக்கவராக இருந்தார். சாதி பார்க்கு மூடத்தனத்தை மாற்றியவர். பாடசாலையில் எல்லோரையும் சமமாக நடத்திக் காட்டியவர். காந்தீயவாதி. மகாலிங்கன், பாலசுந்தரம் முதலியவர்களுக்கு ஆரம்பக் கல்வியை ஊட்டி மகாலிங்கனை யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலைக்கும், பாலசுந்தரத்தைச் சாவகச்சேரிக்கும் சென்று இடைநிலைக் கல்வியைத் தொடர ஊக்குவித்தவர்.

சில வருடங்களுக்கு முன்னர் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் பற்றி பாமாலை இயற்றி வெளியிட்டவர். யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் அதிபராக இருந்த சரவணபவான் இவரது மருகர் எனக் கூறக் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

இவர் பரந்தன் அ.த.க.பாடசாலை விட்டுப் பயிற்சிக் கலாசாலை சென்று, பின் மலைநாட்டில் சேவையாற்றி, முதிய வயதில் மீண்டும் பரந்தன் அ.த.க.பாடசாலையிற்கு அதிபராக வந்தார். நாங்கள் இவரிடம் ஆரம்பக் கல்வியையும், பண்பாடுகளையும், ஒழுக்கத்தையும் கற்றுக் கொண்டோம். யாழ்ப்பாணம் சென்று இடைநிலைக் கல்வியைப் பெறத் தூண்டப்பட்டோம்.

எங்கள் கிராமத்துச் சிகையலங்கார நிபுணர் பெயர் பரமர் என்றுதான் ஞாபகம். அவர் மனைவி மட்டுவிலைச் சேர்ந்தவர். படித்தவர். தனது பிள்ளைகள் படிப்பதற்கு ஏற்றதா என நேரில் வந்து பார்த்து வைத்தீஸ்வரக் குருக்களுடன் கதைத்து திருப்தியடைந்த பின்னரே குடும்பமாக எமது கிராமத்தில் வந்திருக்கச் சம்மதித்தவர். அவரது மகன் என்னுடன் மூன்றாம் வகுப்பு ஆரம்பத்தில் வந்து சேர்ந்தார். நல்ல நண்பராக இருந்தார். எனது சிறுவயது அறியாமையால் அவரை ஒரு நாள் சாதிப் பெயர் சொல்லி அழைத்துவிட்டேன். அவரும் அழுது கொண்டு தன் வீட்டிற்குச் சென்றார். சிறிது நேரத்தில் தாயார் புலிபோல ஆவேசமாக வந்தார். அதிபரிடம் புகார் செய்தார். வைத்தீஸ்வரக் குருக்களும் உடனேயே உதவியாக இருந்த ஒரு ஆசிரியையும், மாணவர்களையும் கூட்டி என் சார்பில் தாயாரிடம் தானே மன்னிப்புக் கேட்டார். மாலை என்னை அழைத்து நான் விட்ட பிழையை அன்பாக, ஆதரவாக எடுத்துரைத்தார். எனது தந்தை, தாயாரும் அவ்வாறு கதைப்பது பிழையெனவும் அடுத்த நாள் காலை வணக்கத்தின் பொழுது அந்த நண்பரிடம் எல்லோர் முன்னிலையிலும் மன்னிப்புக் கேட்குமாறு கூறினர். அடுத்தநாள் அந்த நண்பரிடம் வைத்தீஸ்வரக் குருக்கள் முன்னிலையில் மன்னிப்புக் கேட்டேன். அன்று தொடக்கம் அந்த ஆண்டு முடியுமட்டும் அவருடன் மிகவும் நட்பாகவும், அன்பாகவும் பழகினேன். அடுத்த ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு கற்பதற்காக முதலிலே சென்றிருந்த மூத்த சகோதரரைத் தொடர்ந்து நானும் செல்ல வேண்டியதாயிற்று.

வைத்தீஸ்வரக் குருக்கள் விவேகானந்தரைப் பற்றி, மகாத்மா காந்தி பற்றி, நாவலர் பெருமாள் பற்றி, சாதி, மத பேதத்தின் அறியாமைபற்றி, கௌதம புத்தர் பற்றி, பஞ்சபாண்டவர் பற்றி, இராம லக்குமணர் பற்றி சிறு வயதில் கூறிய கதைகள் அப்படியே பசுமரத்தாணி போல மனதில் பதிந்துவிட்டது. அதனால் அவரளவிற்கு இல்லாவிட்டாலும் ஓரளவு நல்ல ஆசிரியராகவும், சிறந்த அதிபராகவும் சேவை செய்யக் கூடியதாக இருந்தது.

### உடுக்கடிப் பாடல்கள்

சித்திரை மாதத்தில் எமது கிராமத்தின் எல்லாக் கோவில்களிலும் சித்திரைக் கஞ்சி காய்ச்சுவர். ஆனால் எல்லாக் கோவில்களிலும் அவசரம் அவசரமாகக் காய்ச்சி, படைத்து, குடித்துவிட்டு எல்லோரும் பள்ளமோட்டைப் பிள்ளையார் கோவிலுக்குச் செல்வோம். அங்கும் பகலில் சித்திரைக் கஞ்சி காய்ச்சப்பட்டு விடும். பின் இரவுப் பூசையின் முன்னர் சித்திரைக் கதை பாடப்படும். செல்லையா பூசாரியாரும் மெம்பர் வல்லிபுரமும் மாரியம்மன் கதை, காத்தவராயன் கதை, சிறு தெய்வங்களான அண்ணன்மார் கதை, வீரபத்திரர் கதை முதலியவற்றை உடுக்கடித்தபடி பாடுவர். செருக்கனைச் சேர்ந்த தங்கத்துரை, செல்லத்துரை போன்றவர்கள் உடுக்கு அடிப்பதில் நிபுணர்கள். செல்லையா பூசாரியார் காதில் கடுக்கனும், உருத்திராக்க மாலையும் அணிந்திருப்பார். கிராம சபையின் உறுப்பினரான வல்லிபுரம் கடுக்கன் பூட்டிய காது, குடும்பி, தங்கச் சங்கிலியுடன் காட்சி அளிப்பார். பூசாரியார் சில பகுதிகளைப் பாட, மெம்பர் தொடர்ந்து பாட சித்திரக் கதை இரவிராக நடைபெறும். இவர்களது உடுக்கடிப் பாடல்களுக்கு தங்கத்துரை, செல்லத்துரை ஆகியோரின் உடுக்கடி மேலும் மெருகூட்டும். இளைஞராக இருந்த செல்லத்துரை பின்னாளில் பல நாட்டுக் கூத்துக்களை நடாத்தி செல்லத்துரை அண்ணாவியார் என்று பெயரெடுத்தார். சித்திரக் கதையைக் கேட்டு ரசிப்பதற்காக பூநகரி, மீசாலை, சாவகச்சேரியிலிருந்தெல்லாம் பக்தர்கள் வந்திருப்பர்.

### கோவில்கள் புனரமைப்பு

(அ) பள்ள மோட்டைப் பிள்ளையார் மூன்றாவது மண்டபம் அமைக்கப்பட்டு மடப்பள்ளியும் கட்டப்பட்டு சுற்றுமதில், தண்ணீர்த்தாங்கி முதலியவற்றுடன் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு இப்போது ஒழுங்காக தினப்பூசை நடைபெறுகின்றது. பெரியபரந்தனைச் சேர்ந்த முன்னாள் ஆசிரியை ஒருவரும், அவரது கணவரும் தற்போது கனடாவில் வசிப்பவர்கள். அவர்களே புனரமைப்பு, கும்பாபிஷேகம், பூசகர் சம்பளம் யாவற்றையும் பொறுப்பேற்றனர். அதுமட்டுமன்றிப் பெரிய பரந்தனின் சகல மாணவர்களுக்குமான மாலை வகுப்பை கோவில் மண்டபத்தில் இலவசமாக நடத்த ஒழுங்கு செய்து ஆசிரியையின் சம்பளத்தையும் வழங்கி வருகின்றனர்.

(ஆ) குழந்தையன் மோட்டைப் பிள்ளையார் கோவிலையும் பெரிய பரந்தனைச் சேர்ந்த கனடா வாழ் இளைஞர் தங்கராசா முரளி புனரமைத்து இரண்டாவது மண்டபம் கட்டிக் கும்பாபிஷேகம் செய்வித்தார். தினப்பூசை செய்யும் அந்தணர் சம்பளத்தையும் வழங்கி வருகின்றார். மணிக்கூட்டுக் கோபுரமும் அமைத்துள்ளார்.

குழந்தையன் மோட்டைப் பிள்ளையாருக்கும் காளி அம்மனுக்கும் ஐந்து ஏக்கர் காணி உண்டு. காணியின் தென்கிழக்கு மூலையில் பிள்ளையார் கோவிலும் வடமேற்கு மூலையில் காளி கோவிலும் உள்ளன. இக்கோவிலுக்கு பக்தர்கள் காட்டுப் பாதையினூடாகவே வாகனம் கொண்டுவரமுடியும். இதை மாற்றி அமைக்க எண்ணிய திரு.வே.சுந்தரலிங்கம் என்பார் பல காணி உரிமையாளர்களிடம் மனப்பூர்வமான அனுமதியைப் பெற்று பக்தர்களிடம் சேர்த்த பணத்தில் பூநகரி வீதியிலிருந்து 2 கிலோமீற்றர் நீளமுள்ள மண்பாதையை, இடைக்கிடை மதகுகள், குழாய்கள் வைத்து அமைத்துள்ளார். இப்போது பக்தர்கள் நேரடியாகவே பிள்ளையார் கோவில் வளாகத்திற்குச் செல்லமுடியும். கோவிலிற்கு ஒரு குழாய்க் கிணறும் அமைக்கப்பட்டுள்ளது. பாதையை அமைக்கவும் மடப்பள்ளி அமைக்கவும் பிரதான பங்கு ஆற்றியோர் திரு.வே.கந்தசாமி, திரு.சிவ.உதயன், சுந்தரலிங்கம் குடும்பத்தவர், திருமதி.கமலா கந்தசாமி, திருமதி சின்னக்கிளி, தருமர் குடும்பம்.

(இ) இக்கோவிலை அமைத்தவர் முத்தர் என்பார். அவர் மகன் கணபதிப்பிள்ளை. இவரின் மகனான சண்முகம் பூசாரி பரம்பரையாகப் பூசை செய்கின்றார். பல வருடங்களுக்கு முன் காட்டின் நடுவே கல், சூலம் முதலியவற்றால் கொட்டில்களில் அமைக்கப்பட்ட கோவில் அதன் அமைப்பு மாறாது சீமேந்துக் கட்டடமாக அமைக்கப்பட்டு கூரையும் நிரந்தரமாகப் போடப்பட்டுள்ளது. மடப்பள்ளி, மணிக்கூட்டுக் கோபுரம், கிணறு என்பனவும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. இதனை திரு கணபதிப்பிள்ளை குடும்பத்தவர்களும் திரு நல்லையா குடும்பத்தினரும் செய்துள்ளனர்.

(ஈ) இக்கிராமத்திலிருந்து கனடா சென்ற திரு சிதம்பிரப்பிள்ளை குடும்பத்தவர் இக்கோவிலைப் புனரமைத்து கும்பாபிஷேகம் செய்து நித்திய பூசைக்கும் ஒழுங்கு செய்துள்ளனர்.

---

இந்த ஓவியம் அழகாக உள்ளதா? இந்த ஓவியம்இலங்கையைச் சேர்ந்த ஒரு குட்டிப் பெண் வரைந்ததுதான். அவள் பெயர் கந்தகே கியாரா செனுலி ஃபெரேரா. 8 வயதாகும் அந்தச் சிறுமி இந்த ஓவியத்தை எதற்காக அவள் வரைந்தாள் என்று உங்களுக்குச் சொல்லவில்லையே.

ஐ.நா. சபையில் சுற்றுச்சூழல் செயல் திட்டத்துக்கான ஒரு அமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பு சார்பில் ஆசிய - பசிபிக் பிராந்திய சிறுவர்களுக்கான ஓவியப் போட்டி கடந்த மார்ச் மாதம் நடைபெற்றது. 'வீணாகும் உணவு' என்பதுதான் போட்டியின் தலைப்பு.

ஆயிரக்கணக்கான சிறுவர், சிறுமியர் இந்தப் போட்டியில் கலந்துகொண்டார்கள். இந்தப் போட்டியில் கந்தகே கியாரா செனுலி ஃ பெரேரா, பூமி உருண்டையை உண்டியல் போலக் கற்பனையாக வரைந்திருந்தாள். அதில் சிறுவர்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து உணவுப் பொருள்களைச் சேமிப்பது போன்று வரைந்திருந்தாள். இதுதான் ஆசிய ரீதியில் சிறந்த ஓவியமாகத் தேர்வு செய்யப்பட்டது. இதற்காக அந்தக் குட்டிப் பெண்ணுக்கு ஆயிரம் அமெரிக்க டொலர் பரிசு கொடுத்திருக்கிறார்கள்.

இதேபோல மற்ற கண்டங்களிலும் போட்டியில் பங்கேற்று சிறுவர்கள் படம் வரைந்திருக்கிறார்கள். அந்த ஓவியங்களுடன் இந்த ஓவியமும் தற்போது போட்டி போடப் போகிறது. அதிலும் வெற்றி கிடைத்தால் 2 ஆயிரம் அமெரிக்க டொலர் பரிசு கிடைக்கும். கிடைக்கவேண்டுமென நாமும் வாழ்த்துவோம்.



## உலக உண்டியலுக்குள் உணவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறியில் தப்புமா இலங்கை?

■ சு.கோமேஸ்



உலகின் அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு இராஜதந்திரியை விசா ரணைக் குழுவின் தலைவராக நியமித்து அதன் மூலம் இலங்கையை விசாரணைப் பொறியில் சிக்க வைப்பதே அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் திட்டம். அதற்கான காய்நகர்த்தல்களைத் தொடங்கி விட்டது சர்வதேசம்.

போர் தந்த கொடுமைகள் கொஞ்சமும் ஆறாத வடுக்களாக இன்னமும் நீள்கின்றன. இந்த நிலையில் இறுதிப்போரில் இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க சர்வதேச விசாரணை ஒன்று வேண்டும் என்பது தமிழர்களின் நீண்ட நாளையக் கோரிக்கை. அவர்களின் எதிர் பார்ப்பு தற்போது தான் நிறைவேறப் போகிறது போல தெரிகின்றது. உலகப்போரின் பின்னர் உலகம் சற்று விழித்துக் கொண்டது. மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக விசாரிக்க சர்வதேச அமைப்பு ஒன்று தேவை என்று உணர்ந்தார்கள். அந்த எண்ணத்தின் விளைவாகவே சர்வதேச தொண்டு நிறுவனங்களும், சர்வதேச நீதிமன்றங்களும் உருவாகின.

உண்மையில் இனப்படுகொலை, போர்க்குற்ற விசாரணைகள் என்பன அந்தப் போரில் வென்றவர்களால் மட்டுமே நடத்தப்படுகின்றன. அதனால் தோற்றவர்கள் மீதே எல்லாப் பழிகளும் போடப்பட்டு, குற்றவாளிக் கூண்டில் ஏற்றி தண்டிக்கப்பட்டுள்ளனர். வென்றவர்கள் தொடர்ந்தும் வென்றவர்களாகவும் புனிதர்களாகவும் வரலாற்றில் புகழப்படுகிறார்கள். உலக வரலாற்றில் உலக யுத்தங்களிலும் சரி, உள்நாட்டுப் போர்களில் சரி வென்றவர்கள் ஈவிரக்கமற்ற மிகப்பெரும் போர்க்குற்றங்கள், இனப்படுகொலைகள் என்பவற்றை நிகழ்த்தி விட்டு தமக்கு எதுவும் தெரியாதது போலவே நடிக்கிறார்கள். இதுதான் உலக நியதி. இதுவே பொதுவான நடைமுறையாகவும் தற்போது இருந்து வருகிறது.

குற்றஞ்செய்தவன் எவ்வளவு காலம் சென்றாலும் தண்டிக்கப்பட வேண்டும். அப்படித்தண்டிக்கப்படுவதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன கிடைக்க போகிறது என்று சிலர் கேட்கலாம். அவர்கள் கேட்பதும் நியாயம்தான். போர்க்குற்றவாளிகளுக்கு தண்டனையளிப்பதன் மூலம், போரில் பாதிக்கப்பட்டவர்களின் வலிகள் , இழப்புகள் தீரப் போவதில்லைத் தான்.

ஆனால் உலகத்தில் இனிவரும் காலங்களில் இப்படியான போர்க்குற்றங்கள் நடந்தால் சர்வதேசம் பார்த்துக் கொண்டிருக்காது. உரியவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற கருத்து எல்லோர் மனங்களிலும் ஆழமாகப் பதியும். அதனால் போர்களை நடத்துபவர்கள் போர்க்குற்றங்களில் இருந்து தப்பிப்பதற்காக மக்களின் நலனைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை ஓரளவுக்காவது எடுப்பார்கள். இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் இந்த மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கேற்ற வகையில் காரியங்களும் மளமள வென்று நடைபெற்று வருகின்றன. எனினும் இந்தச் சர்வதேச விசாரணைக் குழுவுக்கு யார் தலைவர் என்பது இதுவரை விடைதெரியாத கேள்வியாகவே இருக்கின்றது. ஆனால் ஜெனிவாவிலிருந்து வரும் செய்திகள், இலங்கை மீதான சர்வதேச விசாரணைக்குழுவின் தலைவராக ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் கோபி அனான் நியமிக்கப்படலாம் என்றே ஆரூடம் கூறுகின்றன. யார் இந்த கோபி அனான்?

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கானாவில் பிறந்து 1997 முதல் 2006ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளராக இருந்து உலக அமைதிக்காகத் தீவிரமாகப் பாடுபட்டவர். அதற்காக அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசும் கிடைத்தது.

அதனைத் தொடர்ந்து உள்நாட்டு போரினால் பாதிக்கப்பட்டு வரும் சிரியாவில் சுமூகத்தீர்வொன்றினைக் காணும் முகமாக சிரியாவுக்கான ஐக்கிய நாடுகள் மற்றும் அரபு லீக்கின் சிறப்புத் தூதுவரான கோபி அனான் நியமிக்கப்பட்டார். அங்கு அமைதியினை ஏற்படுத்த தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டு அதில் குறிப்பிடத்தக்களவு வெற்றியும் கண்டார். எனினும் இறுதியில் போரை முடிவுக்கு கொண்டுவர கோபி அனான் தலைமையிலான 6 பேர் கொண்ட குழு முன்வைத்த யோசனைகளை சிரிய அரசும், கிளர்ச்சியாளர்களும் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். இதனால், மிகுந்த மன வருத்தத்துடன், தனக்கு அளிக்கப்பட்ட பொறுப்பிலிருந்து விலகுவதாக அறிவித்து விட்டு வெளியேறினார் கோபி அனான். இவ்வாறான நிலையில் தான் இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைக்குழுவின் தலைவராக கோபி அனான் நியமிக்கப்பட விருப்பதாகச் செய்திகள் அடிபடுகின்றன. இது இலங்கை அரசுக்கு தர்மசங்கடமான ஒரு நிலையினைத் தோற்றுவித்துள்ளது.

உலகின் அனைத்து தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு இராஜதந்திரியை விசாரணைக் குழுவின் தலைவராக நியமித்து அதன் மூலம் இலங்கையை விசாரணைப் பொறியில் சிக்க வைப்பதே அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் திட்டம்.

அதற்கான காய்நகர்த்தல்களைத் தொடங்கி விட்டது சர்வதேசம். சமாதானத்துக்கான நோபல் பரிசு வென்ற கோபி அனானை விசாரணைக் குழுவின் தலைவராக நியமித்தால், அவருக்கு விசா வழங்க மாட்டோம் என்று இலங்கை இப்போதே போர்க்கொடி தூக்கத் தொடங்கிவிட்டது. ஆனால் அந்தப் பிடிவாதத்துக்கு என்ன காரணம் என்பதை அதனால் சொல்லவே முடியாது.

இதேவேளை கோபிஅனான் தவிர்ந்த வேறு யாராவது இலங்கைக்கு வந்தால், (குறிப்பாக நவநீதம்பிள்ளை வந்தால்) அவர் தமிழீழத்தை உருவாக்கி நாட்டை பிரிக்கப் போகின்றார் அல்லது புலம்பெயர் தமிழர்களின் ஆதரவாளர் என்று புலிச் சாயம் பூசி, விஸா வழங்காமைக்காக சாட்டு ஒன்றை இலங்கை இட்டுக்கட்ட முடியும்.

ஆனால் அனானுக்கு அவ்வாறு விஸா மறுக்கப்பட்டமைக்கான காரணத்தை இலங்கையால் சொல்ல முடியாது. அத்துடன் அரசு அவரது விசாரணைகளுக்கு தடங்கலை ஏற்படுத்தினால் அது இராஜதந்திர ரீதியில் முறுகல் நிலைமையையும் உருவாக்கும். குறிப்பாக ஜெனீவா மனித உரிமைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு ஆதரவு வழங்கிய நாடுகள் கூட இலங்கையின் இந்தப்போக்கினைக் கண்டிக்கக்கூடும்.

எனவே தன் தலையில் இலங்கை மண்ணையள்ளிப்போடுவதை விடவும் அனானை இலங்கைக்குள் அனுமதிப்பதே ஆட்சியாளர்களுக்கு முன்னால் உள்ள தெரிவாக இருக்கும்.




உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகள் பிரேஸிலில் ஆரம்பித்து விட்டன. ஆயினும் போட்டிகள் தொடங்குவதற்கு சில தினங்களுக்கு முன்னதாக அந்த நாட்டு அரசு செய்த காரியம் பெரும் எதிர்ப்பலைகளை ஏற்படுத்தியுள்ளது. போட்டிகள் நடை பெறவுள்ள மைதானங்களுக்கு அருகில் வசித்து வந்த ஏழை மக்களை அங்கிருந்து வலுக்கட்டாயமாக-நாய்களைப் போல இழுத்துச் சென்று புறநகர்ப் பகுதிகளில் குடியேற்றியுள்ளது. போட்டிகளைக் காண வரும் வெளிநாட்டவர்கள் இந்த ஏழைகளைக் கண்டால், பிரேஸிலின் மதிப்பு கீழிறங்கி விடும் என்பதாலேயே இந்த நடவடிக்கையாம். எப்போதும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அரசால் பந்தாடப்படுவது ஏழைகளே என்பது இன்னொரு முறை பிரேஸிலில் நிரூபணமாகி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தப் படம் எத்தனை நாளைக்கு?

ஹரன்



பற்றியெரியும் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றை வழங்குவதாக உலகத்துக்குக் காட்ட இலங்கை எடுக்கின்ற பகீரதப் பிரயத்தனங்கள் படக்காட்சிகள் இன்னும் நீண்டு கொண்டேயிருக்கின்றன. தமது உரிமைகளை வலியுறுத்தி முப்பது ஆண்டு காலமாக தமிழினம் மேற்கொண்ட அனைத்து விதமான போராட்டங்களையும் தவறான கண்ணோட்டத்திலேயே அணுகியது பேரினம். நோய்க்கு மருந்திடாமல் அல்லது மருந்திட மனமில்லாமல் நோயின் பக்க விளைவுகளுக்கு மாத்திரம் மருந்திட முயன்றது அரசு. இதனால் அமைதிப் பூங்காவாக இருந்த இந்த மாங்கனித் தீவு இரத்த பூமியாக மாறியது. பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கத் தயாராக இருப்பதாகக் காட்டிக் கொண்டு தமிழினத்தின் மீது தனது அடக்குமுறைக் கரங்களை திணிப்பதில் பேரின ஆட்சியாளர்கள் அனைவருமே ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்லர் என்று நிரூபிக்கும் வகையில் செயற்பட்டனர்.

எந்த ஆட்சியாளரும் தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை வழங்க மனமில்லாதவர்களாகவே இருந்தனர். இதனாலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு 'கன்னித்தீவு கதை போல' இழுபட்டுக் கொண்டே சென்றது. இப்போது அது மாகான சபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கலாமா? இல்லையா என்பதில் வந்து நிற்கிறது.

வடமாகாண சபைத் தேர்தல் பரப்புரைகளுக்கு முன்னரேயே வடமாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என அரசு அடித்துக் கூறி விட்டது. மத்திய அரசின் வசமுள்ள அதிகாரத்தை எவர் கேட்டாலும் கொடுக்க மாட்டோம் என்று அடித்துக் கூறி விட்டார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஆனால் திடீரென தற்போது இதில் இருந்து பல்டி அடித்து "பொலிஸ் அதிகாரத்தை தவிர வேறு எந்த அதிகாரத்தையும் வழங்க அரசு தயாராக இருக்கின்றது. அதிலும் போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரத்தைக் கூட மாகாணங்களுக்கு வழங்க முடியும்" என்று கூறியிருக்கிறார் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல. அரசின் இந்த திடீர் மாற்றத்துக்குக் காரணம் என்ன என்பது சிறுபிள்ளைக்கும் தெரிந்த அரசியல் உண்மை. தற்போது இந்தியாவின் மத்திய ஆட்சியை நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. கைப்பற்றி இருக்கின்றது. இதனால் இராஜதந்திர ரீதியில் பல்வேறு சவால்களையும் அழுத்தங்களையும் சந்திக்கத் தலைப்பட்டு இருக்கிறது இலங்கை அரசு. கடந்த ஒரு தசாப்தமாக இந்திய மத்திய ஆட்சியில் காங்கிரஸே இருந்தது. இந்தக்காலத்தில் தனது கணவர் ராஜீவ் காந்தி கொலையுண்டதற்கு பழிவாங்கும் வகையில் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஈழத்தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டிருந்தார். இதனால் இலங்கை மீது சர்வதேசம் ஏற்படுத்திய பல அழுத்தங்களைத் தடுக்கத் இந்தியா பெரிதும் உதவியது.

ஆனால் இப்போது அந்த நிலை தலைகீழாகிவிட்டது. ஊழல் பேர் வழிகளின் கூடாரமான காங்கிரஸ் கட்சி ஆட்சியில் அடித்துத் துரத்தப்பட்டு, மத்திய ஆட்சியை பாரதிய ஜனதாக் கட்சி கைப்பற்றியிருக்கிறது. ஆட்சிக் கட்டிலில் ஏறிய அடுத்த நாளே இலங்கை ஜனாதிபதியிடம் 13 ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று தீர்வு வழங்குமாறு மிகவும் அழுத்தம் திருத்தமாக சொல்லி விட்டார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. இதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க இந்திய அரசுக்குச் சில நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்த வேண்டிய தேவை இலங்கை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனாலேயே தாங்கள் எல்லாவிதமான விட்டுக் கொடுப்புகளுக்கும் தயார் என்பதுபோல இலங்கை காட்ட முயல்கிறது . முன்னைய காலங்களில் சீனாவுடன் ஒட்டுறவு போல காட்டிக் கொள்வதன் ஊடாக, இந்தியாவைத் தன் இஷ்டப்படி இலங்கையால் ஆட்டி வைக்க முடிந்தது. ஆனால் அந்த ஆட்டமெல்லாம் மோடியிடம் செல்லுபடியாகாது என்பதால், மோடியைச் சமாளிக்கும் விதத்தில் தனது காய்களை வேகமாக நகர்த்தத் தொடங்கியிருக்கிறது இலங்கை அரசு. ஏற்கனவே ஐ.நா. நிபுணர் குழுவால் ஏற்பட்ட காய்ச்சலும், கோபி அனான் வரப்போகிறார் என்ற அபாயச் சங்கும் இலங்கையின் நித்திரையைக் கலைத்துள்ளன. இந்த நிலையில் புதிதாக 13+ நடைமுறைப்படுத்துவது பற்றிய இந்திய மிரட்டலும் இலங்கையை நிலை குலையச் செய்திருக்கிறது.

தவறுதலாகவேனும் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் ஏற்படும் எதிர்விளைவுகள் இலங்கைக்கு நன்றாகத் தெரியும். அப்படிச் செய்தால் பௌத்த இனவாதத்தை வைத்து அரசியல் நடத்தும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தோழமைக் கட்சிகளாக ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் ஆர்ப்பாட்டம், பேரணி என்று நடத்தி . 'ஜனநாயக' எதிர்ப்பைக் காட்டினால், அதற்குத் தலைவணங்கி, மீண்டும் அதிகார வழங்கல் எண்ணத்தை இலங்கை குப்பைத் தொட்டிக்குள் போட்டுவிடும். அந்த நம்பிக்கையில் தான் இப்படி, "பொலிஸ் அதிகாரத்தை தவிர-அதுவும் போக்குவரத்து பொலிஸ் அதிகாரத்தையும் தந்து- மற்றைய அதிகாரங்கள் எல்லாவற்றையும் நாங்கள் தரத்தயார்' என்று ரீல் விட்டிருக்கிறது இலங்கை. பார்ப்போம்,இந்தப்படம் எத்தனை நாளைக்கு ஓடப்போகிறதென்று.

உங்கள் குடும்ப முன்னேற்றத்துக்கான ஜுன் மாத சஞ்சிகை

அரசியல் பாலியல் கலக்காத பரிணாமப் படைப்பு




பத்து வகை போட்டிகள்

- பட்டுச் சேலை கட்டுரைப் போட்டி
- குறுக்கெழுத்துப் போட்டி
- பேசும் படப் போட்டி
- விளையாட்டு அறிவுப் போட்டி
- பொது, சமய அறிவு, விவேகப் போட்டி
- வகிர்தல் போட்டி
- சொற்றொடர் ஆக்கப் போட்டி
- தரம் 4, 5 இற்கான கணித புதிர் போட்டி
- தரம் 5 இற்கான ஓவியக் கட்டுரைப் போட்டி
- மழலைகளுக்கான வர்ணம் தீட்டும் போட்டி

200,000/-

இலவச பிறந்தநாள் மற்றும் திருமண வாழ்த்துக்கள்

இவ்விதழை அலங்கரிப்பவை





இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் தற்பொழுது அமோக விற்பனையில்
உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோகத் தொடர்புகளுக்கு: யாழ். - 0776569617 / 077 1945812 - கொழும்பு - 0718 628379 / 011 5737592

விளம்பர தொடர்புகளுக்கு: 0718 628 384

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தூண்டில் -4

# இரை தேடும் இணைய வலை

மிகச் சமீபத்திய உதாரணமாக லிங்க்ட் இன் (LinkedIn) நிறுவனத்தின் சர்ச்சைக்குரிய சந்தைப்படுத்தல் உத்திக்குப் பலியானவர்களைச் சொல்லலாம். நந்தன வருடம், தைத் திங்கள், முகூர்த்தம் நிறைந்த ஒரு சுப யோக சுபதினத்தில் லிங்க்ட் இன் நிறுவனம் தங்களது பயனாளர்களாகிய ஏறத்தாழ 20 மில்லியன் பேருக்கு 'எங்கள் தளத்தில் கணக்கு வைத்திருப்பர்களிலேயே நீங்கள் தான் பவர் ஸ்டார், உங்களை வாழ்த்த வயதில்லை வணங்குகிறோம்' என்ற பொருள் படும் விதத்தில் கண்ணைக் கவரும் வடிவமைப்பில் ஒரு மின்னஞ்சலை அனுப்பியது. அந்த மின்னஞ்சலின் அடிப்பகுதியில் அந்தத்தகவலை முகப்புத்தகம், ருவிட்டர் மற்றும் இன்னபிற சமூக வலைத்தளங்களுக்கு பகிர்ந்து கொள்வதற்கான வசதியும் கொடுக்கப்பட்டிருந்தது. கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

இதற்கு பலியான ஆடுகளின் எண்ணிக்கை மிக அதிகம். ஒரே கல்லில் உலக அளவில் பல மாங்காய்களைச் சராமாரியாகப் போட்டுத்தள்ளியது லிங்க்ட் இன் நிறுவனம். இதன் மூலம் அவர்கள் அடைந்த பயன், சகட்டு மேனிக்கு சமூக வலைத்தளங்களில் பலியாடுகளின் மூலமாக லிங்க்ட் இன் நிறுவனத்திற்குக் கிடைத்த இலவச விளம்பரம், மற்றும் சில உணர்ச்சிவசப்பட்ட பணக்கார ஆடுகள் தங்களது லிங்க்ட் இன் கணக்கினை கட்டணச் சேவைக்கு மாற்றியதன்மூலம் கிடைத்த வருமானம். அதாவது நாம் இவ்வளவு பிரபலமாகிற அளவுக்கு கூட்டம் கூட்டமாக யாரெல்லாம் தங்களது விவரங்களை லிங்க்ட் இன் தளத்தில் பார்வையிடுகிறார்கள் என்பதனை அறியும் அவாவின் விளைவாக லிங்க்ட் இன் நிறுவனத்திற்கு கிடைத்த இலாபம் எக்கச்சக்கம். எங்கோ, எப்போதோ கைதவறி லிங்க்ட் இன் தளத்தில் கணக்கைத் தொடங்கி விட்டு, அந்தப் பக்கம் திரும்பிக்கூட பார்க்காதவர்கள் கூட இந்த மின்னஞ்சல் கிடைக்கும் பாக்கியம் பெற்றது குறிப்பிடத்தக்க அம்சம்.

மேற்கூறிய அனைத்து உதாரணங்களிலுமே பலியாவதா வேண்டாமா என்பதனை நம் செயல்களே தீர்மானிக்கின்றன. மிகச்சாதரணமாக ஏதாவது ஏடாகூடமான தளத்தில் பார்க்கக் கூடாததைப் பார்த்த காய்ச்சலில் எதிலாவது கைதவறி ஒரு முறை க்ளிக்கினால் கூட உங்கள் கணினி பாதிக்கப்பட வாய்ப்பிருக்கிறது. வேகமாக செயற்படுவதுதான் மேதமை என்று நினைத்து கண்டபடி தட்டச்சிக் கொண்டே இருப்பது, மற்றும் மவுஸ் மூலம் படபடவென க்ளிக்குவது போன்ற வியாதிக்காரர்கள் இதற்குப் பலியாவது உறுதி.

எளிதாகத் தோன்றும் சில விடயங்கள் இணையத் தொழில்நுட்பத்தில் விளைவிக்கும் சேதம் கனவிலும் நினைக்க முடியாத அளவுக்கு இருக்கும். இது போன்ற மிகச் சாதாரணமாகத் தோன்றும் பொறிகளில் சில சமயம் அமெரிக்க வெள்ளை மாளிகை மற்றும் உலகத்தின் மிகப்பெரிய இராணுவத் தளபாடங்களை உற்பத்தி செய்யும் நிறுவனமான லக்ஹீட் மார்ட்டின் போன்ற முதலைகளும் சிக்கியிருக்கின்றன. வெள்ளை மாளிகையிலும், லக்ஹீட் மார்டின் நிறுவனத்திலும் வலையமைப்பின் பாதுகாப்புக்கு அள்ளி இறைத்திருப்பார்கள் என்பதையும், அங்கு பணிபுரிபவர்களுக்கு வலையமைப்பின் பாதுகாப்புக் குறித்து பயிற்சியளித்திருப்பார்கள் என்பதையும் சொல்லித் தெரியவேண்டியதில்லை. இருந்தாலும் அவர்களை வீழ்த்துவதற்கு இணையக் களவாணிகள் பயன்படுத்திய ஆயுதம் 'ஸ்பியர் பிஸ்ஷிங்' தாக்குதல் (Spear Phishing Attack)

அப்படி அந்தத்தாக்குதலில் என்ன விசேஷம்?

(தேடல்கள் தொடரும்)

# ஈமெயில் இல்லையா?

ஒரு கொம்ப்யூட்டர் நிறுவனத்தில் தரை துடைக்கும் வேலைக்கு ஒருவன் விண்ணப்பித்திருந்தான். தரை துடைத்துக் காட்டச் சொன்னார்கள். நன்றாகத்துடைத்தான். அடுத்து சின்னதாக ஒரு நேர்முகத்தேர்வு. கடைசியில் அவனிடம் தகவல் சொல்வதற்காக ஈமெயில் முகவரி கேட்டார்கள்.

'ஈ மெயிலா? எனக்கு ஈ மெயில் இன்டர்நெற்றெல்லாம் தெரியாதே' என்றான் துடைக்க வந்தவன்.

'கொம்ப்யூட்டர் நிறுவனத்தில் வேலை பார்க்க விரும்புகிறவனுக்கு ஈமெயில் முகவரி இல்லையா? ச்சே அவமானம்!' என்று அவனை அனுப்பி விட் டார்கள்.

வேலை இல்லை என்றதும் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்ல. கையில் 10 ரூபா மட்டுமே இருந்தது. அதைக் கொண்டு சந்தையில் வெங்காயம் வாங்கினான். பக்கத்து குடியிருப்புப் பகுதியில் கூவிக் கூவி விற்றான். 10 ரூபா லாபம் கிடத்தது. மீண்டும் வெங்காயம். மீண்டும் விற்பனை. இப்படியே கொஞ்சம் கொஞ்சமாக விற்று சில வருடங்களில் பெரிய வெங்காய வியாபாரி ஆகிவிட்டான்.

இந்தச் சூழ்நிலயில் ஒரு வங்கிக் கணக்கு திறப்ப சம்பந்தமாக, ஒரு வங்கி ஊழியர் அவனிடம் பேச வந்திருந்தார். அவனுடைய ஈமெயில் முகவரி கேட்டார். வியாபாரியோ, 'ஈமெயில் முகவரி இல்லை' என்று பதிலளிக்க,

'ஈமெயில் இல்லாமலே இந்தக் காலத்தில் இவ்வளவு முன்னேறி விட்டீர்களா? உங்களுக்கு மட்டும் ஈமெயில், இன்ரர்நெற்றெல்லாம் தெரிந்திருந்தால்....?' என்று ஆச்சரியமாகக் கேட்டார் வங்கி ஊழியர்.

"அதெல்லாம் தெரிந்திருந்தால் ஒரு கொம்ப்யூட்டர் நிறுவனத்தில் இப்போதும் தரை துடைத்துக் கொண்டிருப்பேன்" என்றார் வியாபாரி.

கிளிநொச்சில இருந்து முறிகண்டி தாண்டுற ரோட்டில தான் முருகன் காத்துக்கொண்டு நிண்டான்.வெக்கை .பயங்கர வெக்கை.

வாகன ஜன்னலிருந்து காத்தை வாங்க நான் விரும்பேல.

காரணம் தலைமுடி கலைஞ்சிடும்.

ஆனா முருகன் சரியான சின்னப் பொடியன்.

தலையில ஒரு தொப்பி. வேர்க்க விறுவிறுக்க நிக்கிறான்.

"அண்ணா பாலப்பழம் வாங்கிட்டு போங்கோ"

"வேண்டாம்"

"அண்ணா! ஒரு சுண்டாவது வாங்குங்கோ"

"வரேக்க வேண்டுறன். இப்ப வேண்டாம்"

எனக்கு தெரியும் வரேக்க அவன் நிக்கப் போறேலை.

கிட்டத்தட்ட நாலு மணித்தியாலம் கழிச்சு திரும்பி வாறன்.

வழிநெடுக இன்னும் கனக்கப் பாலப்பழக் கைகள் முளைச்சிட்டு திடீரெண்டு.

குடும்பமா விக்கிறவங்கள்,

சிறுமிகள்,

கிழவர் ஒராள்,

ஒரு காலில்லாத மனுசன்.

ஓ! பாலப்பழ சீசன் போல.

சரியெண்டு முருகன் நிண்ட இடத்துக்கு கிட்ட வர எனக்கு ஆச்சரியமா போச்சு.

அவன் தான். அவன் அங்க நிக்கிறான்.

வெயில் சுட்ட பழங்களோட அவன்ர பிஞ்சு உடம்பும் பழுத்திட்டு போல.

இல்ல மரத்திட்டு.

"ஒரு சுண்டு எவ்வளோ?"

"நாப்பது ரூபா அண்ணா"

"நாலு தா"

"நூற்றைம்பதை நீட்டினன். வாங்கிட்டான்

"பத்து ரூபா வேண்டாமா?"

"சில்லறை இல்ல எண்டா விடுங்கண்ணா"

"சரி அடுத்த முறை திருப்பி வரேக்க தாறன். இல்லாட்டி குடுத்தாவது விடுறன். நிப்பியா நீ?"

"சீசன் முடியுமட்டும் நிப்பன்"

"பள்ளிக்கூடம் போறேலயா "

"இல்ல"

ஏனெண்டு கேக்கோணுமா?.தெரியல

# சுட்ட பழமும் றோட்டு முருகனும்



ஆதி.பா

காசிருக்கிறவன் வெயிலுக்குள்ள கால் உழைய நின்டு விக்க வேண்டிய அவசியம் இல்லையே.

ஆனா அந்த முருகன் தந்த சுட்ட பழத்துக்கு எந்த ஔவையாரும் பாட்டெழுதுவா அவ்வளவு இனிமை.

அந்தப் பாலப்பழங்கள் தான் என்னை மறுபடியும் பைரவியின்ர ஞாபகத்துக்க கூட்டிச்சென்றது.

ஓம் பைரவி என் சின்ன வயசுத்தோழி.

நாங்கள் மல்லாவில இருக்கேக்க பக்கத்து வீடு அவள். எனக்கு நாலு வயசிருக்கும் அவளின்ர வீட்டில ஒரு பாலமரம் நிண்டது. அதின்ர இலையைப் பிடுங்கி கொண்டு போய் மூலைல இருந்த கோபி அண்ணான்ர கடையில காசு மாதிரிக் குடுப்பம். அதுக்கு கோபியண்ணா ரொபி ,கடாபி என்டுற ஒரு இனிப்பு, பற்பொடி எல்லாம் தருவார். நாங்கள் ஆச்சரியப்படுவம். அந்தப் பாலப்பழ இலைக்கு அவ்வளவு மதிப்பா எண்டு? போனமாசம் கூட இது பற்றி அம்மாட்ட சொல்லுமட்டும் எனக்கு உண்மை தெரியாது. நாங்கள் வாங்கினதுக்கெல்லாம் கடன் எழுதி கோபியண்ணை எங்கட வீட்டுக்காரரிட்ட வசூலிச்சிருக்கிறார். இப்படித்தான் ஒரு நாள் பைரவி எனக்கு பாலப்பழத்தையும் அறிமுகப்படுத்தினாள். அப்பவும் ஒரு ஜூன் மாதமா இருக்கலாம். அந்தப் பாலப்பழங்களைச் சாப்பிட்டிட்டு அதோட விதையத் துப்புவம். ஒரு நாள் அந்த விதை பெரிய மரமாகும் எண்டு சொல்லுவம். ஓம் அந்த விதை முளைச்சு செடியாகும். பிறகு பெரிய மரமாகி காய்க்கும். ஒரு வேளை நான் இண்டைக்கு சாப்பிட்டது கூட அந்த விதைகளில இருந்து வளர்ந்த மரத்தின்ர பழமாக் கூட இருக்கலாம். அதே சுவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை

● அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 38



இதன் விளைவாக மிதவாத தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர், நாடாளுமன்ற அரசியலைக் கைவிட்டு தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்தனர். யாப்புக்கு அமைந்த அரசியலுக்கான கதவுகள் தமிழர்களுக்கு அடைக்கப்பட்டன. சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமே அவர்களுக்குக் கிடைத்த ஒரு மாற்றுவழியாகியது. 1983ல் இடம்பெற்ற அருவருப்பான நிகழ்வுகள், தமிழ் மக்களின் அரசியல் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தன. அதுவே ஜனநாயக நாடாளுமன்ற அரசியல் முறையில் இருந்து புரட்சிகர ஆயுதப் போராட் டமாக முகிழ்த்தது.

கொழும்பிலும், தென்னிலங்கையிலும் இடம்பெற்ற கலவரங் கள் தொடர்பான அதிர்ச்சியளிக்கும் செய்திகள் லண்டனை எட்டியபோது, தமிழ்ச் சமுதாயம் முழுவதுமே ஆத்திரமும் கலக்கமும் அடைந்தது. என்ன நடந்தது என்பதை அறிய ஒவ்வொருவரும் துடித்தனர். பதைபதைத்த மக்கள் இலங்கையில் தங்கள் உறவினருடன் தொடர்பு கொள்ளத் துடித்தனர். பெரும்பாலான மக்கள் வெகுண்டெழுந்து சீற்றம் அடைந்தனர். தங்கள் உரிமைகளுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருந்த தமிழ் மக்களை மண்டியிட வைத்து அவர்களுக்குப் பாடம் புகட்டுவதையே நோக்கமாகக் கொண்டு முடுக்கி விடப்பட்ட ஒரு பயங்கரமான இனக்கலவரம், எதிர் விளைவையே ஏற்படுத்தியது. இனவேரறுப்பு முயற்சியானது, தமிழ் மக்களின் சுய கௌரவத்தையும் இனப் பெருமையையும் தூண்டியது. சிங்கள அரசியல் வாதிகள், தமிழ் மக்களின் எந்த ஒற்றுமை உணர்வைச் சிதறடித்து நசுக்க முனைந்தார்களோ, அதே ஒற்றுமை உணர்வே, தமிழ் மக்களின் பொது எதிரிக்கு எதிரான ஒரு தேசிய ஒருமைப்பாட்டு எழுச்சியாக உருவெடுத்தது. திட்டமிட்ட இனப்படுகொலை, இரண்டு இனங்களுக்கிடையேயும் இணைய முடியாத ஆழமான பிளவை ஏற்படுத்தியது. மீட்கப்பட்ட தமிழ் மண்ணிலே தங்கள் அரசியல் சுதந்திரத்தை நிறுவ வேண்டும் என்ற தமிழ் மக்களின் போராட்ட உணர்வை விரிவடையச் செய்தது.

உணர்ச்சி பீறிட்டு எழுந்த அந்த இனக்கலவர நாள்களின் போது,நண்பர்களும்,கூட்டாளிகளும் எமது மாடிக்கு வருவதும் போவதுமாக இருந்தார்கள். ஐரோப்பாவில் உள்ள விடுதலைப் புலிச் செயற் பாட்டாளர்கள், அடுத்து என்ன செய்யலாம் என்று கூடி ஆராய லண்டனுக்கு விரைந்தார்கள். ஆயுதப் போராட்டத்துக்காக நிதி திரட்டும்பணி தீவிர மாக்கப்பட்டது. விடுதலைப்புலிப் ஆதரவாளர்களுக்குத் புதிதாக ஈழக் கொள்கைளை ஏற்கத் தொடங்கியவர்களுள் தாராளமாகக் கொடை புரிந்தார்கள். சில ஆண்டுகளாக மதில் மேல் ஊசலாடிய புலத்துத் தமிழர்கள் பலர் இப்போது ஏதோ ஒரு பக்கத்தை அறுதியாக தேர்ந்தெடுத்தார்கள். சிங் கள மக்கள் மத்தியில் தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழ முடியாது என்று பலர் தீர்க்கமாக முடிவுக்கு வர, இனக்கலவரம் வடிகால் அமைத்தது. சென்னைக்கு உடன் திரும்புமாறு பிரபாகரனிடமிருந்து எமக்குச் செய்தி வந்தது. லண்டனுக்கு நாம் இனிமேல் திரும்பி வரமாட்டோம் என்று கருதிக் கொண்டு அதற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்தோம். எமது தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்தோம். பெட்டியை அடுக்கினோம். சென்னைக்குப் புறப்பட்டோம். ஏறத்தாழ பன்னிரண்டு மணிப் பயணத்தின் பின் சென்னையைச் சென்றடைந்தோம். இலங்கைத் தமிழருக்கு ஆதரவு தெரிவித்து வீதியில் ஆர்ப்பரித்த இலட்சோபலட்சம் தமிழ் மக்களை அங்கே காணக் கூடியதாக இருந்தது. எமது கடந்தகால வாழ்க்கைக்கு முற்றிலும் புறம்பான ஒரு புதிய வாழ்க்கைப் பாதையில் நாம் காலடி வைத்தோம்.

(பதிவு தொடரும்)




11.06.2014 -17.06.2014

**மேஷம்**

### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

புதியவர்களின் நட்பு வாழ்வில் முக்கிய நன்மைகளைப் பெற வைக்கும். சமூகப் பணியிலும் ஓரளவு ஈடுபடுவீர்கள். வாகனப் பயன்பாடு சராசரி அளவில் இருக்கும்.புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். எதிரி, தன் சொந்த சிரமங்களால் விலகுவார். இல்லறத்துணை, உங்களின் சொல் மதித்து நடந்து குடும்பத்தின் ஒற்றுமை காத்திடுவார். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி பெற சில மாற்றத்தைப் பின்பற்றுவீர்கள். பணியாளர் கூடுதல் வேலைவாய்ப்பை மனலுவந்து ஏற்றுக்கொள்வர். பெண்கள் குடும்பத்தின் அத்தியாவசிய தேவைகளுக்கு முக்கியத்துவம் தருவர்.

**ரிஷபம்**

### கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

வாழ்வு சிறக்க எதிர்பார்த்த சில நன்மை தேடிவரும். தம்பி, தங்கையின் குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடத்திட உங்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கும். வாகனத்தில் நிதானம் பின்பற்றவும். புத்திரரின் தவறுகளை இதமான அணுகுமுறையால் சரி செய்வது நல்லது. நீண்ட நாள் பணக்கடன் வசூலாகும். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கித்தருவீர்கள். தொழில் வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சி முகம் காண்பீர்கள். பணியாளர்களின் பொறுப்பான செயலுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும். பெண்கள் கணவரின் அன்பு, தாராள பணவசதி கிடைத்து மகிழ்ச்சியான வாழ்வு நடத்துவர்.

**மிதுனம்**

### மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

வாழ்வு சிறக்க எதிர்பார்த்த சில நன்மை தேடிவரும். தம்பி, தங்கையின் குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடத்திட உங்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கும். வாகனத்தில் நிதானம் பின்பற்றவும். புத்திரரின் தவறுகளை இதமான அணுகுமுறையால் சரி செய்வது நல்லது. இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கித்தருவீர்கள். தொழில் வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சி முகம் காண்பீர்கள். பணியாளர்களின் பொறுப்பான செயலுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும்.

**கடகம்**

### புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

உறவினர் வருகையும், அவர்கள் வீட்டிற்கு உங்களை அழைப்பதுமான நல்ல நிகழ்வு ஏற்படும். புத்திரரின் அறிவுத்திறன் வளர்ந்து, படிப்பு, செயலில் முன்னேற்றம் அடைவர். எதிரியால் உருவாகிற தொல்லை பலமிழந்து போகும். இல்லறத்துணையின் சிறு தவறுகளை பொறுத்துக் கொள்வதால் ஒற்றுமை பலப்படும். தொழிலில் அபிவிருத்தி பணிபுரிய தாராள பணவசதி துணை நிற்கும். அரசுப்பணியாளருக்கு தாமதமான சலுகை எளிய முயற்சியால் பெறலாம். பெண்கள், கணவரிடம் கருத்து வேறுபாடு வராத அளவில் குடும்ப நலனில் அக்கறை கொள்ளவும்.

**சிம்மம்**

### மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

சான்றோர்களின் ஆசி கிடைக்கும். மனதில் உதித்த திட்டங்களை வடிவமைத்துச் செயற்படுத்துவீர்கள். பணவசதி திருப்திகர அளவில் கிடைக்கும். புத்திரர் நண்பருக்கு இணையாக பழகி அற்புதமான கருத்துகளை பகிர்ந்து கொள்வர். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும். இல்லறத்துணை, உங்களின் நல்ல குணத்தைப் பாராட்டுவார். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான அரசு உதவி கிடைக்கும். பணியாளர் கூடுதல் வேலைவாய்ப்புத் திருப்திகர அளவில் சன்மானம் பெறுவர். பெண்கள், குடும்ப உறுப்பினர்களின் நலன் சிறக்க, தேவையான பணி மேற்கொள்வர்.

**கன்னி**

### உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

புதிய முதலீடு வகையில் பரிசீலனை அவசியம். வீண் பெருமையால் பணச்செலவு அதிகரிக்கலாம். பொது இடங்களில் அதிக நேரம் வேடிக்கை பார்க்க கூடாது.. புத்திரரின் சேர்க்கை சகவாசம் அறிந்து தேவையான அறிவுரை சொல்வீர்கள். எதிரியினால் வரும் சிரமம் சரி செய்ய சிலரது உதவி பெற வேண்டியதிருக்கும். தொழில், வியாபார நடைமுறை தாமதகதியில் இயங்கும். பணியாளர், அத்தியாவசிய செலவுக்கு பணக்கடன் பெற வேண்டியதிருக்கும். மாணவர்கள், ஆசிரியரின் அறிவுரையை மதித்து நடப்பது நன்மை தரும்.

**துலாம்**

### சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

அவர்களிடம் விலகுவதால் மனதில் கர்வம் வளராமல் தவிர்க்கலாம். புதிய பணிகளை மேற்கொள்வதில் நிதானமும், சாதக சூழ்நிலையும் உணர்ந்து செயல்பட வேண்டும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு மனதில் உற்சாகம் தரும். புத்திரர் சொல் கேட்டு நடந்து பெருமை தேடித் தருவர். எதிர்ப்பாளரின் போக்கு உணர்ந்து நடந்து கொள்வீர்கள். இல்லறத்துணையிடம் வாக்குவாதம் பேச வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராக இருக்கும். பணியாளர் கூடுதல் வேலை வாய்ப்பை குடும்பத்தின் பணச்செலவு கருதி ஏற்றுக் கொள்வீர்கள். பெண்கள், உறவினர் குடும்ப விவகாரங்களில் கருத்து சொல்ல வேண்டாம்.

**விருச்சிகம்**

### விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

மன மகிழ்ச்சியுடன் பணியில் ஈடுபடுவீர்கள். பணவரவுக்கேற்ப செலவுகளில் சிக்கனம் இருக்கும். புத்திரரின் அறிவார்ந்த செயலைப் பாராட்டுவீர்கள். பூர்வ சொத்தில் வருமானம் அதிகரிக்கும். எதிரியிடம் சமயோசிதமாக விலகுவீர்கள். இல்லறத்துணையின் குளறுபடியான செயலை இனிய அணுகுமுறையால் சரி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைய, மாற்று உபாயம் நன்மை தரும். பெண்கள, நகை இரவல் கொடுக்க வாங்க கூடாது. மாணவர்கள், தியானம், தெய்வ வழிபாடு மேற்கொள்வதால் படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

**தனுசு**

### மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

உங்களின் புத்திசாலித்தனமும், செயல்திறனும் பார்த்து, நண்பர்கள் பாராட்டுவர். ஓய்வைத் தவிர்த்து, உழைப்பில் ஆர்வம் கொள்வீர்கள்.தாராள பணவரவில் குடும்பத்தேவை பூர்த்தியாகும். சிலர், வீடு, வாகனம் வாங்க, நல்யோகம் கூடிவரும். புத்திரரின் உடல் நலத்தில் உரிய கவனம் வேண்டும். இல்லறத்துணை ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள், சலுகைப்பயன் எளிதில் கிடைத்து மனம் மகிழ்வர்.குடும்ப பெண்கள், பிரார்த்தனை நிறைவேறி, இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர்.

**மகரம்**

### உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்

தன்னிடம் பழகுபவர்களின் எண்ணங்களை உணர்ந்து பேசுவது நல்லது. தாமதமான பணியை மனஉறுதியுடன் நிறைவேற்றுவதால், சில நன்மை தேடிவரும். உடன் பிறந்தவர் ஓரளவு உதவுவர். வீடு, வாகனத்தில் சிலமாற்றங்களை பின்பற்றுவீர்கள். சொத்து ஆவணம் பாதுகாப்பில் கூடுதல் கவனம் வேண்டும். தொழிலில் அளவான மூலதனம், அதிக உழைப்பு என்கிற நடைமுறை நல்லது. பணியாளர் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும். பெண்கள், பிள்ளைகளின் எதிர்கால நலனில் அக்கறை கொள்வர்.

**கும்பம்**

### அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்

இஷ்ட தெய்வ அருள் பலமும் துணை நிற்கும். வெளியூர் பயணம் நன்மை தருவதாக இருக்கும். உறவினர்களின் வருகை, வீட்டில் மகிழ்ச்சியை அதிகரிக்கும். புத்திரர் படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னேற்றமான இடத்தைப் பிடிப்பர். பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். இல்லறத்துணை, உங்களின் சமூக அந்தஸ்து அதிகரிக்க உரிய வழிகாட்டுதல் தருவார். தொழில், வியாபாரத்தில் சில மாற்றங்களை பின்பற்றுவீர்கள். பெண்கள், பணவசதிக்கேற்ப வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். மாணவர்களின் படிப்புக்கான பணவசதி திருப்திகரமாக கிடைக்கும்.

**மீனம்**

### பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

இஷ்ட தெய்வ அருள் பலமும் துணை நிற்கும். உறவினர்களின் வருகை, வீட்டில் மகிழ்ச்சியை அதிகரிக்கும். புத்திரர் படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னேற்றமான இடத்தை பிடிப்பர். இல்லறத்துணை, உங்களின் சமூக அந்தஸ்து அதிகரிக்க உரிய வழிகாட்டுதல் தருவார். தொழில், வியாபாரத்தில் சில மாற்றங்களை பின்பற்றுவீர்கள். உற்பத்தி, விற்பனை சீராகும். உத்தியோகஸ்தர், பணியாளர்களை ஊக்கப்படுத்தி உற்பத்தியை அதிகரிப்பர். பெண்கள், பணவசதிக்கேற்ப வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழமைகள்



பள்ளி திறக்கும் திங்கள் தான்
பார்! பார்! அடுத்து செவ்வாய் தான்
பொன்கிடைத்தாலும் கிடைக்காத
புதனே அடுத்து வரும் நாளாம்!
வியாழன் என்றால் வெறுப்புண்டோ?
வீட்டைச் சுத்தம் செய்கின்ற
வெள்ளிக் கிழமை தெரியாதோ?
தலையில் எண்ணெய்
தேய்த்தேதான்
குளிக்கும் நாளே சனியாகும்!
அடுத்த நாளே நமக்கெல்லாம்
படுத்து உறங்கிச் சுகம் காணக்
கொடுத்து வைத்த திருநாளாம்
அந்த நாளைத் தெரியாதோ?
அதுதான் ஞாயிறு புரியாதோ?
வார நாள்கள் ஏழாகும்
வாவா! தம்பி! தெளிவாகும்.

## தெரிந்து கொள்வோமா?

- பழங்காலத்தில் சேரன் தீவு என்று அழைக்கப்பட்ட நாடு - இலங்கை
- உலகில் அதிக அருங்காட்சியங்கள் உள்ள நாடு - ஜேர்மனி
- திராட்சை மலரை தேசிய மலராக கொண்டுள்ள நாடு - சீனா
- கண் இல்லாத உயிரினம் - மண்புழு
- தோலினால் சுவாசிக்கும் உயிரினம் - மண்புழு
- மேல் தாடையை அசைக்கும் விலங்கு - முதலை
- மூக்கில் பல் இருக்கும் விலங்கு - முதலை
- வயிற்றில் பல் இருக்கும் உயிரினம் - நண்டு.
- வயிறும். ஜீரண உறுப்பும் இல்லாத உயிர் - ஈசல்
- மைனா பறவையின் தாயகம் - இந்தியா.
- பூச்சி இனங்களில் அறிவு மிக்கது - எறும்பு

## பூஜ்யம் ஒரு ராஜ்ஜியம்

ஒரு நாள் கணித ஆசிரியர் ஒருவர் எல்லா எண்களையும் கலந்துரையாடலுக்கு அழைத்தார். நிகழ்ச்சி ஆரம்பிக்கும் சமயம் பூஜ்யம் அங்கு இல்லை என்பது தெரியவந்தது. பூஜ்யம் ஒளிந்து கொண்டது. மற்ற எண்கள் அதை ஆசிரியரிடம் கொண்டு வந்தன.

ஆசிரியர், "ஏன் ஒளிந்து கொண்டாய்?" என்று கேட்டார்.

நான் வெறும் பூஜ்யம் தானே. என்னை பற்றி யார் கவலைப்படுவார் கள்? எனக்கு மதிப்பே இல்லையே," என்று வருத்தமாகக் கூறியது.



புன்னகைத்த ஆசிரியர், ஒன்று' என்ற எண்ணை முன்னே வரச் சொன்னார். குழுவினரைப் பார்த்து, இதன் மதிப்பு என்ன?" என்றார்.

"ஒன்று!" என்றன மற்ற எண்கள்.

அடுத்து பூஜ்யத்தை அதன் அருகில் நிற்கச் சொன்னார்.

"இப்போது?"

"பத்து!" என்று மற்ற எண்கள் உரக்கக் கத்தின.

அடுத்து பூஜ்யத்தைப் பார்த்து, இப்போது தெரிந்து கொண்டாயா உன் மதிப்பு? ஒன்று' என்ற சாதாரண எண் உன் சேர்க்கையால் பன்மடங்கு அதிக மதிப்பு அடைந்ததைப் பார்த்தாயா?" என்றார்.

எல்லா எண்களும் மகிழ்ச்சியுடன் கை தட்டின.

ஆமாம்... நான் சரியான இடத்தில் இருந்தால், நானும் பயனுடையவன்தான். நான் மற்றவருடன் சேர்ந்தால் நாங்கள் அனைவருமே அதிக மதிப்பு வாய்ந்தவர் ஆகிறோம்," என்று பூஜ்யம் மகிழ்ந்தது.

இது போலத்தான் நாம் எப்படி ஆகவேண்டும் எங்கு இருக்க வேண்டும் என நமக்கு வழிகாட்டினார்கள் ஆசிரியர்கள், நாமும் ஆசிரியர்களை வணங்குவோம்.

## சிறுவர் உலகம்



## விடை தெரியுமா?

01. திரவநிலை உணவை உண்ணாத பூச்சிகள்?
வெட்டுக்கிளி, கறையான், கரப்பான் போன்ற வெட்டுப் வாயுறுப்புக் கொண்ட பூச்சிகள்.
02. கறையான் அரிக்காத மரம் எது?
தேக்கு மரம்
03. நாயின் கண்களுக்குப் பொருள்கள் தெரியும் நிறங்கள்?
கறுப்பு. வெள்ளை
04. நாக்கு இல்லாத பிராணி எது?
முதலை
05. சத்தம் போடாத விலங்கு எது?
ஒட்டகச்சிவிங்கு
06. சிறிய இதயம் கொண்ட மிருகம் எது?
சிங்கம்
07. தூங்காத பறவை எது?
புறா
08. நான்கு கால் பிராணிகளில் நீந்தத்தெரியாத பிராணி எது?
ஒட்டகம்
09. அதிக நீர் குடிக்கும் பறவை எது?
புறா
10. நடு இரவில் பூக்கும் மலர்?
இருவாட்சி

## மனித உடல்

### பற்றி அறிந்து கொள்வோமா?

1. இரத்த சிவப்பணு எரித்ரோசைட் என்றும், வெள்ளை அணு லியூக் கோசைட் என்றும் அழைக்கப்படு கிறது.
2. இரத்தக் குழாய்கள் இதயத்திற்கு இரத்தத்தை ஒரு நிமிடத்திற்குள் கொண்டு போய் சேர்க்கின்றன.
3. மனித உடலில் ஐந்தரை லீற்றர் இரத்தம் உள்ளது.
4. ரெடினா என்பது விழித்திரை
5. ஹைப்போஜியுஸியா என்பது நாக் கில் ஏற்படும் நோய். இதன் அறிகுறி சுவை குறைந்து விடும்.
6. ஓரோபாரின்க்ஸ் என்பது வாயின் பின்பகுதி, தொண்டையில் சேரு மிடம்.
7. கருவிலுள்ள குழந்தையின் இதயம் நான்காவது வாரத்திலிருந்து துடிக்கத் தொடங்குகிறது.
8. மீடியாஸ்டினம் என்பது இரண்டு நுரையீரல்களுக்கு இடைப்பட்ட பகுதி
9. ப்ளூரா என்பது நுரையீரல் உறை
10. இன்சுலின் இதன் வேலை ரத்தத் தில் இருக்கும் சர்க்கரை அளவை சரியாக வைப்பது.
11. சிறுநீரகங்கள் கீழ் முதுகில், முதுகுத் தண்டுக்கு இருபக்கமும் உள்ளன.



## வாரம் ஒரு திருக்குறள் படிப்போம்

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்.**

**விளக்கம்** : மனமாகிய மலர்மீது சென்று இருப்பவனாகிய கடவுளின் சிறந்த திருவடிகளை எப்போதும் நினைப்பவர் இப்பூமியில் நெடுங்காலம் வாழ்வர்.

## விடுகதை சொல்வோமா?

| | | |
|---|---|---|
| 01. | நடைக்கு உதாரணம். குறுக்கே நடந்தால் சிலருக்குப் பிடிக்காது. அது என்ன? | பூனை |
| 02. | காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும் . அது என்ன? | பேனா |
| 03. | காக்கை போல கறுப்பானது. கையால் தொட்டால் ஊதா நிறம். வாயால் மென்றால் நீல நிறம். அது என்ன? | நாவற்பழம் |
| 04. | சிவப்புப் பைக்குள் சில்லறை கொட்டிக் கிடக்குது. அது என்ன? | செத்தல் மிளகாய் |
| 05. | காற்றிலே பறக்கும் கண்ணாடிக் குண்டு. கையிலே தொட்டு விட்டால் பார்க்க முடியாது. அது என்ன? | நீர்குமிழி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தண்ணீர்...! தண்ணீர்...!!



எஸ்.சிவதாசன்
நீர்வழங்கல் சபை

## நரியன் குண்டு ஏன் வற்றியது?

உங்களுக்கு ஞாபகமிருக்கும். நீராவியடியிலே உள்ள நரியன் குண்டு எனும் குளத்திலே நீர் நிரம்பியிருந்தது. ஆனால் தற்போது குளம் ஒரு துளி நீர் கூட இல்லாதுள்ளது. அதற்கான காரணம் பத்திரிகைகளின் வாயிலாக யாழ் பேராசிரியர்களால் வழங்கப்பட்டது. நீங்களும் அறிந்திருப்பீர் கள். யாழ்.குடாநாடு பெரியளவில் மேற்பரப்பு நீரைச் சேகரிக்க முடியாத ஓர் பிரதேசமாகும்.

மேற்பரப்பு நீரைச் சேகரிப்பதனால் ஆவியாதல் வீதம் குறைவாக இருத்தல் வேண்டும். எனினும் யாழ். குடாவைப் பொறுத்தவரையில் சராசரி ஆண்டு மழைவீழ்ச்சி 1200 மி.மீ. ஆகவும் ஆவியாதல் வீதம் 1800 மி.மீ ஆகவும் இருப் பதாகப் புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன. எனவே மேற்பரப்பு நீரைசேகரித்துவைத்தல் என் பது சாத்தியமானதா? பத்தி ரிகைகளின் மூலமாக அறிந்த இன்னொருவிடயம். யாழ். குடாவுக்கான குடிநீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஆற்று முகத் திட்டம் செயற்படுத்தலாம் என குறிப்பிடு கின் றார்கள். இங்கு ஒன்றை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். ஆனையிறவு எனும் இடத் திலே முன்னைய காலங்களில் உப்பளமானது அமைக்கப்பட்டிருந்தது. சிறு வயதிலே எமது புத்தகங்களில் கூட ஆனையிறவு என்றால் உப்பளம் என்று தான் அறியமுடியும். எனவே இங்கு உப்பளம் அமைக்கப்பட பிரதான காரணம் குறித்த பகுதியில் நீர் ஆவியாதல் வீதம் அதிகமா கும். எனவே நீர் ஆவியாதல் வீதம் கூடிய அதே சமயம் ஆழம் குறைந்த ஓர் இடத்தில் நாம் நீரைச் சேமிக்க முடியுமா? இத்தகைய அதிதுரித ஆவி யாதல் காரணமாக கடல் வாழ் உயிரினங்கள் அழி வடையும் வாய்ப்புள்ளது.

அண்மையில் தொண்டமானாறு கடல் நீரேரியில் மீனி னங்கள் கூண்டோடு அழிவடைந்தமை ஞாபகமிருக்கலாம். ஜப்பானிய நாட்டு மக்கள் ஒரு விநோதமான மருத்துவ முறையினைப் பின் பற்றுகின்றார்கள். அதாவது "நீர் மருத்து வம்" என்பதாகும். அதாவது காலையில் துயிலெழுந்து பல்துலக்காது தூய நீரைப் பருகுவதன் மூலம் நோய் களிலி ருந்து பாதுகாப்பைப் பெறுகின்றார் கள். அவ்வாறு நாம் செய்ய முடியுமா? ஏனெனில் குடாநாட்டு நீரினை பருகுவோமாயின் இன்ன மும் நோய்கள் அதிகரிக்கவே வாய்ப்புள்ளது. அந்த ளவுக்கு யாழ்ப்பாணத்து நீர் மாசடைந்து வருகின்றது.

2028 ஆம் ஆண்டு யாழ்குடாநாடு அழியும் என்று அண்மையில் செய்திகள் வெளியாகி இருந்தன. உலகில் பல்வேறுபட்ட நாகரிகங்கள் நீர் நிலைகளை அடிப்படையாகக் கொண்டே தோன்றின. அதேபோல் கிரேக்க நாகரீகம் நீரினாலேயே அழிவடைந்தது. ஆவதும் நீராலே, அழிவ தும் நீராலே தான். அதாவது ஈயப் பதார்த் தத்தினால் மெரு கூட்டப்பட்ட மட்பாண்டங்களின தும் நீர்க் குழாய்களின தும் பயன்பாடு கிரேக்கத்தில் அதிகம். ஈய நஞ்சூட்டல் காரணமாக கிரேக்க நாகரீகம் வீழ்ச்சி யடைந்து அழிவ டைந்தது. எனவே குடா நாட்டு மக்களும் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்ளாது போனால் யாழ்ப்பாணமும் அழிவடையக்கூடிய ஆபத்துகள் காணப் படுவதாகவே ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

*யாழ்.குடா நாட்டின் தரைக்கீழ் நீரானது பின்வரும் காரணிகளால் பல்வேறுபட்ட ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ளது*

### 1. கடல்நீர் உட்புகல்

யாழ். குடாநாடானது கடலால் சூழப்பட்டமையினால், விவ சாயிகள் நீர்ப்பம்பிகளை தொடர்ச்சியாகப் பயன்படுத்தி நிலக் கீழ் நீரை அளவுக்கதிகமாகப் பயன்படுத்துகின்றனர். இத னால் இலகுவாக கடல் நீர் தரைப்பகுதியினுள் ஊடுருவு கின்றது. இந்த ஊடுருவல் காரணமாக நிலக்கீழ் நீரின் உவர்திறனானது மிகவும் அதிகரித்துச் செல்கின்றது. ஏனெ னில் நிலக்கீழ் நீரின் உவர்தன்மையானது கடலிலிருந்து அதன் தூரம், இடம் என்பவற்றைப் பொறுத்தே மாறுபடுகின் றது. இவ் விதமாக தரைக்கீழ் நன்னீரின் கொள்ளளவம் குறைந்துவிட்டது. உதாரணமாக காரைநகர், நயினாதீவு, கரவெட்டி, அராலி போன்ற இடங்களில் உள்ள நீரில் உவர்த் தன்மை அதிகரிப்பால் மின்கடத்துதிறன் (E.C) பலமடங்கு அதிகரித்துசெல்கின்றது. E.C பெறுமானமானது குடிநீரிலே 750-3500µs/cm வரைக் காணப்படல் வேண்டும். எனினும் காரைநகர் 23200 µs/cm, நயினாதீவு 24000 µs/cm , கரவெட்டி 3960 µs/cm , அராலி 4530 µs/cm வரை அதிகரித்திருப்பதை அண்மைக் கால ஆய்வு அறிக்கைகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

### 2. கழிவெண்ணெய் கலந்துள்ளமை

சுன்னாகம் மின்சார நிலையப் பகுதியைச் சுற்றிக் காணப்படும் நீர்நிலைகளில் கழிவெண்ணெய் கலந்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த நீரினைப் பருகும் மக்கள் மிகப்பெரியளவில் சுகநலப் பாதிப்புக்கு உட்படக் கூடிய ஆபத்துண்டு.

### 3.வன்னீராக இருத்தல்

முன்னர் குறிப்பிட்டது போல நாம் மயோசின் சுண்ணாம்புப் பாறைகளின் மேலே தேங்கியிருக்கும் நிலத்தடி நீரினையே பயன்படுத்துகின்றோம். எனவே இந்த நீரிலே கல்சியம், மங்னீசியம் போன்ற அயன்கள் அதிகளவு காணப்படுகின் றன. அதாவது யாழ்.குடாநாட்டு நீர் நிலையிலேயுள்ள வன்மையானது Extremly hardness எனப்படுகிறது. நீரின் வன்மையாகும் நிலையில் வன்மை, நிலையான வன்மை என வகைப்படுத்தலாம். எனினும் யாழ். குடா வைப் பொறுத்தவரை பெரும்பாலான நீர் நிலைகள் வன் னீராகவே காணப்படுகின்றன. அதாவது ஒரு லீற்றர் நீரை நாம் கொதிக்க வைப்போமாயின் 600மி.கிராமுக்கு மேற் பட்ட கல்சியம், மங்னீசியம், காபனேற்றுக்கள் மற்றும் சல் பேற்றுக்கள் என்பன படிவாகின்றன. இந்த வன்னீரைக் குடிநீராகப் பயன்படுத்தும் போது சிறுநீரகங்களில் கல்சியம், மக்னீசியம் போன்றன பல்வேறு உப்புக்களாகப் படிவாகி சிறுநீரகக்கற்கள் மற்றும் கல்லடைசல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படவாய்ப்புக்கள் அதிகமாகின்றன. யாழ். குடாநாட்டிலே வன்னீர் காரணமாக சவர்க்காரம் போன்ற அழுக்கு நீக்கிக ளின் தொழிற்பாடு தடைப்படுவதுடன், இதனால் அதிகளவு செலவுகளும் ஏற்படுகின்றன.

### 4. தொற்று நோயாக்கிகளின் தாக்கம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் நோய்த் தொற்று களை உருவாக்கக்கூடிய பக்ரீறியாக்களின் அளவும் தரைக் கீழ் நீரில் அதிகமாக உள்ளது. சுகாதாரத் திணைக்கள அறிக்கையின் படி இலங்கையில் வருடந்தோறும் நெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்படும் நோயாளிகளில் ஏறக்குறைய 30 வீதத்தினர் யாழ்ப்பாணத்தவர்களேயாவர்.

தென்மராட்சி பிரதேச நீர்நிலைகளில் அதிகளவிலான இரும்பு, மங்கனீசு என்பன கலந்த நீராக காணப்படுகின்றது. எனவே இத்தகைய நீரை குடித்தல், சமைத்தல், துணிகள் தோய்த்தல் போன்ற தேவைகளுக்கு பயன்படுத்த முடியாது என்பதால் மக்கள் அதிக தூரத்திலுள்ள, மேற்குறித்த படிவு களற்ற நீர் நிலைகளை நாடிச் செல்கிறார்கள்.

### 5. அதீதமான களை கொல்லி, உரம் என்பவற்றின் பயன்பாடு

அதிக உற்பத்தியை நோக்காக கொண்ட விவசாய முறை யினாலும் வருமானத்தை ஈட்டுமுகமாகவும், பயன்படுத்தும் அதிகரித்த இரசாயன உரம், பூச்சி கொல்லிகள், பீடை கொல்லிகள், களை கொல்லிகள் போன்றவற்றில் உள்ள அதிகளவான இரசாயனங்கள் எமது நிலத்தடி நீரையே சென்றடைகின்றன. குறிப்பாக நிலத்தடி நீரிலே நைத்திரேற் அளவானது மிக அதிகரித்துச் செல்வது அவதானிக்கப்படு கின்றது. குறிப்பாக செம்மண் உள்ள பகுதிகளில் உள்ள நிலத்தடி நீரிலே நைற்றேட் - நைற்றோஜன் செறிவு குடி நீரிலே இருக்கக்கூடிய அளவான 10ppm அல்லது 10mg/L அளவை விட மிக அதிகளவில் காணப்படுகின்றது. ( இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது குடிநீரிலே காணப் பட்ட கூடிய உயர் நைத்திரேற்று செறிவு எனக்கொள் ளப்படுமிடத்து 45ppm அல்லது 45mg/L ஆகும்).

இங்கு செம்மண் பகுதிகளிலே மிதமிஞ்சிய Nitrate செறிவு காணப்படுகின்றது. நைத்திரேற் ($NO_3^-$) ஆனது மனித சமிபாட்டு தொகுதியிலே உள்ள நுண்ணங்கிகளி னால் உயிரிரசாயன தாக்கத்திற்கு உட்பட்டு ஈமோகுளோ பினிலுள்ள Fe210 அயன்களை $Fe^{3+}$ ஆக ஒட்சியேற்று வதுடன் நைத்திரேற்று ($NO_3^-$) ஆனது நைத்திரைற்று ($NO_2^-$) ஆக தாழ்த்தலுக்கு உட்படுகின்றது. இதனால் hae-moglobin ஆனது methaemoglobin ஆக மாற்றமடை யும். இவ் methaemoglobin உடல்கலங்களுக்கு தேவை யான ஒட்சிசனை காவிச் செல்லாது. இதனால் ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்பட்டு தோலானது நீலமாக மாற்றமடையும். இவ் நிலைமை methaemoglobinaemia அல்லது நீலக் குழந்தைகள் – Blue Babies என அழைக்கப்படுகின்றது. எமது உடலினுள் காணப்பட கூடிய நைத்திரேற் ஆனது நைத்திரைற்றாக தாழ்த்தலுக்குட்பட்டு. அது பின்னர் நைத் திரோசோ அமைன்கள்ாக (Nitrosamine) மாற்ற மடையும். இவ் Nitrosamine ஆனது புற்றுநோய்களை (Carcinogenic compounds) ஏற்படுத்தவல்ல சேர்வை களாகும். யாழ்குடா நாட்டிலே அதிகளவான வயிறு மற்றும் Oesophagus புற்று நோயாளர்கள் குடிநீருக்காக பயன்படுத்திய நீர்மூலங்களில் அதிகளவான $NO_3^-$ செறிவு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசாமியும் கலக்ஸியும்

## அத்தியாயம் - 3 இடைக்காலத் தீர்வு

### அறிவியல் தொடர் கதை

(இந்தத் தொடரில் வரும் சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே, அப்படி யாருக்கும் பொருந்தினால் அது தற்செயலானதே)

'படலை' ஜே.கே



தற்சமயம் எண்பத்து நாலாவது பிறப்பாக, யாழ்ப்பாணத்தில், யோகராஜா-பூமகள் தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக. சுமந்திரன் பூமியில் பிறக்கு முன்னமேயே, அதர்வ வேதத்தை உருவாக்கியவர்கள், ஒளியை விட வேகமாக செல்லும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்து. சுமந்திரன் வர்வை அறிந்து, அது பற்றிய சூத்திரங்கள் பலவற்றை எழுதியிருந்ததும், சுமந்திரன், அப்போதே எழுதிய அனைவரையும் கொன்று, எதிர்காலத்தில் அது பற்றி யார் எழுதினாலும் "அவன் விசரில் பிதற்றுகிறான்" என்று வாசிப்பவர்கள் நம்பும்படி, மனித இனத்து மூளையின் இலத்திரன்கள் அமைப்பை மாற்றி, பல தில்லு முல்லு செய்தும், இன்றைக்கு வரைக்கும் பிறந்து மறைந்து மாறி மாறி மறுபிறவி எடுத்து சமாளித்து வருகிறார். இன்றைக்கு அதற்கும் வேட்டு!

மேலும் சுமந்திரனைப் பற்றி விவரிக்க அவகாசம் கொடுக்காமல் கந்தசாமி இடைமறிக்கிறார்.

"எப்பவுமே லூசுத் தனமா கதைக்கிறதே உன்ர வேலையா போயிட்டுது. இங்க வீட்டை இடிக்கபோறாங்கள் எண்டு நான் கத்திக் கொண்டு இருக்கிறன் .. நீ என்னண்டா தண்ணி அடிக்கலாம் வா எண்டு கேக்கிற, விட்டா அவனையும் சேர்த்து கூப்பிடுவாய்"

கந்தசாமி பேசியதை சுமந்திரன் கணக்கெடுத்ததாய் தெரியவில்லை. அடிக்கடி வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டே இருந்தார். சோமரத்னவுக்கு சுமந்திரனின் வருகை குழப்பமாக இருந்தது. அதைவிட அவர் பேசியது இன்னமும் குழப்பமாக இருந்தது. சுமந்திரன் சோமரத்னவை ஒரு மாதிரியாக பார்த்துகொண்டே கந்தசாமியிடம் சொன்னார்.

"பிடிக்கிறவன் பிடிக்கட்டும். அதுக்கேன் நீ படுத்துகிடக்கிற? வா நாம போய் தண்ணியடிப்பம்"

"உனக்கு மெய்யாலுமே முத்தி போச்சுதான் சுமந்திரன். நான் இந்த இடத்தைவிட்டு எழும்பினா அவங்கள் புல்டோசரை எடுத்து வீட்டை இடிச்சிடுவாங்கள்"

அப்போதுதான் சுமந்திரனுக்கு கந்தசாமியின் பிரச்சினை கொஞ்சம் புரிந்தது. அவரளவுக்கு அது சின்ன பிரச்சினை என்றாலும் இதைத் தீர்த்தால்தான் கந்தசாமி தவறணைக்கு வருவார் என்றும் விளங்கியது. சுமந்திரனின் மாஸ்டர் மைண்ட் வேலை செய்ய ஆரம்பித்தது. சுமந்திரன் எதையுமே உணர்ச்சிபூர்வமாக அணுகாமல் அறிவுபூர்வமாகவே அணுகுவார். அப்படி செய்தாலேயே எதிராளியை வெற்றி கொள்ளலாம் என்று திடமாக நம்புபவர். ஆனால் பூமி மனிதர்களின் பல செயற்பாடுகள் இத்தனை பிறப்புகள் எடுத்தும் சுமந்திரனுக்கு இன்னமும் சரியாகப் புரிவதில்லை. அதுவும் யாழ்ப்பாணத்தான் திங்கிங் சுத்தம். இவன் கந்தசாமி படுத்துக்கிடந்தால் என்ன? புல்டோசர் மேலும் நெருங்கினால் கந்தசாமி பயத்தில் எழுந்துவிடுவான். ஆனால் புல்டோசர் நகராது. காரணம் சிவசங்கர் மேனன். ஆனால் புல்டோசரை ஏத்தினால் சிவசங்கர் மேனன் வெறும் வருத்தம் மட்டுமே தெரிவிப்பார் என்பது சோமரத்னவுக்கு தெரியாது. கோத்தா பெயரை கொண்டு மிரட்டினால் சோமரத்ன பின்வாங்கிவிடுவான் என்பது கந்தசாமிக்கு தெரியாது. கந்தசாமி வீடு இடிந்தாலோ, அல்லது செத்தாலோ,தமிழகத்தில் உருவாக கூடிய ஆர்ப்பாட்டம் அடுத்த "பில்லா" அஜித் "நட"க்கும் வரையில்தான் என்பது சிவசங்கர் மேனனுக்கு தெரியாது.

இந்த வட்டத்தில், ஒரு இயல்பான புரிதல் இருக்கிறது. அந்த புரிதல் வட்டத்தை எவன் முதலில் உடைக்கிறானோ, அவன் வெற்றி அடைகிறான். ஒருவேளை துணிந்து சோமரத்ன கந்தசாமி மீது புல்டோசரை ஏற்றினால், சமநிலை உடைந்து, கந்தசாமியின் பேரப்பிள்ளைகள் கனடாவில் உண்ணாவிரதப் போராட்டம் செய்து. அதில் கடைக்குட்டி சுரேஷ் ஸ்டான்போர்டில் படிக்கும்போது, எதிர்கால அமெரிக்க ஜனாதிபதியாக வரப்போகின்ற சாள்ஸ் லெட்டர்மானின் ரூம் மேட்டாக இருந்து, ஒருமுறை சேர்ந்து தண்ணியடிக்கும்போது, கந்தசாமி மீது ஆமி புல்டோசர் ஏற்றிய கதையை லெட்டர்மானுக்கு சொல்ல, அவனும் வெறியில், இலங்கை மீது எதிர்காலத்தில் அழுத்தம் கொடுக்கப்போவதாக டக்கீலா மீது சத்தியம் செய்ய ... இப்படி இரு வினாடிகளில் சுமந்திரன் மனதில் தோன்றி மறைந்ததை இருபதாம் நூற்றாண்டில் ஷ்ரோடிங்கர் என்ற விஞ்ஞானி "நிச்சயமற்ற தத்துவம்" என்ற விதியின் அடிப்படையில் ஏற்கனவே சொல்லிவிட்டிருந்தார். அதையும் ஐன்ஸ்டீன் என்ற பெயரில் அப்போது பிறந்திருந்த சுமந்திரன் மறுத்து வாதாடி, பூமி இனம் இன்னமும் முட்டாளாகவே இருக்குமாறு பார்த்துக்கொண்டார்.

"ஸோ, நீ படுத்திருந்தா அவங்கள் புல்டோசரை ஏத்த மாட்டாங்கள். அவங்கள் திரும்பிப்போகும் வரைக்கும் நீயும் படுத்து கிடக்க போறாய்"

சுமந்திரன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டு சோமரத்னவிடம் போனார். சரளமாக சிங்களத்தில் விளாசினார்.

"மேஜர் சோமரத்ன, அப்பிட டிக்க பிரச்சனைய தங் .. (சின்ன பிரச்சனை ஒன்று)

"மிஸ்டர் கந்தசாமிக்கு இந்த காணி சொந்தமில்ல. இது மிஸிஸ் செல்வராணி பெயரிலதான் இருக்கு. அவர் கனடா சிட்டிஸன். கனடா சிட்டிஸன் எங்கட நாட்டை சொந்தம் கொண்டாட முடியாது"

"ஐ நோ, ஐ நோ .. நான் இப்ப இந்த பிரச்சனையை தீர்க்க வரேல்ல. என்ர சிக்கல் என்னெண்டா இவர் கந்தசாமி படுத்த இடத்தில இருந்து எழும்ப மாட்டாராம்"

"ஓ அப்பிடி என்றால் நாங்களும் அவர் எழும்பும் மட்டும் வெயிட் பண்ணுவோம்"

"தட்ஸ் த பொயிண்ட். நீங்களும் பின் வாங்க மாட்டீங்க. அவரும் எழும்ப மாட்டாராம். அப்பிடி எண்டா இரண்டு பேரும் இப்பிடியே ஸ்டக் ஆகி இங்க நிக்க போறீங்களா?"

சுமந்திரன் சொல்வதில் ஏதோ ஒரு லொஜிக் இருப்பது போல சோமரத்னவுக்குபட்டது.

"என்ன சொல்ல வாரீங்க மிஸ்டர்"

"சுமந்திரன் .. ஐ ஆம் மிஸ்டர் சுமந்திரன்"

"ஓ .. ஹாய் மிஸ்டர் சுமந்திரன் .. ஐ ஆம் சோமரத்ன .. மேஜர் சோமரத்ன .. ஸோ இத எப்பிடி தீர்க்கலாம் என்று நினைக்கிறீங்க?"

"நிரந்தரமா தீர்க்க முடியாது, ஆனால் ஒரு இடைக்கால தீர்வு செய்யலாம். எனக்கு அவசரமா கந்தசாமியை தவறணைக்கு கூட்டிக்கொண்டு போகோணும்"

"ஓகே .. அதுக்கு என்ன"

"ஆனா அவர், நீங்க வெளியேறாம அசைய மாட்டார். ஸோ இதில ஒரு சின்ன ப்ரேக் எடுப்பம். ஒரு அரை மணித்தியாலம் நான் கந்தசாமியை கூட்டிக்கொண்டு போறன்"

"ஆனா அவர் போனா நாங்க வீட்டை இடிச்சிடுவம் மிஸ்டர் சுமந்திரன்"

"அது .. அங்கதான் நான் வாறன். அவர் இருந்தா இடிக்கமாட்டீங்க. இல்லாட்டி இடிச்சிடுவீங்க. இது தெரிஞ்சு அவரும் அசையிறார் இல்ல. நீங்களும் அசையிறீங்கள் இல்ல"

"ஸோ?"

"ஸோ அவர் இங்க படுத்தே கிடக்கிறது என்பது முக்கியமில்ல. அப்பிடி நினைத்தாலே போதும் இல்லையா? ஸோ நாங்க திரும்பி வரும்வரைக்கும் அவர் இங்கேயே கிடக்கிறதா யோசிச்சுக்கொண்டு பேசாம நில்லுங்க. நீங்க இதுக்கு ஓம் என்று சொல்லாட்டி, அவர் எப்பிடியோ இங்கேதானே கிடக்க போறார்? நோ யூஸ் இல்லையா?"

இவ்வளவு காலமும் நல்லூர் மக்களுக்கு மட்டுமே சுத்தியது, சோமரத்னவுக்கும் சுத்த தொடங்கியது. ஆனாலும் சுமந்திரன் பேசும்போது ஏதோ ஒரு சென்ஸ் இருப்பது போலவே சோமரத்னவுக்கு தோன்றியது.

"ஓகே .. சுமந்திரன். எப்பிடியோ அவர் கிடக்கத்தானே போறார். ஒரு அரை மணித்தியாலம் போயிட்டு வாறதில பிரச்சினை இல்லை .. ஆனா .. ஆனா இதில எனக்கு என்ன பிரயோசனம்?"

"ஆ .. நாங்க திரும்பிவந்த பிறகு நீங்களும் ஒரு ஷோர்ட் ப்ரேக் எடுக்கலாம். நீங்க இங்கேயே நிக்கிறதா நினைத்துக்கொண்டு நாங்கள் படுத்துக்கிடக்கிறோம்"

சோமரத்னவுக்கு இப்போது சுமந்திரன் பேசுவது சரியென்றேபட்டது. இப்படி ஒருவர் ஊருக்கு ஊர் இருந்தால், இந்த நாட்டில் பிரச்சினையே இருக்காதே என்று வெகுவாக அவரை மனசுக்குள் மெச்சினார். ஆனால் கந்தசாமி சுமந்திரனுக்கு மறை கழன்று விட்டது என்றே நினைத்தார்.

"என்ன மோட்டு கதை கதைக்கிற சுமந்திரன்? பூனையை பாலுக்கு காவலா விட்டிட்டு போறதா? உன்னை போல ஆயிரம் இல்லை, ஒரு லூசு இருந்தாலே போதும் .. எல்லா காணியையும் அவன் பிடிச்சிடுவான்"

"ஆ பூனையை காவலுக்கு விடுதல் .. சூப்பர் ஐடியா" என்று சொல்லிக்கொண்டே சுமந்திரன் சோமரத்னவிடம் திரும்பினார்.

"மேஜர் சோமரத்ன, எங்கள் டீலிங்கில் ஒரு சின்ன சிக்கல்"

அரை மணித்தியாலத்துக்கு முதல் போட்ட டீலிங்கே நிரந்தர தீர்வு என்று நினைத்துக்கொண்டிருந்த சோமரத்ன மீண்டும் நெற்றியை சுருக்கினார்.

[illegible]

"இப்ப பார்த்தீங்கள் என்றால், கந்தசாமி படுத்த இடத்தில யாருமே இல்ல! ஸோ லொஜிகலா, எதிர்ப்பு இல்லை என்று நீங்கள் புல்டோசரை மூவ் பண்ணி இடிக்கலாம் தானே?"

"ஓகே .. அதுக்கு என்ன செய்யிறது?"

"அதுக்கு, வந்து ஒரு அரை மணித்தியாலம் .. ஜஸ்ட் அரை மணித்தியாலம் நீங்க புல்டோசருக்கு முன்னால படுக்கோணும். அதுக்குள்ள தண்ணி அடிச்சிட்டு நாங்க டக் எண்டு வந்திடுவம்"

இப்போது இருவரில் யாரோ ஒருவர் முட்டாளாக்கப்படுவதாக சோமரத்ன உணர்ந்தார். அதுவும் தன் பக்கம் தோற்கிறது என்று ஒரு எண்ணம் வர, பிஸ்டலை நோக்கி அவரின் கை நீண்டது. சுமந்திரன் சுதாரித்தார்.

"பொறுங்க, நாங்க திரும்பி வந்ததும், நீங்களும் தவறணைக்கு போகலாம், உங்கட இடத்தில நான் நிற்கிறன். நீங்க வரும் வரைக்கும் கந்தசாமி எழும்பி போகாத வண்ணம் பார்த்துக்கொள்ளுறன். நீங்க ஆறுதலா வரலாம்"

சோமரத்ன தலை பட பட வென்று சுழல தொடங்கிவிட்டது. சுமந்திரன் தன்னை சுற்றி ஒரு புரிதல் சங்கிலி போடுவதை அவர் உணரவில்லை. ஏன் கந்தசாமி எழும்பி போகாதவாறு இராணுவ தரப்பு கவனித்துக் கொள்ளவேண்டும்? கந்தசாமி எழுந்து போனால் நல்லதுதானே? என்ற கேள்வி அவருக்கு எழவேயில்லை.

"இட் மேக்ஸ் லொட் ஒப் சென்ஸ் மிஸ்டர் சுமந்திரன். நீங்க போய் வரும் மட்டும் நான் புல்டோசருக்கு முன்னாலே படுக்கிறன். நீங்க திரும்பி வந்து, கந்தசாமி இந்த இடத்த விட்டு போகாம பார்த்துக்கொண்டால், நானும் வெளிய போயிட்டு வரலாம்.. தாங்க்ஸ் போர் த வோண்டர்புல் சொலுஷன்!"

"இட்ஸ் மை பிளஷர் மேஜர்"

என்று சொல்லியவாறே சுமந்திரன் கந்தசாமியை இழுத்துக்கொண்டு தவறணைக்கு விரைந்தார். கந்தசாமி குழம்பிவிட்டார்..

"இவன் ஆமிக்காரனை நம்பி வீட்டை விட்டிட்டு போலாமே? அவனும் லூசன் போல தன்ர புல்டோசருக்கு முன்னாலே தானே படுக்கிறதுக்கு ஓம் எண்டுறான்!"

சுமந்திரன் சிரித்துக்கொண்டே "இப்ப பாரு" என்று கந்தசாமிக்கு மெதுவாக சொல்லிக்கொண்டு சோம்ரத்னவிடம் கத்தி சொன்னார்.

"மேஜர், நாங்க இல்லாத நேரம் ஆரும் ஆமிக்காரன் இந்த வீட்டை இடிக்க வந்தா விடாதீங்க. சரியா?"

"ஏக்க பா நே .. நோ, வே அதெப்படி அவையள் நினைச்ச பாட்டுக்கு காணியை பிடிக்க ஏலும்? நீங்க பயப்படாதீங்க..நான் அசைய மாட்டன்! யூ என்ஜோய் த டொடி!"

கந்தசாமிக்கு நடப்பது எல்லாமே கனவா நனவா என்றே ஊகிக்கமுடியவில்லை. அவனே வந்தான். இடிக்கபோகிறேன் என்றான். இப்போது அவனே இடிக்கக் கூடாது என்று புல்டோசர் முன்னால் படுக்கிறேன் என்கிறான். நாங்கள் போனா பிறகு இடிக்கமாட்டான் என்று என்ன நிச்சயம்?

"யோசிக்காத கந்தசாமி, சீவியம் பூரா .. ஏன் இந்த உலகம் இருக்கும் வரைக்கும் இந்த வீடு உனக்குத்தான். யாரும் ஒண்டும் செய்ய ஏலாது!"

"எவ்வளவு உறுதியா சொல்லுற சுமந்திரன்?"

"ஏனெண்டா .. இன்னும் ஒரு மணித்தியாலத்தில் இந்த உலகமே இருக்காது .. வெடிச்சிடும்!"

இவர்கள் பேசிக்கொண்டுபோவது எதுவுமே சோமரத்னவுக்கு கேட்கவில்லை. அவர் சாவகாசமாக நிம்மதி பெருமூச்சுடன் தன் ஜீன்ஸ் பின்பக்கத்தை தட்டியவாறே புல்டோசர் முன்னாலே சென்று படுத்தார். கூட இருந்த ஆமிக்காரர் குழம்பிப்போய் மாத்தையா என்றார்கள். சோமரத்ன அவர்களைப் பார்த்து தெளிவான தமிழில் சொன்னார்.

""இது என்ர வீடு .. ஏலுமெண்டா இடியுங் கடா பாப்பம்!"

*(கலக்குவார் கந்தசாமி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரித்திரா,
கோண்டாவில்.

சிறுகதை

"மிகவும் வறுமைப்பட்ட குடும்பத்தில் , கூட வே நான்கு சகோதரிகளுடன் பிறந்த தன்மையினால் என்னவோ மிகவும் பொறுமைசாலிப் பெண்ணாக கோமதி மாற்றப் பட்டிருந்தாள். படித்துப் பட்டம் பெற்று ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்பு தான் கோமதிக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது. கூட வே ஒரு வரனும் கிடைத்து விட துணிவோடு வாழ்வை ஏற்றுக்கொண்டாள்.

# விதி வரைந்த பாதை வழியே...

காலைப் பிரார்த்தனைக்காக பாடசாலையின் இரண்டாம் மணி ஒலித்தது.மாணவர்கள் அணிவகுத்துச்சென்று மண்டபத்தில் குழுமி இருந்தனர். மாணவி ஒருத்தி இனிமையான குரலில் கண்களினை மூடியவாறு தேவாரம் பாடினாள்.

காலைப்பிரார்த்தனைக்கு தலைமை தாங்கிய அதிபர் "கோமதி ஆசிரியரின் நற்சிந்தனை இடம் பெறும்" என அறிவித்தார். மாணவர்கள் எல்லோரும் காதைக் கூர்மையாக்கி அமைதியுடன் காணப்பட்டனர். கோமதி ரீச்சரின் நற்சிந்தனை கேட்பதென்றால் ஆசிரியர்கள் உட்பட அனைவருக்கும் அலாதிப்பிரியம்.

கணீரென்ற ஒலி, சரளமான பேச்சு,வசீகரமான மொழிநடை இவை அனைத்துக் உகும் கோமதிக்கு நிகர் கோமதியே தான்.

கைதட்டல் பலமாக ஒலிக்கிறது. நிமிர்ந்த நடை , புதுமை படைத்திட வேண்டும் என்ற தீவிரப் போக்கு , தளர்ச்சியே அறியாத உள்ளம். இவை அனைத்தும்கோமதிக்கே உரியவை.

மிகவும் வறுமைப்பட்ட குடும்பத்தில் ,கூடவே நான்கு சகோதரிகளுடன் பிறந்த தன்மையினால் என்னவோ மிகவும் பொறுமைசாலிப் பெண்ணாக கோமதி மாற்றப் பட்டிருந்தாள். படித்துப் பட்டம் பெற்று ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்பு தான் கோமதிக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது. கூடவே ஒரு வரனும் கிடைத்துவிட துணிவோடு வாழ்வை ஏற்றுக் கொண்டாள்.

ஆசிரியர் நியமனம் கிடைத்து விட பணியையும் செவ்வனவே செய்து குடும்பத்தையும் நடாத்தி வந்தார். பாடசாலைப் பணிகளில் பங்கு கொண்டும் மாணவர்களின் கல்வியில் தனிக் கவனமும் செலுத்தி எல்லோரினதும் அன்புக்கும் பாத்திர மானவர் தான் கோமதி.

மூன்று ஆண்டுகளுக்குப் பின் பெண் குழந்தை ஒன்றுக்கு தாயாகி விட்டார். மிக்க அன்புடனும் , பரிவுடனும் குழந்தையை கவனித்து வந்ததுடன் எந்த ஒரு குறைவுமின்றி தைரியமுள்ள. புத்திசாலிப் பெண்ணாக வளர்த்து ஆளாக்க வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டார். அவள் நினைத்த நேரம் சரியில்லையோ என்னவோ? வன்னி மண் மீதான யுத்தமும் பல திசை எங்கும் முடுக்கி விடப்பட்டிருந்தது. நாள்தோறும் ஆயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர்வது வெகு சாதாரணமாகவே நடந்து கொண்டிருந்தது. அவர்களுடன் கோமதியின் குடும்பமும் இடம் பெயர்ந்து கொண்டிருந்தது. இந்த நிலையில் கோமதியின் உள்ளத்தில் இனம் புரியாத அச்ச உணர்வு மனதை ஆட்கொள்ள கணவனுடனும் குழந்தையுடனும் ஓடிக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் காலை. கண்விழித்து இன்று நல்ல பொழுதாக இருக்க வேண்டும் எனக்கடவுளை வேண்டிக் கொண்டாள். இருந்த போதும் வழமைக்கு மாறாக ஷெல் சத்தம் இடைவிடாது ஒலிக்கத் தொடங்கியது.மக்கள் முண்டியடித்து குழிகளுக் குள் பதுங்கிக் கொள்ள , கோமதியும் குழந்தையை அரவணைத்துத் தூக்கியவாறு நகர முற்பட்ட போது எங்கிருந்தோ வந்த ஷெல் வெடிக்க அந்த இடத்திலேயே பலியானான் அவளது கணவன்.

கதிகலங்கிப் போனாள் கோமதி. செய்வதறியாது திகைத்தாள். நிலைமையைச் சட்டென உணர்ந்து கொண்டவளாக குழந்தையுடன் ஓடிச் சென்று பதுங்கு குழிக்குள் தஞ்சமடைந்தாள், ஷெல் வீச்சுக்களின் ஓசையும் , குண்டு வெடிப்பு ஓசையும் ,துப்பாக்கி ஓசையும் காதைச் செவிடாக்க குழந்தைகளின் வீரிட்ட ஒலியும் ,மரண ஓலங்களும் எங்கும் நிறைந்தன..

டும்டும், கும்கும், டப்டப், சடசட, படபட, டிக்டிக் என பலவாறு வெடிச்சத்தங்கள் எழும்பின. ஷெல் சத்தம்சிறிது ஓய பதுங்கிக் கொண்ட மக்கள் தலையை மெதுவாக நீட்ட தொடங்கினர். பிணக்குவியல்களின் மத்தியில் சதைத்துண்டங்களினுள்ளே காணாமற் போன , இழந்து விட்ட தம் உறவுகளை தேடிக் கொண்டிருந்தனர். மரணித்து போன கணவனின் சடலத்துக்குக் கிட்டச் சென்று அழுது அரற்றினாள். எதிர்கால வாழ்வு வினாக்குறியாக மனோதைரியம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்தது அவளுக்கு. பின் சட்டென குழந்தையில் கண்களை பதித்த போது தன் பிஞ்சு விரல்களினால் தந்தையை வருடிக் கொண் டி ருப்பதைக் கண்ணுற்றாள்.

மனத்தைரியத்துடன் வேறு இடம் சென்று தஞ்சம டைந்தாள் கோமதி.

அடுத்தடுத்து [illegible] களால் கோமதியின் இரண்டு கால்களும் துண்டாக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்தாள். ஆனால் தெய்வாதீனமாக குழந்தைக்கு ஒன்றும் ஏற்படவில்லை. சுடு மணலில் கிடந்து புழுவாக த் துடித்தது. குழந்தைக்கருகில் செல்ல முடியாமல், கதறினாள்.

ஆண்டவன் அருளோ என்னவோ இவள் முன் இளம் தம்பதியர் வந்து நின்றனர். குழந்தை இருந்த இடத்தைக் காண்பித்து இரு கைகளையும் கூப்பியவாறு "இந்தக் குழந்தையையும் உங்களுடன் எடுத்து சென்று காப்பாற்றுங்கள்" என்று கூறியவாறே மயங்கி விட்டாள்.

பல மாதங்களாக மக்கள் முட்கம்பி வேலிகளுக்குள்ளே முடக்கப் பட்டு முகாம்களில் வாழ்வைக் கழித்து வந்தனர்.

மக்கள் பல விதங்களிலும் துன்புற்று வாடி வதங்கி நின்ற போது திடீரென ஒரு செய்தி!அதாவது மக்கள் தாம் விரும் பும் இடங்களுக்குச் செல்லலாம் என்று அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இரு கால்களையும் இழந்த கோமதி சாவகச்சேரி பாடசாலையில் தங்க வைக்கப்பட்டாள்.

பாரதியின் புதுமைப் பெண் இவள் என்று பார் புகழ வாழ்ந்த கோமதி இன்று யாரின் தயவும் இன்றி ,தன்னம் தனியே ,தான் பெற்ற செல்வத்தையும் இழந்து மதிய உணவுக்காக அசைந்த வண்ணம் [illegible]நின்றாள்.

அப்போது இவள் முன்னால் தாயொருத்தி இடுப்பில் அழகிய குழந்தை வாயில் விரலை வைத்துச் சூப்பிக் கொண்டிருந்தது.

அவ்வளவு தான் அக்குழந்தையை வாங்குவதற்காக இரண்டு கைகளையும் நீட்டினாள். கண்களில் இருந்துகண்ணீர் ஆறாய்ப் பெருகியது.

முகத்தில் இனம்புரியாத இன்ப உணர்ச்சி. சூழ்நிலையை மறந்து. "இதோ என் குழந்தை" என்று வீரிட்டுக் கத்தினாள். குழந்தையை வைத்திருந்த தாயோ மிரண்டாள். இந்தக் குழந்தை என்னுடையது. என கோமதி கத்திய வாறே தன் கதையைக் கூறத் தொடங்கினாள் கோமதி. அவள் கூறிய கதைகளை கேட்டு அருகிலிருந்தோர் கண்ணீர் வடித்தனர்.

"தானாடாவிட்டாலும் தசையாடும்" என்பதுபோல் குழந்தையும் கோமதியிடம் வந்து ஒட்டிக் கொண்டது. குழந்தையை வைத்திருந்த தாயும் உண்மையைக் கூறி னாள். குழந்தையிடம் அலாதியான அன்பு வைத்திருப்பதாகவும் அதனைப் பிரிந்திருக்க முடியாது எனவும் மனம் நெகிழ்ந்து கூறினாள்.

பிள்ளையைப் பெற்றவள் மன்றாடினாள். .பிள்ளையைப் தத்தெடுத்தவள் கெஞ்சினாள். இருப்பதோ ஒரு குழந்தை! தராசு இரு பக்கமும் சமமாகவே இருந்தது. யாரிடம் குழந்தையைக் கொடுப்பது? எல்லோரின் தீர்ப்பும் கோமதியின் பக்கமே

*(யாவும் கற்பனை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான கம்போடியாவில், 12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக கருதப்படும், அருமையான சிற்பக் கலைகளை உள்ளடக்கிய, அங்கோர்வாட் கோயில் உள்ளது. பிரமாண்டமான அந்த கோவில் வளாகத்தில், மறைந்து கிடந்த சுவரோவியங்கள் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. அந்த ஓவியங்கள், 500 ஆண்டு பழமையானவை என்பதும், அவை காலப்போக்கில் கண்டுகொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டதையும், தொல்பொருள் ஆய்வாளர்கள், இப்போது கண்டறிந்து உள்ளனர்

# வானத்தில் உணவுப் பரிமாற்றம்





வானத்தில் சமைத்து, பரிமாறப்பட்ட அறுசுவை விருந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இச்சம்பவம் பெல்ஜியத்தில் இடம்பெற்றுள்ளது.

பெல்ஜியம் தலைநகர் புருசெல்ஸ்ஸில் வியக்க வைக்கும் அறுசுவை விருந்து, வானத்தில் உலவியபடியே பரிமாறப்பட்டது.


இதற்காக 'குடை ராட்டினம்' போன்றதொரு வட்ட வடிவில் சாப்பிடும் அறை தயாரிக்கப்பட்டது. மேலும் அந்தநகரில் உள்ள 'பர்க் டியு சின் குவண்டெனெய்ர்' என்ற உயர்ந்த கட்டடத்தின் உச்சியிலிருந்து கிரேன் இயந்திரத்தின் உதவியால், இந்த குடை ராட்டினம் நிலை நிறுத்தப்பட்டது.

இதன்பின் கைப்பக்குவம் மிகுந்த பிரபல சமையற்காரர் ஒருவர் அதில் இருந்தபடியே சுடச்சுட உணவு வகைகளை தயாரித்து வாடிக்கையாளர்களுக்கு பரிமாறினார்.

அப்போது அங்கு பாதுகாப்பு பெல்ட்டுகளுடன் கட்டப்பட்டிருந்த வாடிக்கையாளர்கள் வியப்பில் ஆழ்ந்ததுடன், தாங்கள் இருப்பது விண்ணிலா அல்லது மண்ணிலா என ஆச்சரியத்தில் உறைந்தபடியே பரிமாறப்பட்ட உணவுகளை ருசிபார்த்தனர்.

# 15 இலட்சத்துக்கு ஏலம்போன பென்சில்

நிலவுக்கு சென்று ஆய்வு மேற்கொண்ட விண்வெளி வீரரின் பென்சில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ரூ.15 லட்சத்துக்கு ஏலம் போனது. அமெரிக்காவில் நிலவுக்கு சென்று ஆய்வு பணிகளை மேற்கொள்ள அப்போலோ விண்கலத் திட்டத்தை நாசா உருவாக் கியது. கடந்த 1970ஆம் ஆண்டு அப்போலோ - 13 என்ற விண்கலத்தின் கட்டுப்பாட்டு விமானியாக ஜாக் ஸ்விஜெர்ட் என்ற அமெரிக்க விண்வெளி வீரர் பணியாற்றினார். பின்னர் 1982ஆம் ஆண்டு 51 ஆவது வயதில் காலமானார். நிலவுக்குசென்றுஆய்வுசெய்த போது ஜாக் ஸ்விஜெர்ட் பயன்படுத்திய பொருள்கள் லாஸ் ஏஞ்சல்ஸ்நகரில்உள்ளடிசான்டர்ஸ் ஏல நிலையத்தில் ஏலம் விடப்பட்டது. அவற்றில் அவர் பயன்படுத்திய பென்சில் ஒன்று ரூ.15 லட்சத்துக்கும், பற்தூரிகை ரூ.18 லட்சத்துக்கும் ஏலம் போனது.



# பூமியைப் போல புதிய கிரகம் கண்டுபிடிப்பு

'கெப்லர் 10 என, பெயரிடப்பட்டுள்ள புதிய கோளை கண்டுபிடித்துள்ளனர் அமெரிக்க விஞ்ஞானிகள். இந்தக் கோள், பூமியின் எடையை போல, 17 மடங்கும், பரப்பளவில் இரண்டு மடங்கும் பெரிதாக இருப்பதால், 'கோட்ஜிலா கோள்' என்று விஞ்ஞானிகளால் அழைக்கப்படுகிறது. இந்த கோள், 45 நாட்களில் சூரியனை சுற்றி வருகிறது. உறுதியான பாறைகளால் நிறைந்துள்ள இந்தக் கோளில், உயிர் வாழ்வதற்கான சூழல் உள்ளதா என்ற ஆய்வில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான, நாசாவின், 'கெப்ளர் ஸ்பேஸ்கிராப்ட்' இந்த கோளை முதலில் கண்டுபிடித்தது.'இதுவரை இத்தகைய பெரிய கோள் கண்டுபிடிக்கப்படவில்லை' என, அமெரிக்காவின் ஹார்வர்ட் ஸ்மித்சோனியன் வான் இயற்பியல் மைய விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

ஸ்லோவோக்கியா நாட்டின் ஸ்டீவன் என்பவர் மாட்லங் நோயால் பாதிக்கப்பட்டு முகத்தில் பெரிய கட்டியுடன் 10 ஆண்டுகளாக வாழ்ந்து வந்துள்ளார். மாட்லங் நோயால் பாதிக்கப்பட்டிருந்த இவருக்கு, கொழுப்புகள் கன்னத்திலும், தாடையிலும் தங்கிவிட்டன. இதனால் இவரால் கழுத்தைக் கூட திருப்ப முடியவில்லை. இதனை அடுத்து மருத்துவர்கள் 5 மணி நேரம் சிகிச்சைக்கு பின் 13 பவுண்ட் எடை கொழுப்பை நீக்கியுள்ளனர்.

இதுகுறித்து ஸ்டீவன் கூறுகையில், எல்லோரும் தன்னை பார்ப்பது தனக்கு சங்கடமாக இருந்ததாகவும், தனது தலையை கூட அசைக்க கஷ்டப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 வருடங்களாக இவருக்கு சிகிச்சை செய்வதில் மருத்துவ ரீதியாக பிரச்சினை இருந்தது. தற்போது சிகிச்சையின் பின், உடல் நலம் ஆரோக்கியமும் அடைந்துள்ளார்.



கடற்கரையில் பணத்தை புதைத்து வைத்துள்ளதாக, கோடீஸ்வரர் ஒருவர், 'ருவிட்டர்' சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட தகவலால், அமெரிக்கா முழுவதும் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சவுத்லேண்டு பகுதியில் வசிக்கும் இந்த கோடீஸ்வரர் வெளியிட்ட தகவலில், 'என்னிடம் உள்ள பணத்தை சிறு, சிறு கவர்களில் போட்டு, ஹர்மோசா கடற்கரை முழுவதும் புதைத்து வைத்துள்ளேன் தேவைப்படுபவர்கள் எடுத்துக் கொள்ளலாம்' என, கூறியிருந்தார்.


இந்த தகவலை படித்த, அந்நாட்டு மக்கள், சான்பிரான்சிஸ்கோவில் இருந்து எலாஸ் ஏஞ்சல்ஸ் வரை, கடற்கரை பகுதியைத் தோண்டி, பணத்தை தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்த தகவல் உண்மை தானா என்பதை உறுதி செய்யக் கூட தயாராக இல்லாமல், கடற்கரையை தோண்ட தொடங்கியதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ நீங்கள் பாதையை மாற்றியமையுங்கள், அல்லது எதிரியின் முற்றுகையை உடைத்துப் போய் வாருங்கள், எந்தக் காரணம் கொண்டும் வனவளத்தை அழிக்கக் கூடாது”







# புலிகளும் இயற்கையும்

பரணி

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதற் தற்கொடையாளன் சிவகுமாரன் நினைவாகத்தான் அவர் வீரச்சாவடைந்த ஜுன் 5 ஆம் திகதியை மாணவர் எழுச்சி நாளாக அறிவித்து கொண்டாடி வந்தார்கள் புலிகள்.

ஜுன் 5 என்பது உலக சுற்றுச்சூழல் தினம். மாணவர் தினத்தை அதே நாளில் கொண்டாடுவதால் சுற்றுச்சூழல் தினத்தின் முக்கியத்துவம் குறைந்து மக்களிடம் இயற்கை குறித்த விழிப்புணர்வு குறைகிறதே என்று உணர்ந்த தலைவர் பிரபா-கரன் பின்னர் ஜுன் 6 ஆம் திகதியை மாணவர் எழுச்சி தினமாக மாற்றி அறிவித்தார்.

இது சாதாரண விடயமல்ல. இயற்கையை நேசிக்கும் ஒரு தலைமைக்கே இது சாத்தியம்.

“இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி.” என்று தலைவர் தான் போராட்டம் ஆரம்பித்த காலத்திலேயே சொல்லியிருந்தார்.

அவர் முதல் கொடுத்த முக்கியத்துவம் இயற்கைக்கும் சுற்றுசூழலுக்கும்தான் என்பதற்கு இது ஒரு வரலாற்று ஆதாரம்.

புரிந்துணர்வு உடன்படிக்கை காலத்தில் மன்னார், புல்மோட்டை, காங்கேசன்துறை, உடபட பல தாயகப் பிரதேசங்களில் , இயற்கை வளங்களை கபளீகரம் செய்யும் நோக்கில் ஜப்பான் உட்பட பல நாடுகள் வியாபார ஒப்பந்தம் எழுத வந்தபோது மறுபேச்சுக்கிடமின்றி அதைத் தலைவர் பிரபாகரன் நிராகரித்தது பலருக்கு தெரியாது.

ஒருவேளை மண்ணுக்கு, இயற்கைக்கு குந்தகம் விளைவிக்கும் அந்த ஒப்பந்தங்களில் தலைவர் பிரபாகரன் கையெழுத்திட்டிருந்தால் மேற்குலகத்தின் பார்வையில் அவர் “பயங்கரவாதி” இல்லாமல் போயிருக்கலாம்..

இதைத்தான் இன்றைய நமது ஆய்வாளர்கள், “பிரபாகரனின் தவறு” என்று வாந்தி எடுக்கிறார்கள். இனத்தை மட்டுமல்ல, இயற்கையையும் மாற்றானிடம் அடைவு வைக்க முடியாது.

இது போராட்டத்துக்கு மட்டுமல்ல மனித வாழ்வின் இருப்பிற்கே முரணானது.

தலைவர் இப்படியெல்லாம் சிந்தித்தன் விளைவுதான், “ஒரு சிறிய இனத்தின் தலைவன் உலக முதலாளித்துவத்திற்கே வேட்டு வைக்கிறானே..” என்று ஒட்டு மொத்த உலகமும் சேர்ந்து போராட்டத்தை அழித்து முடித்தது.

தமிழ் தேசத்தின் வாழ்வு, அடையாளம், குறியீடாக இருப்பது தாயகத்தை சுற்றியுள்ள கடலும் தாயகத்தினுள் நிமிர்ந்து நிற்கும் பனைகளும்தான்..

இந்த பனைகளைத்தான் ஆரம்ப காலத்தில் பதுங்கு குழிகள் அமைக்க புலிகள் மட்டுமல்ல மக்களும் பாவித்தார்கள். ஒரு பனை தறிக்கப்படுவதென்பது ஒரு தமிழனின் வாழ்வாதாரம் நசுக்கப்டுவதற்கொப்பானது என்பதை புலிகளின் தலைவர் உணர்ந்து அதை மட்டுப் படுத்தியதோடு மட்டுமல்ல தறிக்கப்பட்ட பனைகளுக்கும் அதிகமாகத் தமிழர் தாயகமெங்கும் பனங்கன்றுகளை நட உத்தரவிட்டார். தமிழீழப்பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அதை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது.

இந்திய இராணுவ முற்றுகை உட்பட அதற்கு பின்னான இலங்கை அரசின் படையெடுப்பு காலங்களிலும் போராளிகள் வடக்குக்கும் கிழக்குக்கும் இலகுவாக சென்று வரவும் தமது காப்பரண்களை பாதுகாப்பாக அமைத்து கொள்ளவும் வனப்பகுதிக்கும் அங்கு வாழும் வன உயிர்களுக்கும் சேதம் விளைவிப்பதை அறிந்த புலிகளின் தலைவர் போராளிகளிடம் “ நீங்கள் பாதையை மாற்றியமையுங்கள். அல்லது எதிரியின் முற்றுகையை உடைத்துப் போய் வாருங்கள். எந்தக் காரணம் கொண்டும் வனவளத்தை அழிக்கக் கூடாது” என்று இறுக்கமாக கட்டளையிட்டதும் பலருக்கு தெரியாது.

விளைவாக போராளிகள் பெரும் ஆயுதத் தளபாட சுமைகளுடன் நீண்டதூரம் நடந்து பயணிக்க வேண்டியிருந்தது மட்டுமல்ல இதன் விளைவாகப் பல தருணங்களில் எதிரிகளை நேரடியாகச் சந்தித்து மோதி களப்பலியாக வேண்டியும் ஏற்பட்டது.

இன அழிப்பு நோக்கங்களுடன் பேரழிவு ஆயுதங்களுடன் படையெடுத்து தமிழர் தேசத்தை சுற்றி நின்ற பேரினப்படைகளை எதிர்கொண்டபடியே இயற்கையையும் சுற்றுச்சூழலையும் புலிகள் நேசித்த, பாதுகாத்த கதை இது.

ஆனால் மே 18 க்குபிறகு இன்று கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பின்ஒருபகுதியாக தமிழர் தேசத்தின் இயற்கை வளத்தை இலங்கை அரச இயந்திரம் அழித்து வருகின்றது. ஆனால்கேட்பதற்கு எந்த நாதியுமில்லை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6. வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ். 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 ஜுன் 11 ஆம் திகதி வெளியிடப்பட்டது.